1937
2649

ராவ் சாஹிப்

# வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G. B. V. C.

எண்பதாம் ஆண்டு நிறைவு விழா

# நினைவுமலர்

நிறைவு விழாக்கொண்டாட்டக் கூட்டத்தார்
வெளியிட்டது.

ராவ் சாஹிப்

# வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்

G. B. V. C.

எண்பதாம் ஆண்டு நிறைவு விழா

# நினைவுமலர்

நிறைவு விழாக்கொண்டாட்டக் கூட்டத்தார்
வெளியிட்டது.

திருநெல்வேலி இம்பீரியல் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

# முகவுரை

திருவாளர் வெள்ளகால் ராவ் ஸாஹிப் வே. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா, திருநெல்வேலியில் 1—8—37 ஞாயிற்றுக்கிழமை மாலை, மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தலைமையின்கீழ் சிறப்பாக நடந்தது, அன்பர்களுக்கு நினைவிருக்கலாம். அவ்விழா சம்பந்தமான அறிக்கைகள், அன்பர்களின் பாராட்டுரைகள், வரவு செலவு கணக்குகள் எல்லாவற்றையும் உடனே அச்சியற்றி வெளியிட விரும்பியும், எதிர்பாராத சில காரணங்களால் தாமதம் நேர்ந்துவிட்டது. அவ்விழாவின் நினைவு மலராக, இச்சிறுநூலை இப்போது பிரசுரிக்கின்றோம். அன்பர்கள் தாமதத்தை மன்னிக்க வேண்டுகின்றோம்.

விழாவிற்காக, அன்பர்கள் அளித்த நன்கொடைத் தொகையில், செலவானது போக, சற்றுக்குறைய ஓர் ஆயிரம் ரூபாய் மிச்சமிருக்கின்றது. அந்தத்தொகை, திருநெல்வேலி தென்னிந்திய பாங்கியில் போடப்பட்டிருக்கிறது. கொண்டாட்டக் கூட்டத்தார் தீர்மானித்திருக்கிறபடி, அந்தத் தொகையை, ஒரு நிரந்தரமான நிதியாக்கி, அந்த நிதியிலிருந்து கிடைக்கும் வருடாந்தர ஊதியம் (interest) நமது முதலியாரவர்கள் மாணவராயிருந்து பயின்ற (Alma mater) ம. தி. தா. திருநெல்வேலி இந்துகலாசாலையில் பயில்கின்ற மாணவர்களில், தமிழில் சிறந்த பாண்டித்தியம் அடைகிற ஒரு மாணவனுக்கு ஆண்டுதோறும் உதவப்படும். அவ்வுதவி முதலியாரவர்களின் பெயரால் ஒரு 'ஸ்காலர்ஷிப்' ஆகவோ அல்லது தங்கப் பதக்கமாகவோ அம்மாணவனுக்கு அளிக்கப்படும்.

முதலியாரவர்களின் விழாவிற்கு, திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் மகா சன்னிதானத்தின் பிரதிநிதியாக நேரில்வந்து கவுரவித்த கட்டளைத்தம்பிரான் சுவாமி

அவர்களே இன்று அம்மகா சன்னிதானத்தின் பீடத்தில் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சன்னிதியவர்கள் எனத் திருநாமம் தாங்கி அமர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் இந்நினைவு மலர் அச்சிடும் செலவுக்காக ரூபாய் நூறு கொடுத்து உதவியிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டும் பொருளுதவி செய்த அன்பர் அனைவர்க்கும் விழாவை நடத்திவைக்கும் பொறுப்பை ஏற்று முன்னின்று நடத்திய நண்பர்களான திரு. T. M. பாஸ்கரத்தொண்டைமான் B. A., வித்வான் P. K. அருணாசலக் கவுண்டர் அவர்களுக்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

இங்ஙனம்,

3—5—40 கொண்டாட்டக் கூட்டத்தார்.



ராவ் சாஹிப்

வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C.

எண்பதாம் ஆண்டு.

எண்பதாண் டான இளைஞனே! இன்னமுதின்

பண்பெலாங் காட்டுதமிழ்ப் பாவலனே! —நண்பனே!

வெள்ளகாற் செல்வனே! வேள் சுப் பிரமணிய

வள்ளலே! வாழ்க மகிழ்ந்து

— S. தேசிகவிநாயகம் பிள்ளை

புத்தேரி ~ நாகர்கோவில்



திவான் பகதூர்

**சர் S. குமாரசுவாமி ரெட்டியார் அவர்கள், K. T.**

கொண்டாட்டக் கூட்டத் தலைவர்.

திருவாளர் ராவ்சாஹிப்

# V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், G. B. V. C.

Dy. Superintendent, C. V. Dept. (Retired)

# எண்பதாம் ஆண்டு நிறைவு விழா

**1—8—1937**

---

**நிர்வாக சபையார்:**

போஷகர் (Patron)

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள்

*திருப்பனந்தாள் மடாலயம்*

---

**தலைவர்:**

திவான் பஹதூர், S. குமாரசாமி ரெட்டியார், B. A., B. L.

[ Ex-Minister to the Governor of Madras ]

---

**உபதலைவர்:**

T. சிவராமசேதுப் பிள்ளை, M. A., B. L.

[ Personal Assistant to the Auditor General, New Delhi ]

V. நாடிமுத்துப் பிள்ளை

[ President, West Tanjore District Board ]

T. C. ஸ்ரீனிவாச அய்யங்கார், B. A., B. L.

[ Vice President, Madura Tamil Sangam ]

ராவ் பஹதூர் I. C. ஈஸ்வரன் பிள்ளை

[ President, South Tinnevelly District Board ]

S. V. நல்லபெருமாள் பிள்ளை

( Mittadar, Tuticorin )

---

### அமைச்சர் :

ராவ் ஸாஹிப் P. ஆவுடையப்ப பிள்ளை, B. A., B. L.

[ Public Prosecutor, Tinnevelly ]

J. சக்கரபாணி நம்பியார், B. A., B. L.

[ Asst. Public Prosecutor, Tinnevelly ]

---

### பொக்கிஷதார் :

V. S. ஆறுமுகம் பிள்ளை

[ Agent, South India Bank, Ltd., Tinnevelly. ]

---

### அங்கத்தினர் :

T. S. ஸ்ரீனிவாச ராவ், B. A., B. L.

N. சங்கரநாராயண பிள்ளையன்

சாது கணபதி பந்துலு, B. A., B. L.

T. K. சிதம்பரநாத முதலியார், B. A., B. L.
(Ex-Commissioner, H. R. E. Board)

A. V. முத்தைய பிள்ளை
[ Circle Inspector of Police, Retired ]

T. M. கோமதிநாயகம் பிள்ளை

A. T. வீரபத்திர பிள்ளை

வித்வான் P. K. அருணாசலக் கவுண்டர்

## முதல் அறிக்கை

அன்புள்ள ஐயா,

வெள்ளகால், திருவாளர் ராவ் ஸாஹிப் V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் *நம் தமிழ் நாட்டில் கல்வி, அறிவு, ஒழுக்கங் களில் சிறந்தவர்கள். பழுத்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர்கள். சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்த் தாய்க்கு அருந் தொண்டு புரிந்தவர்கள்.* இப் பெரியாரின் எண்பதாம் ஆண்டு 1937-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் முதல் தேய்தி ஞாயிற்றுக்கிழமை *யன்று நிறைவுறுகின்றது. அந்நாளை ஒரு விழாவாகக் கொண்டாட வேண்டுவது தமிழ் மக்கள் கடனாகும். அவ் விழாவைத் தக்க முறையில் கொண்டாடுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யும்பொருட்டு* மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்து கலாசாலையில் 21–6–37 திங்கட்கிழமை மாலை 5–30 மணிக்கு ஒரு *பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் தங்கள் வரவை அன்புடன் எதிர் பார்க்கிறோம்.*

*தங்கள் அன்புள்ள,*

(சர்) S. குமாரசாமி ரெட்டியார்
சாதுகணபதி பந்துலு
அலெக்சாண்டர் ஞானமுத்து
மேடை தளவாய் குமாரசாமி முதலியார்
வா. மு. சே. மு. முகம்மது முஸ்தபா ராவுத்தர்
சாவடி கூத்தநயினர் பிள்ளை
A. V. முத்தைய பிள்ளை
(ராவ் ஸாஹிப்) P. ஆவுடையப்ப பிள்ளை
J. சக்கரபாணி நம்பியார்
R. P. சேதுப் பிள்ளை
வ. திருவரங்கம் பிள்ளை
வித்வான் P. K. அருணாசலக் கவுண்டர்
T. M. பாஸ்கரத் தொண்டைமான்

திருநெல்வேலி
18—6—37

**நிர்வாக சபையின் அறிக்கை:**

அன்பார்ந்த ஐயா,

வெள்ளகால், திருவாளர் ராவ் சாஹிப் V. P. **சுப்பிரமணிய முதலியார்**, G. B. V. C., (Retired Dy. Superintendent of the Civil Veterinary Dept.) அவர்களுக்கு 1937-ம் ஸ்ரீ ஆகஸ்டுமீ 1-வ ஞாயிற்றுக்கிழமை எண்பதாம் ஆண்டு பூர்த்தியாகின்றது.

திரு. முதலியார் அவர்கள் நம் தமிழ் நாட்டில் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்தவர்கள். பழுத்த தமிழ்ப்புலமை வாய்ந்தவர்கள். சென்ற ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ்த்தாய்க்கு அருந்தொண்டு புரிந்தவர்கள். அவர்கள் அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்து பென்ஷன் பெற்றவர்களாயினும், தமிழ் நூல்களை ஆராய்வதையும் தமிழ்க் கவிகள் இயற்றுவதையும் அவகாசமாகக் கொண்டவர்கள். அவர்கள் புதிய நூல்கள் பல எழுதி, தமிழ் மொழியும், தமிழ் இலக்கியமும் அபிவிருத்தியடையும்படி செய்திருக்கிறார்கள். ஆங்கிலக் கவியான மில்டன் எழுதிய சுவர்க்க நீக்கம் (Paradise Lost) என்னும் அரிய நூலைத் தமிழில் விருத்தப்பாவில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். கம்பராமாயணத்திலுள்ள இனிய கவிகளைத் திரட்டி அவைகளுக்கு விளக்கவுரை முதலியன எழுதி, கம்பராமாயண சாரம் என்று புத்தக வடிவில் வெளியிட்டு, தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் பெரியதொரு பணியியற்றிவருகிறார்கள். இன்னும் அவர்கள் நெல்லைச் சிலேடை வெண்பா, கோம்பி விருத்தம், அகலிகை வெண்பா முதலிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களும் தமிழ் மொழிப்பற்றுள்ள மற்றவர்களும், இத்தமிழ்ப் பெரியாரின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி, முதலியார் அவர்களிடம் தமக்குள்ள நன்றியறிவைப் புலப்படுத்தவும், தமிழ்த் தாய்க்கு அவர்கள் செய்துள்ள அருந்தொண்டைப் பாராட்டவும் விரும்புவார்கள் என்பது திண்ணம். ஆதலால், அவர்களது எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கீழ்க்கண்ட முறையில் நடத்த எண்ணியிருக்கிறோம்.

(i) திருநெல்வேலியில், பெரியார் ஒருவர் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டி, அக்கூட்டத்தில் முதலியார் அவர்களுக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தல்.

(ii) விழாவிற்குரிய பெரியாரை நன்கு அறிந்தவர்களைக் கொண்டும், அவர்களோடு பழகியும், அவர்களது நூல்களைப் படித்தும், குணாதிசயங்களை அறிந்து அனுபவித்துமுள்ளவர்களைக் கொண்டும், கட்டுரைகள் எழுதச்செய்து அவைகளை அப்பெரியாரின் வாழ்க்கை வரலாற்றோடு, எண்பதாம் ஆண்டு நிறைவு விழா மலர் ஒன்று வெளியிடுதல்.

(iii) அப்பெரியாரது பெயர், தமிழ் நாட்டில் என்றும் நின்று நிலைபெறும்படி இவ்விழாவில் வசூலிக்கும் பணத்தை (சுமார் ரூ. 3000 வரை) ஒரு தமிழ்ப் பணிக்குச் செலவு செய்தல்.

அந்த விழாவிலே, தாங்களும் கலந்துகொள்ள விரும்புகின்றோம். இவ்விழா சம்பந்தமான தங்கள் கருத்தைத் தெரிவிப்பதோடு, தங்களாலியன்ற பொருளுதவி செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

பணம் அனுப்ப விரும்புவோர், திருநெல்வேலி, தென்னிந்தியா ப்பாங்க் ஏஜண்ட், திருவாளர் V. S. ஆறுமுகம் பிள்ளை அவர்களுக்கு அனுப்பலாம்.

இப்படிக்கு,

S. குமாரசாமி ரெட்டியார்
— தலைவர்

P. ஆவுடையப்ப பிள்ளை
J. சக்கரபாணி நம்பியார்
— அமைச்சர்

திருநெல்வேலி
1—7—37

V. S. ஆறுமுகம் பிள்ளை
— பொக்கிஷதார்

**பத்திரிகையில் வந்த அறிக்கை:**

இந்தியாவின் தேசியத் தலைவர் லோகமான்ய திலகரை நாம் பாராட்டும் தினமும், தமிழுக்காக மிகுந்த சேவை செய்த ஸ்ரீ சுப்பிரமணிய முதலியார் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா தினமும், ஒரே நாளில் வருவது விசேஷமானது. பாஷை வளர்ச்சியில்லாமல் தேசியம் வளர முடியாது. பாஷை செழிப்புறாவிட்டால் தன்னம்பிக்கையும், தன் மதிப்பும் தோன்ற முடியாது. தமிழ் மொழிக்காக உழைத்த பெரியார்களில் ராவ் சாஹிப் வே.ப.சுப்பிரமணிய முதலியார் ஒருவர். எண்பது வயதாகி யுங்கூட இன்னும் தமிழ் மொழிக்காக அவர் பாடுபட்டு வருகிறார். கம்பராமாயண சாரம் என்ற பெயரால் அவர் வெளியிட்டுவரும் தொகுதிகளைப் பார்த்தவர்கள், முதலியாரவர்களின் தமிழ்ப் புலமையையும், ரஸிக உணர்ச்சியையும் தெளிவாய் அறிந்து கொள்ளலாம். ஸ்ரீ முதலியார் அவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழா நாளையன்று திருநெல்வேலியில் மிகச் சிறப்பாய் நடைபெறப்போவதைக் கண்டு நாம் சந்தோஷமடைகிறோம். இந்த விழாவிற்கு, மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யரவர்கள் தலைமை வகிக்கப்போவது, நமது சந்தோஷத்தை இன்னும் அதிக மாக்குகிறது. இந்த சந்தர்ப்பத்தில், ஸ்ரீ முதலியாரவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த சிறந்த தொண்டிற்காக தமிழரின் சார் பாக அவரை வாழ்த்துகிறோம். இன்னும் அவர் சேவைசெய்ய வும், தமிழ் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வுறவும் பல்லாண்டுகள் அவர் திடகாத்திரராய் ஜீவித்திருக்கும்படி பரம்பொருளைப் பிரார்த்திக் கிறோம்.

— தினமணி : 31—7—37



மகா மகோபாத்தியாய

திராவிட வித்தியா பூஷணம் தாக்ஷிணாத்திய கலாநிதி

**டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்**

விழாத் தலைவர்.

# விழாக் கொண்டாட்டம்
## 1—8—37

<u>பத்திரிகைச் செய்தி</u>

### ஆரம்பம் :

திருவாளர் ராவ் ஸாஹிப் வே. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் 80-வது ஆண்டு நிறைவு விழா நேற்று வெகு குதூஹலமாகவும், உற்சாகத்துடனும், விமரிசையாயும் நெல்லை ஹிந்து கலாசாலையில் நடந்தது. ஜில்லாவிலுள்ள பல தமிழ் அறிஞர்களும் தமிழ்ப் பற்றுள்ளவர்களும் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

முதலில் புகைப்பட மெடுக்கப்பட்டது. மேளதாளத்துடன் ஸ்ரீ முதலியார் வரவேற்புக் கமிட்டியாரால் வரவேற்கப்பட்டு ஹாலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஸ்ரீ T. C. தீத்தாரப்பன் பி. ஏ. கடவுள் வணக்கப் பாட்டுகளை இனிமையாகப் பாடினார். ஸ்ரீ T. K. சிதம்பரநாத முதலியாரவர்களால் பிரரேபிக்கப்பட்டு, நெல்லை சர்க்கார் வக்கீல், ராவ்ஸாஹிப் P. ஆவுடையப்ப பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டு, மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் இவ்விழாக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள்.

முன்னுரையில் தலைவர் தம்மை இத்தகைய சிறந்த விழாவிற்கு அழைத்ததற்காக வந்தனங் கூறி, ஸ்ரீ சுப்பிரமணிய முதலியார், தமிழ், இங்கிலீஷ் இரண்டிலும் விசேஷ பாண்டித்யம் பெற்றவரென்றும், தமிழுக்கு அவர் செய்திருக்கும் தொண்டு மிகவும் உன்னதமானதென்றும், கம்பராமாயண சாரம் முதலிய பல புஸ்தகங்களை இயற்றி வெளியிட்டிருக்கிறாரென்றும், சிறந்த கவியென்றும், உத்தமமான குணங்களையுடையவரென்றும், பெரிய அறிஞரென்றும், வயோதிகராக விருந்தும் சதா கல்வியிலும் ஆராய்ச்சியிலும் யௌவனர்களைப்போல் சுறுசுறுப்பாய் உழைப்பவரென்றும் கூறினார்.

## திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானத்தின் சம்மானம் :

திருவாவடுதுறை, ஸ்ரீலஸ்ரீ பண்டார சன்னதி, இவ்விழாவுக்கு, விசேஷமாக, தன் ஸ்ரீலஸ்ரீ கட்டளைத் தம்பிரான் சுவாமியவர்களை அனுப்பியிருந்தார்கள். அவர்கள் மடத்திலிருந்து, இவ்விழாவுக்கு ரூ. 300 பண முடிப்பும்கொடுத்து ஸ்ரீ முதலியாருக்கு வெகு விலை உயர்ந்ததும் அழகான சித்திர வேலைப்பாடுள்ளதுமான, பட்டு ஜரிகை சால்வையையும் அளித்தார்கள்.

## மற்ற நிகழ்ச்சிகள் :

ஸ்ரீ வானவாமலை மடம் ஆஸ்தான வித்வான் தென்திருப் பேரை அபிநவகாளமேகம் ஸ்ரீ அனந்தகிருஷ்ணய்யங்கார், ஸ்ரீ முதலியாருடைய கவிதா சக்தியைப்பற்றியும், கலை ஞானத்தைப்பற்றியும், ஆராய்ச்சியைப்பற்றியும், நூல்களைப்பற்றியும் புகழ்ந்து வாழ்த்துப்பா பாடிக்கொடுத்தார்.

ஸ்ரீ முதலியாரின் 80-வது ஆண்டு விழாவில் அவரைப் பாராட்டி, அவர் நீடூழி வாழவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து பல சங்கங்களால் சுமார் 80 உபசாரப் பத்திரங்கள் படித்துக் கொடுக்கப்பட்டன.

வரவேற்புக் கமிட்டியாரால் கொடுக்கப்பட்ட உபசாரப்பத்திரம் ராவ்ஸாஹிப் பி. ஆவுடையப்ப பிள்ளையால் படிக்கப்பட்டு ஒரு அழகிய சித்திர வேலைப்பாடுள்ள வெள்ளிப்பேழையில் வைத்துக் கொடுக்கப்பட்டது.

தமிழுக்கு ஸ்ரீ முதலியார் செய்துவரும் தொண்டைப்பற்றியும், அவருடைய கவித்திறமையைப்பற்றியும், குணாதிசயங்களைப் பற்றியும், புகழ்ந்து, மாஜி மந்திரி; தூத்துக்குடி வக்கீல் சங்கத் தலைவர், ஸ்ரீ ஏ. ஸி. பால் நாடார்; அட்வகேட், ஸ்ரீ வி. வி. ஸ்ரீனிவாசாச்சாரி; சென்னை, சர்வகலாசாலைத் தமிழ் ஆசிரியர், ஸ்ரீ ஆர். பி. சேதுப் பிள்ளை; கிராமாந்திர சுகாதார உத்தியோகஸ்தர் ஸ்ரீ வி. எஸ். நடராஜ அய்யர் முதலியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

சர். S. குமாரசாமி ரெட்டியாரும், ஸ்ரீ ஆர். பி. சேதுப் பிள்ளையும், சென்னை சர்வகலாசாலையார் ஸ்ரீ முதலியாருக்கு டி. லிட். என்னும் பட்டத்தைக் கொடுக்கவேண்டுமென்று பொதுஜனங்க

ளிடையே பலத்த அபிப்பிராய மிருக்கிறதென்றும், அந்த ஆசையை சர்வகலாசாலையார் பூர்த்திசெய்வார்களென்று எதிர்பார்ப்பதாகவும் சொன்னார்கள்.

## மறுமொழி :

திரு முதலியார், மறுமொழியில் தன்னை இவ்வளவு விசேஷமாக உபசரித்து, தம்மையும் தம் நூல்களையும் புகழ்ந்ததற்காக வரவேற்புக் கமிட்டியாருக்கும், மற்ற கனவான்களுக்கும் வந்தனமளிப்பதாகவும், அதிலும் இன்று தலைமை வகித்த உ. வே. சாமிநாதய்யருக்கு விசேஷ நன்றி செலுத்துவதாகவும், இவ்விழாவிற்கு மாகூமை தங்கிய 6-ம் ஜியார்ஜ் சக்கரவர்த்தி தலைமை வகித்திருந்தாலுங்கூட ஸ்ரீ அய்யரவர்கள் தலைமை வகித்த மாதிரி தமக்கு அவ்வளவு சந்தோஷ மேற்பட்டிராதென்று உண்மையாகவும், மனப்பூர்வமாகவும் கருதுவதாகவும், தம் "கம்பராமாயண சாரம்" புத்தகத்தைப் பிரசுரம் செய்ய உதவியளித்த ஸ்ரீலஸ்ரீ திருப்பனந்தாள் பண்டார சன்னதிக்கு வந்தனமளிப்பதாகவும், இவ்விழாவில் தமக்கு சால்வை, பணமுடிப்பு முதலியவைகளைக் கொடுத்த ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுரை பண்டார சன்னதிக்கு வந்தனமளிப்பதாகவும், அதைக்கொண்டுவந்த ஸ்ரீலஸ்ரீ கட்டளைத் தம்பிரான் சுவாமிகளுக்கு வந்தனமளிப்பதாகவும், ஏதோ தாம் செய்யும் சிறு தொண்டை இவ்வளவு ஆடம்பரமாய் விழாக் கொண்டாடியதற்காக எல்லோருக்கும் வந்தனமளிப்பதாகவும் கூறினார்.

## முடிவுரை :

முடிவுரையில் ஸ்ரீ அய்யர் தான் இன்று விழாவுக்கு வந்ததைப்பற்றி மிகவும் சந்தோஷித்து, ஸ்ரீ முதலியார் மகா கவியென்றும், பெரிய வித்வான் என்றும், எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும், திடகாத்திரத்தையும் கொடுக்கும்படி பிரார்த்திப்பதாகவும் சொன்னார்.

வரவேற்புக் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ ஜே. சக்கரபாணி நம்பியார் எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூறினார். இரவு 9-மணிக்கு விழா சிறப்புற முடிந்தது. எல்லோருக்கும் மாலைகள் சூட்டப்பட்டன.

இரவு நேர்த்தியான விருந்து நடந்தது.

— தினமணி 4—8—37.

A large and distinguished gathering of Tamil Scholars and lovers of Tamil assembled this evening at the Hindu College Hall to participate in the celebration of the 81st birthday of Rao Sahib V. P. Subramania Mudaliar, the well-known Tamil Poet and Scholar.

Mr. T. K. Chidambaranatha Mudaliar proposed Mahamahopadhyaya Dr.V. Swaminatha Ayyar to the chair and Rao Sahib P. Avudaiappa Pillai, Public Prosecutor. seconded the motion which was carried.

A prayer song was sung by Mr. T. C. Theetharappan.

Dr. V. Swaminatha Ayyar, in his opening speech, said that his distinguished friend Mr. V. P. Subramania Mudaliar had grown grey in the cause of revival of Tamil learning and culture. Mr. Mudaliar was a scholar of rare merit and a poet of no mean order.

The Kattalai Thambiran of the Thiruvavadudurai Mutt who represented His Holiness the Pandarasannadhi, honoured Mr. Mudaliar by presenting him with a gorgeous shawl and also handed over a sum of Rs. 300 to the Celebration Committee.

Addresses were then presented to Mr. Mudaliar. The Reception Committee's address was read by its Secretary, Mr. P. Avudaiappa Pillai and was enclosed in an ornamental silver casket. Other addresses presented were on behalf of the Tamil Literary Society, Vannarpet; Kamban Kazhagam, Tuticorin; the Students' Association of the Hindu College and the South Indian Tamil Sangam.

Vidwan P. K. Arunachala Gounder then read a large number of messages and congratulatory poems from several scholars and associations from all over the Tamil Nad. The Hon. Mr. C. Rajagopalachari, Prime Minister had also sent a message.

Brahmasri Abinava Kalamegam Ananthakrishna Iyengar, a Tamil poet of Thenthirupperai, read some verses which he had composed for the occasion.

Sir S. Kumarasami Reddiar, addressing the gathering, said that the most distinguishing feature about Mr. Subramania Mudaliar was his life-long devotion to Tamil studies and his unbounded enthusiasm in the cause of Tamil learning. His life was one of dedication to the cause of Tamil and had lessons which every Tamilian should study. The speaker pointed out that though Mr. Mudaliar had been sufficiently honoured by the public, yet there was a feeling that the Madras University should confer on him some mark of distinction in honour of this occasion. The speaker had no doubt that the University authorities would suitably recognise Mr. Mudaliar's services to Tamil learning.

Messers Sadhu Ganapati Pantulu, A. C. Paul Nadar of Tuticorin, V. V. Srinivasachari, Prof. A. Srinivasa Raghavan, R. P. Sethu Pillai and V. S. Nataraja Ayyar spoke referring to the various aspects of Mr. Mudaliar's greatness and achievements as a scholar.

Mr. V. P. Subramania Mudaliar, replying, said that he was overwhelmed by the honour and kindness shown to him. The real truth was that Tamil studies gave him pleasure and he had pursued them all through life. He expressed his gratitude to Dr. Swaminatha Ayyar for having come to preside over the function. His presence on the chair was the greatest honour that could be paid to him (the speaker.)

The President winding up the proceedings, again paid a tribute to the literary eminence of Mr. Mudaliar. He said that he was glad that the time, when the people connected with Tamil Studies and learning were looked down upon was passing and Tamilians were now begining to feel proud of their mother tongue.

Mr. J. Chakrapani Nambiar proposed a vote of thanks.

— The Hindu; 3—8—37

தமிழ் அறிஞரான திருவாளர் வெ.ப. சுப்பிரமணிய முதலியாரவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவுவிழாவை இன்று திருநெல்வேலியில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். திருவாளர் முதலியார் மிருக வைத்திய இலாகாவில் பெரிய உத்தியோகம் வகித்து ஒய்வு பெற்றவர். சென்ற பல ஆண்டுகளாகத் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தமிழ்ப்பணி செய்துவருகிறார். அவர் எழுதிய நூல்கள் பல. அகலிகை வெண்பா என்ற செய்யுள் நூலும், கம்பராமாயண ஆராய்ச்சியும் புலவர்களுக்கு விருந்தாய் அமைந்துள்ளன. முதலியாரவர்கள் எண்பதாண்டு நிறைவு விழாவுக்கு, எண்பத்து மூன்று ஆண்டு சென்ற தமிழ்க் கிழவரான மகா மகோபாத்தியாய சுவாமிநாத ஐயர் அவர்கள் தலைமை வகிப்பது பெரிதும் பொருத்தமானது. திருவாளர் முதலியார் அவர்கள் எல்லா நலங்களும் பெற்று இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்ப்பணி செய்யுமாறு ஆண்டவனை வேண்டுகிறோம்.

— லோகோபகாரி : 1—8—37

---

1—8—'37 ஞாயிறன்று நெல்லையில் மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியில் உயர்திரு ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எண்பதாவது ஆண்டு விழா மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாய்க் கொண்டாடப்பெற்றது. சர். S. குமாரசாமி ரெட்டியார், ராவ்ஸாஹிப் P. ஆவுடையப்ப பிள்ளை, தூத்துக்குடி, A. C. பால் நாடார் பி. ஏ., பி. எல்., R. P. சேதுப் பிள்ளை பி. ஏ., பி. எல்., வி. வி. ஸ்ரீனிவாசாச்சாரி, வி.எஸ்.நடராஜ அய்யர், T.K.சிதம்பரநாத முதலியார் பி.ஏ.,பி.எல்., M. V. நெல்லையப்ப பிள்ளை பி. ஏ., ஆகிய அறிஞர்களும் தமிழ் வித்வான்களும், பிற அன்பர்களும் விழாவுக்கு வந்திருந்தனர்.

திருவாவடுதுறை மகா சன்னிதானமவர்கள் தம் கட்டளைத் தம்பிரான் வழி ரூ. 300 கொண்ட பண முடிப்பும், சால்வை ஒன்றும் பரிசாக அனுப்பிவைத்தனர்.

விழாத் தலைவரவர்கள் தமது முன்னுரையில், உயர்திரு.வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும்

முதுபுலமை உடையவர்களென்றும், தமிழன்னைக்கு அவர்கள் செய்திருக்கிற தொண்டு மிகவும் பாராட்டுதற்குரியதென்றும் அகலிகை வெண்பா, நெல்லைச் சிலேடை வெண்பா, கோம்பி விருத்தம் முதலிய செய்யுள் நூல்கள் யாத்திருப்பதோடு கம்ப ராமாயண சாரம் உரை, கல்வி விளக்கம் முதலிய நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்களென்றும், நல்லியல்பு, நல்லொழுக்கங்களிற் சிறந்தவரென்றும், இளைஞர்களைவிட சுறுசுறுப்புடையவர்களென்றும் சிறந்து கூறினார்கள்.

பின்னர் வரவேற்புக் கமிட்டியாரால் வாழ்த்து இதழ் படித்து வெள்ளிப் பேழையில் வைத்து திரு. முதலியாரவர்கட்கு அளிக்கப்பட்டது. அதன் பின் பல சங்கங்கள் வாழ்த்துத் தாள்கள் படித்து அளித்தன. திரு. S. குமாரசாமி ரெட்டியாரவர்களும், திரு. R. P. சேதுப் பிள்ளையவர்களும் முதலியாரவர்கட்கு டி. லிட். (D. Litt.) என்னும் பட்டத்தை வழங்கும்படி சென்னைப் பல்கலைகழகத்தாரைக் கேட்டுக்கொள்வதாக ஆர்வத்தோடு பேசினார்கள்.

உயர்திரு. முதலியாரவர்கள் தமக்கு இத்தனை சிறப்புக்கள் செய்தமைக்காக வரவேற்புக் கமிட்டியாருக்கும், ஆண்டு முதிர்ச்சியைப் பொருட்படுத்தாமல் நெடுந்தொலைவு வந்து தலைவராய் அமர்ந்து சிறப்புச் செய்த டாக்டர் ஐயரவர்கட்கும், திருவாவடுதுறை திருப்பனந்தாள் மடாதிபதிகட்கும் நன்றி கூறுவதாகச் சொன்னார்கள்.

பின்பு தலைவரவர்கள் முடிப்புரையோடு கூட்டம் இனிது முடிந்தது.

— 'செந்தமிழ்ச் செல்வி', (ஆகஸ்ட் 37.)

---

*Extract from the Notes of "The Indian "P. E. N." Dated I—10—37 Edited by Sri Sophia Wadia from Bombay.*

The well known Tamil Poet and Scholar Rao Sahib V. P. Subramania Mudaliar, was honoured on his eighty-first Birthday at a large gathering at the Hindu College Hall,

Tinnevelly, on the 1st August. MAHAMAHOPADYAYA DR. V. SWAMINATHA AYYAR presided. Among organisations participating were the Tamil Literary Society Vannarpet, and the South Indian Tamil Sangam. Several speakers paid tribute to RAO SAHIB V.P. SUBRAMANIA MUDALIAR's life-long devotion to Tamil studies.

---

## வாழ்த்துச் செய்திகள் :

*Greetings Telegram Dated 31—7—37 from His Holiness Kasivasi Saminatha Thambiran Swamigal of Kasi Mutt, Thiruppanandal.*

To

DEWAN BAHADUR SIR. KUMARASAMI REDDIAR,

President to Rao Sahib V. P. Subramania Mudaliar Avergal's Eightieth Birthday Celebration Committee, Tinnevelly.

Our hearty greetings to Rao Sahib V. P. Subramania Mudaliar Avergal whose eightieth birthday celebration is presided over by well deserved Dr. V. Saminatha Ayyar Avergal. We wish the Mudaliar, Tamil Scholar and Poet, many more years of useful life and contribution to Tamil Literature, the quintessence is contained in his latest work Kambaramayana Saram.

(Sd) Kasi Vasi Saminatha Thambiran,
Thirupanandal.

---

உயர் திருவாளர் ராவ் ஸாஹிப் V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா நடைபெறப் போகிறதென்னும் செய்தியைக் கேட்டு நாங்கள் பெரிதுங் களிப்புறுகின்றோம். முதலியாரவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த பேருதவியை நினைக்கும்போது எங்கள் உளத்தில் இன்பம்

பெருகுகின்றது. கைம்மாறு கருதாது தமிழுக்குழைத்த தனிப் பெருமை முதலியாரவர்கட்கே உரியது. இன்று தமிழ் நாட்டில் இருக்கும் தமிழ்ப் பெரும் புலவர்களில் முதலியாரவர்கள் தனிச் சிறப்புப் பெற்றவர்களென்பது மிகையாகாது. இத்தமிழ்த் திருமகனார் இன்னும் பல்லாண்டு இவ்வுலகிடை இருந்து, தமிழுக்குழைக்குமாறு அருள் செய்யும்படி எல்லாம்வல்ல இறைவனைத் துதிக்கின்றோம்.

சென்னைப் பண்டித சங்கத்தார்

---

1—8—37-ந் தேதியன்று திருக்குற்றாலநாத சுவாமி தேவஸ்தானம் வாசகசாலையின் சார்பில் கூடிய கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானம், திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L. அவர்களால் பிரரேபிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

## தீர்மானம் :

"ராவ் ஸாஹேப் உயர்திரு வெ. ப. சுப்பிரமணிய முதலியார் (G. B. V. C. Retired Veterinary Superintendent) அவர்கள் எண்பதாண்டு வாழ்ந்து, தாய்மொழிக்கு அரிய நூல்கள் பல வியற்றியும், தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும், பிறவாற்றாலும் செய்துவரும் பேருதவிக்காக நன்றி பகர்வதுடன் அவர்கள் நீடூழி காலம் நோயற்ற வாழ்வும் குறைவில்லா ஊக்கமும் பல்வளனும் பொருந்தி இனிது நிலவி மேன்மேலும் தமது அரிய பெரிய தொண்டில் தழைத்தோங்கும்வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வழுத்துவோமாக."

---

1—8—37-ந் தேதியன்று, தென்காசி, திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் கூடிய பொதுக்கூட்டத்தில், திருவாளர் வேலாயுதம் பிள்ளை அவர்களால் அடியிற்கண்ட தீர்மானம் பிரரேபிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

## தீர்மானம் :

"நம் தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வரும், கல்வி, அறிவு ஒழுக்கங்களில் சிறந்தும், பழுத்த தமிழ்ப்புலமை வாய்ந்து, சென்ற அறுபது ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கு அரும்பணியாக உயரிய

*நூல்கள் பல இயற்றியும், உரை நூல்கள் வெளியிட்டும் அருந்தொண்டாற்றி வருபவர்களான* வேள்ளகால், உயர் திருவாளர் வே. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் *எண்பதாவது* ஆண்டு *நிறைவு விழாவாகிய இன்று இக்கழகத்தார் மேற்குறித்த தமிழ்த் தலைவரவர்களிடம் தங்களுக்குள்ள நன்றியறிவைத் தெரிவித்துத் தமிழன்னைக்கு அவர்கள் ஆற்றிவரும் பெரும்பணிக்கு மிகவும் பாராட்டுகிறார்கள். தாய்ப்பணி செய்யக் குன்றா ஊக்கத்துடன் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் வழங்கவேணுமாய்ப் பிரார்த்திக்கிறார்கள்".*

---

## வாழ்த்துச் செய்தி அனுப்பிய சங்கங்கள் :

*சென்னை, வேதாந்த சங்கம்*

*சென்னைப் பண்டித சங்கம்*

*மேலச்சிவபுரி, சன்மார்க்க சபை*

*கோவைத் தமிழ்ச் சங்கம்*

*குளித்தலை, கம்பர் செந்தமிழ்ச் சங்கம்*

*திருக்குற்றாலநாத சுவாமி தேவஸ்தான வாசகசாலை*

*தென்காசி, திருவள்ளுவர் கழகம்*

*சென்னை, வெற்றினெரி* (Veterinary) *சங்கத்தார்*

---

## வாழ்த்துச் செய்தி அனுப்பிய பெரியார்கள் :

*திருவாவடுதுறை,*
மகா சன்னிதானம் பண்டாரச் சன்னிதியவர்கள்.

*தருமபுரம்,*
மகா சன்னிதானம் பண்டாரச் சன்னிதியவர்கள்.

*திருப்பனந்தாள்,*
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

*சென்னை மாகாண பிரதம மந்திரி,*
கனம் சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார் அவர்கள்.

*சென்னை மாகாண மாஜி மந்திரி :*
S. முத்தைய முதலியார் அவர்கள்.

மகாமகோபாத்தியாய, M. V. ராமானுஜாச்சாரியார் அவர்கள்,
*கும்பகோணம்.*

*திருவாளர்* பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்,
*அண்ணாமலைநகர்.*

,, மகா வித்வான், ரா. ராகவையங்கார் அவர்கள்,
*அண்ணாமலைநகர்.*

,, T. C. ஸ்ரீனிவாசையங்காரவர்கள், B.A.,B.L , *மதுரை.*

,, S. வையாபுரிப் பிள்ளையவர்கள், B. A., B. L , *சென்னை.*

,, S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B.A.,L.T., ,,

,, P. N. அப்புசாமி அய்யரவர்கள், B A., B. L., ,,

,, V. C. வெள்ளியங்கிரி கவுண்டரவர்கள், *கோயம்புத்தூர்.*

,, T. A. சுப்பையா பிள்ளையவர்கள், B. A., B. L.,
*சப் ஜட்ஜ், மதுரை.*

,, V. T. பழனியப்ப முதலியாரவர்கள், B. A., B. L.,
*சப் ஜட்ஜ், திருவாரூர்.*

,, ராஜூ முதலியாரவர்கள், *சென்னை.*

*[மற்ற அன்பர்கள் அனுப்பிய வாழ்த்துப்பாக்களும் செய்திகளும், பின்னர் பிரசுரிக்கப்பட்டுள்ளன.]*

# விழாவன்று வாசித்துக்கொடுக்கப்பட்ட உபசாரப் பத்திரங்களும் வாழ்த்துப்பாக்களும்

## தமிழ் நாட்டுத் தமிழ் அன்பர்கள் (விழாக் கொண்டாட்டக் கூட்டத்தார்) அளித்தது

அன்புள்ள ஐயா!

கல்வியில் மேம்பட்டுக், கவிதையில் தேர்ந்து, புலமையில் முதிர்ந்து, இலக்கியந்தரும் இன்பத்தில் திளைத்து, சென்ற அறுப தாண்டுகளாகவே இலக்கியத் தொண்டில் பேரார்வத்துடன் ஈடு பட்டு வாழும் தமிழ்ப் பெரியீர்! தங்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தில், தமிழ் மக்கள் சார்பாக எங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளு கிறோம்.

புலவர்களைப் போற்றிப் பேணி அவர்களை ஆதரிப்பது தமிழ ருக்குத் தெரியாத பணியல்ல. பண்டைக் காலத்தில் இத்தொண்டு செய்த அரசர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் ஆகிய இவர்கள்தம் மரபு, காலவேறுபாட்டின் தன்மையால் மறைந்து கொண்டே வருவதால் தற்பொழுது இக்கடமை பொதுமக்களின் பொறுப்பாகிவிட்டது.

மனோபாவ வறுமையோடு, பொருளும் வறண்டுபோன தற் காலப் புலமை வனத்தில் அடர்ந்திருண்ட புதர்களே காணப்படு கின்றன. இவ்வனத்தில் தளரா ஊக்கம் உடைய தாங்கள் செடி களைந்து, நிலந் திருத்தி, உணர்வுநீர்ப் பாய்ச்சித், தமிழ்ப் பூஞ் சோலையை வளர்த்து வைத்தீர்கள். அது எங்களுக்கு இளைப்பா றும் இடமாயிற்று.

ஆண்டு பலவாகியும் இளமைக்குரிய உணர்ச்சி மிகுதியும், ஆர்வப் பெருக்கும், அளவிலா இலக்கியச் சுவை இயல்பும் தாங்கள் பெற்றிருப்பதை வியக்காமலிருக்க முடியாது. தங்களுடைய

உத்தியோக இயலுக்கு வேண்டுதலில்லாத இலக்கியத் தொண்டைப் பேரவாவுடன் கைக்கொண்டு, அதனால் விளையும் இன்பத்தையும், அறிவையும் பருகிக்கொண்டிருத்தலே போதுமென்றிருக்கும் தங்களை அருங்கலைச் செல்வர் யாவரும் போற்றுவார்கள். தமிழர் மறந்தாலும் தங்களைத் தமிழ் மறவாது.

தமிழர்கள் தங்களுடைய இலக்கியச் செல்வத்தையும் கலை வளத்தையும் போற்றப் புகுந்துவிட்டார்கள் என்பதற்கும், அவர்களிடம் தோன்றியிருக்கும் தேசிய உணர்ச்சி பாய்ந்து பரவுகிறது என்பதற்கும் இன்று நடக்கும் விழாவே போதிய சான்று.

இன்னும் மிகுந்த தமிழ்த்தொண்டு செய்வதற்கு, நீண்ட ஆயுளையும், உடல் வலிமையையும் தங்களுக்கு அருளுமாறு இறைவனை வேண்டுகிறோம்.

---

## திருநெல்வேலித் தமிழ் இலக்கியச் சங்கத்தார் சமர்ப்பித்தது.

அன்புள்ள ஐயா!

திருநெல்வேலித் தமிழ் இலக்கியச் சங்கத்தாராகிய நாங்கள் தமிழ் அன்பர்கள் சேர்ந்து இன்று கொண்டாடும், தங்கள் எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்ளவும், எங்களுடைய நன்றியைத் தங்களுக்குச் செலுத்தவும் இடம் கிடைத்தது எங்கள் பாக்கியம்.

ஆங்கில பாஷை நம்முடைய தமிழ் நாட்டுக்குள் வந்து புகுந்தது முதல் நம் தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கு என்றும் இல்லாத கேடுகாலம் வந்தது என்றே சொல்லவேண்டும். அரசியல் தோரணையும் பணவருவாயும் ஆங்கில பாஷையுடன் ஏதோ ஒட்டிக்கிடந்த காரணத்தால் அதுவே சகலவித புருஷார்த்தங்களைத் தருவதென்றும், தெய்வமென வழிபடத்தக்கதென்றும், நம்மவர்கள் கருதலாயினர். ஆங்கில பாஷையினுள்ள மோகத்தினால் தமிழ் மொழியானது பயனற்ற மொழி என்றும்,

அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய கலையோ, நூலோ, யாதொன்றும் அதில் இல்லை என்றும் நினைக்கலாயினர். தமிழில் ஏதேனும் விருப்பம் உண்டென்று யாராவது சொல்லிக்கொள்ளுகிறதாயிருந்தால் நாகரிகக் குழாத்தில் ஏளனத்துக்குள்ளாக வேண்டியதுதான். அறுபது வருஷத்துக்கு முன் தாங்கள் ஆங்கிலப் பள்ளிக்கூடத்து மாணவனாய் இருந்தபோது மேலே கூறிய விஷயம் உண்மையிலும் உண்மையாயிருந்தது. இந்தப் பரிதாபமான நிலையில், தமிழும் தமிழ்ப் பற்றுடையாரும் இருந்தபோதிலும் தாங்கள் தன்னந் தனியாகவே அவமதிப்பையெல்லாம் பொருட்படுத்தாமல் தமிழ் மொழியின் சிறப்பையும் செல்வத்தையும் பாராட்டும் முறையில் போராடி வாதாடி வந்தீர்கள். ஆங்கிலத்திலிருந்து நூல்களை மொழி பெயர்த்தாலாவது நம்மவர் தமிழை மதிக்கமாட்டார்களா என்று எண்ணி, ஆங்கில இதிகாசமான "சுவர்க்க நீக்கத்தை" விருத்தப்பாவில் மொழி பெயர்த்துக் காட்டினீர்கள். மேல் நாட்டுக் கலைகளைத் தாங்கள் ஆர்வத்தோடு கற்று அவைகளின் அருமைகளையும் விலாசத்தையும் அறிந்தனுபவித்த காரணமாகவே விஷயங்கள் யாவற்றையும் நேர் முறையிற் கண்டு களிப்பதற்கான கல்விப் பயிற்சி நம்மவருக்குள் பரவவேண்டுமென்ற அவா உண்டாகி, சர்வகலா பண்டிதரான ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் எழுதிய "கல்வி விளக்கம்" என்னும் அரிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்தீர்கள். கம்பருடைய கவி, தமிழ் மக்களிடையே வீடுதோறும் புகவேண்டும் என்ற ஆர்வத்தால் கம்பராமாயாணத்தில் உள்ள இனிய கவிகளைத் திரட்டிக் கவிநயம் புலப்படும் முறையில் விசேட உரை முதலான எழுதித் தமிழ் உலகுக்கு உதவி வருகிறீர்கள்.

இவை எல்லாம் ஒருபுறம் இருக்க, சென்ற பத்து வருஷ காலமாக நாங்கள் ஏதோ ஒருவகையில் கம்பராமாயாணத்தைக் கற்றும் கம்பரின் அருமை பெருமைகளை விழாக்கள் மூலமாக வெளிப்படுத்தியும் வருகிறோம். துவக்கத்தில் கம்பரைப் பாராட்டுகிறோம் என்பது சில கொள்கையாளர்களுக்கு உவந்ததாக இல்லைதான். புறக்கணிப்புக்கும், ஏளனத்துக்கும்கூட உள்ளானோம். ஆனால், தாங்கள் எங்கள் சார்பில் நின்று எங்கள் முயற்சி எவ்வளவு சாமான்யமாய் இருந்தபோதிலும் எங்களைப் பாராட்டியும் ஊக்கியும் வந்த காரணத்தால் எங்கள் முயற்சி வீணாய்ப்போகவில்லை என்பது

வெளிப்படை. இதுமாத்திரம் அன்று. தமிழ் நாட்டில் இதர இடங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களும் கம்பரைப் புறக்கணிப்பதை விட்டொழித்துக் கம்பர் விழாவை ஆர்வத்துடன் கொண்டாட முன் வந்துவிட்டன. தமிழுலகம் இன்று கண்டறிந்த உண்மை இது. பண்டைக் காலத்துத் தமிழ் மக்களின் நட்ப உணர்ச்சியே மறுபடி நம்மவர்களுக்குப் பிறந்து "கல்வியில் பெரியவன் கம்பன்; கவிச் சக்கரவர்த்தி கம்பன்" என்று குதூகலத்துடன் சொல்லவும் ஆரம்பித்துவிட்டார்கள். இவ்வாறு கம்பருக்குப் புத்துயிர் உண்டானதுபற்றித் தங்களுக்குத் தமிழுலகமே கடமைப்பட்டுள்ளது. நாங்களோ தனித்த வகையால் சொல்லால் அளவிடமுடியாத வாறுகக் கடமைப்பட்டுள்ளோம். சென்ற அறுபது ஆண்டுகளாக நெடுகிலும் இடைவிடாது தாங்கள் செய்துவந்த முயற்சியும் போராட்டமும் இல்லாமற்போயிருந்தால் தமிழுக்கும் கம்பருக்கும் தற்காலம் ஏற்பட்டுள்ள நன்கு மதிப்பு ஏற்பட்டிராது என்பது திண்ணம். இது அலங்காரவார்த்தையல்ல. எங்கள் உள்ளக்கிடையான துணிபு.

தமிழ் வாழ்க! கம்பர் வாழ்க!! தாங்களும் நூறுண்டு வாழ்க!!! என்ற பிரார்த்தனையோடு தங்களுக்கு எங்கள் நன்றியைச் செலுத்திக்கொள்ளுகிறோம்.

---

## தூத்துக்குடிக் கம்பன் கழகத்தார் அளித்தது.

அன்பு நிரம்பிய ஐயா,

தங்கள் எண்பதாவது ஆண்டு பூர்த்தி விழா வைபவத்தில் எங்கள் கழகமும் இன்று கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றிப் பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்திருந்த ஞான்றும், அதற்குப் பின்னரும் தாங்கள் அரும்பெரும் பணிகளுக்கிடையே பல்லாண்டுகளாகத் தமிழ்த்தாயின் மலரடிகளுக்குச் சேவை செய்து வந்திருப்பது நந்தமிழ் நாட்டினர் அனைவருக்கும் தெரிந்ததே.

பல்வேறு காரணங்களால் ஆங்கில மோகம் தீவிரமாய்ப் பரவித் தாய்ப்பாஷையைப் புறக்கணிக்கும் ஓர் இடைக்காலம் நம் நாட்டிலே தோன்றிய போழ்தும் பல்வேறு ஸ்தாபனங்களுடனும் 'மதுரைத் தமிழ் சங்கத்தா'ருடனும் சேர்ந்து தமிழின் உன்னத நிலையை ஸ்தாபிக்க ஒரு சிறிதும் தளராது உள்ளூக்கி அன்புடன் தாங்கள் செய்து வந்த சேவைக்குத் தமிழுலகம் தங்கட்கு அளவிலா நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுளது.

பரந்த கல்வியும், செறிந்த கேள்வியும் பல் மொழிகளிலும் பன்னூற் பயிற்சியும் ஒருங்கமையப்பெற்று, அறிவுக்கு ஆதாரமான நூல்களின் சாரத்தை நன்கு வடித்துத் தெள்ளிய நடையில் எல்லாரும் படித்தின்புறும் வண்ணம் தமிழுலகத்திற்குத் தாங்கள் ஆக்கித்தந்த எண்ணிறந்த தமிழ் நூல்களே தங்களுக்கு அழியாப் புகழை யெய்துவிக்கும். தங்களை எங்கள் அன்பின் மிகுதியால் "தமிழ்ச் சாம்பவான்" என்றே அழைக்க விரும்புகின்றோம்.

மதிநெறியறிவுடன் நூன்முறை பயின்ற தாங்கள், எங்கள் கழகத்தின் மீது கொண்ட அன்பிற்கும் பேராதரவுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை வணக்கத்துடன் இதன்மூலம் சமர்பிக்கின்றோம். தங்கள் வயோதிகத்தையும் பொருட்படுத்தாது, எங்கள் கழகத்திற்கு அடிக்கடி விஜயம் செய்து செவிக்கமுதூட்டியிருப்பது மல்லாமல், கௌரவ அங்கத்தினராக எங்கள் கழகத்தில் சேர்ந்து எங்களுடன் தோழமை கொண்டு "கம்பராமாயண இன் கவித்திரட்டு" "கம்பராமாயணசாரம்" "மில்டனார் சுவர்க்க நீக்கம்" முதலிய அரும்பெரும் நூல்களைப் பேரன்புடன் எங்கட்கு வழங்கிச் சதா உற்சாகம் அளித்து வந்துள்ள தங்கள் உருவம் எங்கள் நெஞ்சைவிட் டென்றும் நீங்கா. ஊக்கம், உற்சாகம் ததும்பிக் 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவா'யுள்ள தங்கள் இன்னுரைகள் எங்கள் மனதைக் கொள்ளைகொண்டு நெஞ்சை அள்ளுகின்றன.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" என்னும்

சீரிய மொழியின் உண்மைக்குத் தங்களையே நாங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம். தளராது தயங்காதிதுவரை தாங்கள் புகழுடன் ஆற்றியுள்ள அரும் பெரும் பணிக்கு 'இன்றென இருத்தி நீ'

என்னும் மங்கல வாக்குக்கிசைய அரோக திடகாத்திரமும், தீர்க்காயுளும், மற்றும் எல்லா இன்ப நலன்களும் தங்களுக்கு அருளுமாறு எல்லாம்வல்ல இறைவனை மனமொழி மெய்களாரப் போற்றுகிறோம்.

---

## மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்து கலாசாலை மாணவர்கள் அளித்தது.

தமிழ்ப் புலவ!

பழந் தமிழ்ப் புலவர்களைப் பற்றியே படிக்கும்பொழுதெல்லாம், 'தற்காலத்தில் தமிழ்க் கவிகள் இல்லையா?' என்று ஏங்கி நிற்கும் எங்கள் மனக் குறை நீங்கத், தாங்கள் பாடி உதவிய கோம்பி விருத்தம், நெல்லைச் சிலேடை வெண்பா, சருவ சன சேபம் முதலியன எங்கள் பாடப் புத்தகங்களில் இடம்பெறல் ஆயின. காலகதியில் நமது நாகரிகம் நலிந்ததாயினும் தமிழனுடைய மனோபாவம் இன்னும் வறண்டுவிடவில்லை; கவிதை ஊற்றும் கற்பனை வளமும் பொய்த்துவிடவில்லை என்பதைத் தங்கள் நூல்களிலே கண்டு நாங்கள் தலைநிமிர்ந்து நடக்கலானோம்.

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
பேசு வதிலோர் மகிமை யில்லை
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்'

என்ற அவ்வளவில் நின்றுவிடாமல், மேற்குமொழி இலக்கியச் செல்வங்களையும் தாங்கள் திரட்டித்தந்தீர்கள். தங்களுடைய மிலிட்டனார் காவிய முதற் காண்ட மொழி பெயர்ப்பு மூலப் பெருநூலுக்கு இணங்க அமைந்திருப்பதால், இவ் விரு நூல்களையும் வரி வரியாக ஒப்பிட்டு நோக்கும் சிறந்த படிப்பு முறையின் பயனை அடைகின்றோம். அதற்கு எங்கள் மனம் நிறைந்த நன்றிமொழி அல்லாது வேறொன்றும் சொல்வதற்கு இடமில்லை.

'மடுவிலே குதித்து மூழ்கி மணலை முகந்து காட்டிய இளமைப் பருவத்தை இப்பொழுது நினைக்க மனம் இரங்குகின்றது' என்று தம் முதுமைக்குப் பண்டு வருந்திப் பாடிய

புலவரை மறுத்துரைத்தது போல, இந்த முதுமைப் பருவத்தில் கம்பராமாயண சாரத்தை வெளியிட்டு உதவுகிறீர்கள். தங்களுக்குக் கலையார்வமும் தாய்மொழிப் பற்றும் இல்லையேல் தமிழ் மாணவன், கம்பர் கவிதை கண்டு மகிழவும், அவரை உலகப் பெருங் கவிகளுள் ஒருவராக உணர்ந்து கொண்டாடவும் இயலுமா?

இங்ஙனம் கவிதை, புலமை, ஆராய்ச்சி ஆகிய துறைகளில் அறுபதாண்டுகளுக்கு மேலாகவே நீண்ட பொறுமையோடும் சலியாத முயற்சியுடனும் உழைத்து, அதன் பயனாகத் தாங்கள் ஆக்கித் தந்த நூல்கள் யாவும் தமிழ்த் தாயின் சீரிய அணிகளாய்த் திகழ்கின்றன.

தங்களுக்குத் தமிழ் மக்கள் நன்றி பாராட்டுவதற்காக நடத்தும் இவ் எண்பதாம் ஆண்டின் கொண்டாட்டத்தைத் தமிழ்த் திருவிழாவாகவே கருதி 'இன்னு மொரு நூற்றாண்டிரும்' என்றே நாளும் வாழ்த்துகின்றோம்.

எங்கள் கலாசாலையின் பழைய மாணவராகிய தங்களைப் பின்பற்றித் தமிழ்த் தாய்க்கு ஆக்கம் தேடித் தொண்டாற்ற, இன்று தோன்றும் இவ் விருப்பம் செயல் அளவில் உருக்கொளும் நாளே உண்மையில் நாங்கள் தங்களைக் கொண்டாடும் நாளாம்.

---

## மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் மங்கள வாழ்த்து

மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலையாசிரியர்,
நல்லசிவன் பிள்ளையவர்களியற்றியது.

முந்தை நான்மறை முடியினின் றுாடு முதல்வன்
வந்து வேய்வனத் திலிங்கமாம் வடிவுடன் வயங்குஞ்
சந்த மார்ந்தபல் சிறப்புறு சாலிவே லியெனக்
கந்த மார்ந்ததண் பொருநைசே ரொருபதி கவினும். 1.

ஒப்பி லப்பதிக் குறுகுட பாலினி லோங்கு
திப்பி யப்பதி யாய்த்திகழ்ந் தெங்கணுஞ் சிறந்தோர்க்
கெய்ப்பில் வைப்பென விசைவேள்ள காலெனு மெழிலார்
சுப்பி ரப்பதிச் சுப்பிர மணியப்பேர்த் தோன்றல்; 2.

தொண்டை மண்டல முதன்மையோர் மரபினிற் றோன்றி
யெண்டி சைக்கணுந் தன்பெயர் விளங்கவந் திருநீர்
மண்ட லத்தையாள் மன்னவர் மகிழ்வுடன் வழங்கு
திண்டி றற்பெறு பட்டமும் புனைதரு சீலன்; 3.

தராத லத்தில்ராவ் ஸாஹேபென் றியாவருஞ் சாற்றிப்
பராவு றும்புகழ் படைத்தவன் விலங்கினேய் பாற்றிக்
கராச லத்தைமுன் காத்திடு கடவுள் போற் காத்தோன்
புராத னப்புகழ் வழிவழி போருந்துறு புனிதன்; 4.

கல்வி சான்றஅண் ணுமலைப் பல்கலைக் கழகத்
தில்லி யற்றமிழ்ச் சோதனைத் தலைமையேற் றிருந்தோன்
மல்கு சீர்மது ரைத்தமிழ்ச் சங்கத்து மாண்பு
நல்கு வித்தியா லோசனைச் சபையங்க நல்லோன்; 5.

ஆங்கி லத்தினுந் தமிழினு மரியநூ லாய்ந்து
தேங்க ளிச்சுவை யெனப்பல நூறரு சீரோன்
ஈங்கி வள்ளறன் முதுமையு மிளமையா வெண்ணி
ஓங்கு நூறரு முழைப்பினுக் குவந்திடா ருளரோ! 6.

நீதி யார்ந்திடு சுவர்க்கத்தி னீக்கமு நெறிசேர்
கோதி லாதவோர் கோம்பியின் விருத்தமுங் குணமிக்
கோது நேல்லையின் சிலேடையும் அகலிகை யெனுமோர்
மாத ராள் பெயர்த் தனிமுதற் பாவுமிவ் வகையே; 7.

அரிய நூல்பல வியற்றியு மாங்கில மொழியின்
விரியு நூறமி ழாக்கியு மேதகு கல்விப்
பெரிய ளுக்கிய கம்பரா மாயணப் பெருநூல்
தெரிய யாவர்க்கு மப்பெயர்ச் சாரநூற் றெளித்தே! 8.

தொகுத்து நல்லுரை வரைந்துமின் னனபல தொண்டு
மகத்து வம்பெறு தமிழினுக் கியற்றுமிவ் வள்ளற்
கிகத்தில் யாஞ்செய்கைம் மாறுமுண் டோவென வெண்ணி
மிகத்தெ ளிந்தநூ லறிஞர்பல் லோர்தமில் விரவி, 9.

10. இந்த வுத்தமப் பெரியனுக் கேண்பதாம் வயது
முந்து பூர்த்தியின் விழாவினை முதுதமி ழுலகிற்
சிந்தை யார்வமோ டீண்டுகோண் டாடலே தெளிந்த
நந்த மக்குறு கடமையென் றியாவரு நயந்து,

11. ஈசு ரப்பெய ராண்டினிற் கடகத்தி லிரவி
தேசு றத்திகழ் மதிபதி னேழ்திக தியினிற்
பேசு றுங்கதிர் வாரத்திற் பிறங்குகார்த் திகைநாள்
வீசு றும்புகழ்ச் சுப்பிரமணியமே லோற்கு

12. எண்பதாண்டிவ ணிறைவுறு விழாவினை யியற்றி
நண்பர் யாவரும் வாழியிவ் விழாப்பெறு நல்லோன்
பண்பொ டின்னுநற் பலவபி டேகங்கள் படைத்து
வண்பு வித்தலத் திசையுடன் வாழிய மகிழ்ந்தே.

---

## திருநெல்வேலி, தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார் வாழ்த்துப்பா

(வித்வான் புன்னைவனநாத முதலியாரவர்கள் பாடியது.)

சொல்லும் பொருளு மாயிலங்கு தூயோ னருளே துணையாக
அல்லும் பகலும் நற்கலைநன் காயுந்தோறு மதன் சுவையே
புல்லும் படிவாழ் புலவர்நலம் பொருந்து சாமி நாதையன்
நல்லன் மதி சுப்பிரமணியன் நண்ணு மெண்பத் தொன்றுண்டே; (1)

ஒன்று மாகஸ் டீஸ்வரத்தி ஞேதுமாடி பன்னேழில்
நன்றே ருழவ ருழுசாலில் நந்தூர் வேள்ளகால் நகரில்
ஒன்றே ராழித் தேரோன்சீ ரோங்குமாபோ லுலகமிசை
நின்றே நிலவும் இசைப்புலவன் நேரார் வணங்குந் தாளாளன்; (2)

ஆளுமரசாங் கத்தினர்கள் அமைகால் நடையின் மருத்துவனாய்
நாளுஞ் சிறந்து ஜீபிவிசி ராவ்சாகெப்பென் பட்டமுற்றோன்
வாளுஞ் செயலிற் குறைவென்ன வயங்கும் விழியார் மயங்குமெழில்
வேளும் வேட்கும் எற்று நடை விளங்கும் வெண்பாப் புகழேந்தி; (3)

ஏந்துங் கொள்கையா ரெவரும் எத்தும் சருவசனசெபமும்
மாந்தர் மகிழு மகலிகைவெண் பாவும் கோம்பி விருத்தமும் வாழ்
காந்திமதி நெல்லைச்சிலேடை வெண்பா கல்வி விளக்கமுதல்
வேந்தன் மொழியினமை சொர்க்க நீக்க மில்டனுர் சரிதம்; (4)

சரிதத்துண்மை தரு நூலும் தருங்கால் நடைகள் பன்னூலும்
விரியச் செய்தான் கம்பர்கவி வேண்டுமௌவு மெடுத்துள்ளம்
புரிய வைந்நூற்றின் மேலாய் அச்சிட்டளித்த புலவோன்சீர்
தெரியக் கேட்போர் செவிகுளிரச் செப்புந் திறத்ததொரு நாவோ? (5)

செப்புஞ் சான்றோருடைத் தோண்டை நாட்டு வேளாண் சீர்குலத்துத்
துப்பின் தளவாய்த்தொன்மரபு துலக்குமதிசேரெழிற் பழனி
யப்பன் நோற்ற தவப்பயனு யமைந்த சுப்பிரமணியதரு
கப்புங் கவருமாத் தழைத்துக் கனிதந்துதவுங் காசினிக்கே; (6)

கனிமுத்தமிழை வளர்சங்க காலத்தின்பின் கற்றோர்கள்
இனியத்தமிழை வளர்க்குமுறை யேற்ற தென்னிந்திய சங்கம்
பனிமாமலையா ளொருபாகன் பணிபோல் வளர்க்கும் புலவர்குழுத்
தனிமாப் புலவர் திலக! இசை தாங்கி நாளும் வாழியவே. (7)

---

## சென்னைப் புரசைக் கம்பர் கழகத்தார் வாழ்த்துப்பா.

சீரார்ந்த செந்தமிழ்த் தாயின் புதல்வ சிறக்கவருட்
பேரார்ந்த நல்வெள்ள காற்சுப் பிரமண்ய பெட்புறவே
ஏரார்ந்த நூற்பல செய்தளித் தெங்க ளிதயமெனு
நாரார்ந்த நன்மல ரெப்போது மேவுமெந் நாவலனே. 1

பாரினெண் பானுண்டு பண்புற வாழ்ந்தனை பற்பலரும்
பாரியென் றேத்திப் பயன்பெற நின்றனை பாங்குறவே
ஊரி னடுவட் பயன்மர மாயினை யுற்றவர்க்கிங்
கோரி னுனைப்போல் பவரா ருதவுவ ருத்தமனே. 2

பின்னும்பல் லாண்டுபல் லாண் டுநீ வாழ்ந்து பிறங்குதமிழ்
அன்னைக் கணிகலம் பற்பல் வீந்தவ ளாசியுடன்
பன்னு தமிழ்ப்புல வோர்மதிப் பென்னும் பதத்தமர்ந்தே
இன்னம் பலநல மெய்த விறையரு ளெய்துகவே. 3

சொல்லுக் கிறைவியு முன்னலங் காணத் துலங்கிடுவாள்
நல்லவர் நாளு நனிமகிழ்ந் துன்சீர் நவின்றிடுவார்
அல்லவ ரேனுநின் சொல்லாற் றிருந்தி யழகுறுவார்
நல்லவ வீண்டுபல் லாண்டுபல் லாண்டுநீ நண்ணுகவே. 4

வாழிய செந்தமிழ் வாழிய நற்றமிழ் வாணர்செஞ்சொல்
வாழிய வண்டமிழ் நூற்பொரு ளென்றும் வனப்புடனே
வாழிய சுப்பிர மண்யெனங் கோமான் வழிவழியே
வாழிய மற்றவன் வான்புகழ் வையம் வளம்பெறவே.

---

ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தான வித்வான் தென்திருப்பேரை,
**அபிநவ காளமேகம் அனந்தகிருஷ்ணையங்காரவர்கள்**
இயற்றிய ஆசிரியப்பா.

பூமகள் தனக்குத் தாமரை போன்ற
வெள்ளகால் நகரில் வள்ளலா ரென்றும்
கொண்டைக் கட்டுக் கொண்டநன் முதலியார்
மரபெனு மினிய பரவையின் மதியெனக்
கரைகண் டோனென விரைவினிற் கற்று
விலங்கின் நோயெனும் விலங்கைத் தறித்தோன்
பணத்தால் மேன்மைக் குணத்தால் நல்வங்
கணத்தால் உயர்கவி மணத்தால் ஆயிரம்
முழுமதி நோக்கிய செழுமையாற் பெரியோன்
பலவின் கனிபோற் பலவாம் நூல்கள்
சுப்பிர மணியனுஞ் செப்பிசை யானும்
பெருந்திரு விழாச் செய் அரும் பெரியோரும்
மாண்பொடிவ் வவைதனிற் காண்பவரெவரும்
இக்கழ கத்தினில் இக்கழகன் போல்
மாப்பூண் மணிகளின நாப்பண் மணிபோல்
சிமாணும் குமார சாமிநன் ஞமனும்
ஆவுடை யப்பனுந் தேவுடை அன்பனும்
நிதம்பர னடிதொழும் சிதம்பர நாதனும்
தினங் காங்கிரேசர் மனங்களி கொள்ளும்
ஆறே நோக்கிய ஆறுஞ் சியார்ச்செனும்
இந்நிலங் காக்கும் மன்னர் கோமானும்
எவ்விதச் சிறுமிங் கேய்ந்தே
ஆழ்கடல் உலகில் வாழ்க பல்லாண்டே.

---

## அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர்,
## திருவாளர் S. சோமசுந்தர பாரதி, M. A., B. L., அவர்கள்
### பாடிய வாழ்த்துப்பாக்கள்.

*கம்பமா கடல்கடைந்தின் கவிதிரட்டி நல்குமால்*
*பம்புநூற் பரப்பிரண்டு பரவையுண்டு பயனெலாம்*
*வம்பமாரி யாய்வழங்கு வள்ளல்ஆய்தென் பொதியிலூர்*
*அம்புலீநின் கலைகளென்னும் அமிழ்தமின்னும் வளர்கவே* 1.

*பண்டை வேளிர் மரபினர்தென் பாண்டியாண்ட முதலிமார்*
*தொண்டைமண்ட லத்தூர்தூய தொன்றுயர்ந்த குடியினாய்*
*இண்டைமாண் கிழத்திமார்கள் இருவரொத் துயர்ந்தநீ*
*கண்டையாண் டோரெண்ப தின்னும் காண்பையாண்*
*டொரெண்ணில* 2.

*எள்ளவெள்ளு மிசைபரப்பி யெண்பதிற்றி யாண்டுநீ*
*தள்ளவெள்ளு தமிழ்மழைத்த தகைமைசான்ற எழிலியோய்*
*விள்ளவெள்ளு விளையுளார்பல் வயல்கள் சூழும் வெள்ளகார்*
*வள்ளல்சுப்ர மண்யநீடு வாழியாம் வழுத்தவே.* 3.

---

### மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வித்துவான்
## மு. ரா. அருணாசலக் கவிராயர் அவர்கள் இயற்றிய ஆசிரியப்பா

*திருக்குற் றால சிவபுரி நதியில்*
*அத்தலத் தெம்பிரான் அருளேபோல்*
*வெள்ளம் பெருகி விரைந்து தன்காலால்*
*எழுந்து நடக்கு மியல்பி னாலே*
*வெள்ள காலென விளம்பு நகரில்*
*வள்ள லென்ன மகிழ்ந்தினி திருக்கும்*
*சுப்பிர மணிய தூய நாவலனே*
*பன்னா ளுன்னொடு பழகி யன்பு*
*தங்கு மருணா சலக்க விராயன்*
*எழுதும் பாசுர மினிது கேண்மதி*
*ஆங்கில மன்னர் நின்னதி மதிநுட்பம்*

கண்டு கண்டுள்ளக் களிப்புட னளித்த
உத்தி யோக முனூற்று நாளில்
இடை யிடை சும்மா விருக்கு நேரத்தில்
பாடிய தமிழ்ப்பிர பந்த மனந்தம்
அவற்று ளொன்று மாங்கில மகாகவி
விவேகி யாகிய மில்டன் சரிதம்
நிலையாஞ் சுவர்க்க நீக்கமெனு நூல்
படித்தார் பலரும் பார்த் தனராயில்
சுவர்க்கம் ஆக்கம் தோன்றச் செய்யும்
இந்தநூ லென்றி யம்புவ ரதனையும்
ஆம்பிர பலமாய மைந்து நின்ற
கோம்பி விருத்தக் குறிப்பையுங் கேட்டார்க்
கில்லை யெனுமலீ வோர் வாழும்
நெல்லைச் சிலேடை நிகழ்வெண் பாவையும்
மகளிர் கற்பின் வழாநிலை யமைந்த
அகலிகை வெண்பா வாகிய நூலையும்
திரிபி யமகஞ் சிலேடை கற்பனை
யமையநீ யொவ்வோ ரமையந் தோறும்
உன்போ லன்பர்க் குவந்து பாடிச்
செலவிடும் விடுகவித் திரட்டையும் பற்றிப்
பிறருளங் கொள்ளப் பேச வல்லேன்
அல்லன் ஒருகால் ஆவன் ஆயினும்
முந்து நூல்கண்ட மூதறி வாளர்
கல்வியிற் பெரியன் கம்ப னென்ன
ஏதுப் பொருளுக் கெடுத்துக் காட்டும்
தெய்வப் புலமைத் திறஞ்சே ரன்னவன்
ஆக்கிய ராமா யணத்தின் சார நூல்
உட்பொருள் நுட்பம் ஓத வொண்ணு
தாதலாலே யறுப தாமி ருபதும்
நிறையு நின்வயதில் நினைக்கு நல்லுற்றுர்
தாஞ்செய் வித்திடு சதாபி ஷேக
விழாக் கொண்டாட்டம் விரும்பிக் காண
வரும் பிரபுக்கள் மந்திரியாகிய
திவான் பகதூரெனச் சிறந்த நலனுறு

குமார சாமிக் கோமான் பனசையில்
நல்லொழுக் கத்தை நாடியிருக்கும்
சாமி நாத தம்பிரான் மூர்த்தி
மற்றும் நகர மகாசன மென்னும்
குணநல மிக்கார் குழுமுஞ் சபையில்
சோமசுந் தரனெனச் சொல்லரு மைப்பேர்ப்
பாரதி முதலிய பல்பெருங் கவிஞர்முன்
நாண மின்றி நானும் வந்தே
ஒன்றும் பேசா ஊமன் போல
இருந்துமீ ளுதலினங் கேகு றுமை
உசித மென்றிங் குறைந்தன னரசே
யீது நிற்க எங்குல தெய்வமாம்
திருப்பரங் குன்றச் சிவகுரு வருளால்
சகல சம்பத்தும் தழைக்கப் பெற்று
மலர்தலை யுலகில்நீ வாழி நீடூழி!

---

## கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L., அவர்கள்
Tagore Law Lecturer
இயற்றிய ஆசிரியப்பா.

பண்டைத் தமிழர் பாநலம் குணநலம்
எண்டிக் கும்புகழ் இணையில் வண்மை
நாவலர் வீரம் நடுநிலை நெஞ்சம்
பாவலர் ஆர்வலர்ப் போற்றும் பண்பு
படமெடுத் தன்னமொழி பெயர்ப்புத் திறன்
அடலே றன்ன கம்பர் வள்ளுவர்
திட்ப நுட்பம் பொருள்நூ லாய்தல்
ஒட்பஞ் சிறந்த உயர்பர யாத்தல்
மாசில் உள்ளம் தூய ஒழுக்கம்
ஈசற்கன்பு தேசுறு செல்வம்
என்னும் பெருமைகள் துன்னும் வெள்ளம்
பொழிகால் அமரும் தமிழ்த்தெய் வப்பேர்
உழவில் தலைவரென விளங்கும் புகழ்த்

திருவுடைச் சீர்கால் பெரியர் எண்பதாம்
உருவள ராண்டின் மேல்நீ டூழி
வாழ்ந்தினி தோங்கி வண்டமி ழன்னை
தாழ்ந்திட லின்றித் தலைமை யெய்தச்
செய்யுந் தொண்டிற் சிறக்கும் வண்ணம்
ஐயன் சேவடி பழிச்சுது மியாமே.

---

கோவை, சேக்கிழார் நிலையம்,
C. K. சுப்பிரமணிய முதலியார், B. A. இயற்றியது.

உலகம் பரவ நிலாவு நற்றமிழ்த்
தென்பாண்டி நாட்டினி லின்பார் மலயத்
தமிழ் முனிச் சால்பிற் றழைதமிழ் மாருதம்
தங்குநற் சால்பிற், பொங்கிய வெள்ளங்
காலிற் பரந்து சாலி வளர்க்க
வாங்குநற் சாலி தாங்குபன் மணிகளின்
மிக்கநன் மணியாய்த் தொக்கதொன் றென்ன
வெள்ள காலின் விளங்கிய நெல்லைக்
கற்பின் வருபேர்ச் சுப்பிர மணியே!
தொண்டை மண்டலத் தொல்வே ளாண்குலப்
பண்டைநற் பண்புகள் பலவும் பாங்கினில்
விளக்குங் குலநல விளக்கே! பொருநை
வெள்ளமுங் காலு நெல்லைமுற் சேரிற்
கால்நடை வளர்த்தல் கருமமீ தன்றே!
ஆதலி னுயிர்வகை காதலிற் காக்க
உவந்துசெய் யரச உத்யோக மிக்கோய்!
கோனுநற் குடியுங் குலாவிய வொருமைச்
சீல மிகவே செப்பிடுஞ் சிறப்பாய்!
தமிழே யெவர்க்கு மின்பந் தருவதென்
றமிழ்தமா மதனை யாக்கமொ டுவந்தாய்!
கம்பன் கவியிற் களிக்குங் கலைஞ!
ஆங்கில மாக்கவி தீந்தமிழ்ப் பெயர்த்தே
வாங்கிய புலவோய்! வளர்கவித் திறத்திற்

கோம்பி விருத்த மகலிகை வெண்பா
தேம் பொழி னெல்லைச் சிலேடை வெண்பா
முதலிய நூல்பல நுதலிய திறத்தாய்!
நின்னுடை யெண்பதிற் றியாண்டு நிறைவினி
னின்னது பெயர்பெறு நேர்மையொன் றேகொடு
காலமிது வெனக் களித்த மனத்தோ
டேலநல் லுவகை பூத்து நின்னை
வாழிய! இன்னும் பலப்பல வாண்டு
வாழிய! வென்றுளம் வாழ்த்தின னாக;
ஒருமென் னுள்ளத் தோர்நினை வுற்றனன்
அறுபதிற் றியாண்டே யுறுமிச் சிறியேன்
பெரியாய் நின்னை வாழ்த்தலுந் தகைமையின்
வருவதோ வென்று வந்ததோர் ஐயம்;
ஆதலி னெனையே வாழ்த்த எண்ணினேன்;
காதலி னதுதா னெவ்வகை யோவெனின்
நின்னைப் போலவே யென்னுடையெண்பதிற்
றியாண்டு நிறைவில் நீயுமுட னுற
வேண்டுமென் றன்னை விளம்புக வாழ்த்தென;
எனையே வாழ்த்துவ தாகுமோ' வென்று
பினையே அஞ்சினேன்; பின்னர்த் தெளிந்தேன்,
சொன்னயம் பெறுந்தொறு நின்னையுள் ளாக்கி
யகமுறப்படுத்தும் தகவுடைக் கம்பர்
"தன்னையே தொழூ" மென முன்னையே மொழிந்தாங்
கின்னெனக் கதுநின் றியைக வென்றே
முதுபுது மொழியாக் கொண்டு மொழிந்தேன்;
இது வென் வாழ்த்துரை யேற்றிட லாகும்;
பல மொழித் தென்று மின்பமா ரன்பிற்
சிவம் பெறு ஞானந் திடமுறும் பத்தி
யீங்கிவை பெற்றே யோங்குநல் வாழ்வின்
நீங்காது வாழ்க! பற்பல வாண்டு
பொருநைநுன் மணலினும் பெருக
வாண்டுகள் பெற்றுநீ நீண்டு வாழியவே!

மதுரைச் செந்தமிழாசிரியர்,
## திரு. நாராயணையங்காரவர்கள் இயற்றியது.

சுப்பிர மணிய நாமத் தோன்றலே வாழி நீசெய்
செப்பிர மணிய மான செய்யுளும் உரையும் வாழி
சுப்பிரம் அணியப் பெற்றுத் துணையோடும் சுற்றத்தோடும்
சுப்பிர மணியத் தெய்வம் தொழுதுநீ டூழி வாழி!

குறிப்பு:— *நீ என்பது மத்திம தீபமாய் நின்று நீ வாழி! நீ செய் செய்யுளும் உரையும் வாழி! என இரண்டிடத்தும் இயையும்; பின்னும் நீடூழி வாழி! என்பதனோடியைந்தும் பொருள் பயக்கும். செய் என்பது வினைத்தொகை முதனிலையாகாது, முதனிலைத் தனிவினையாய், செய்த செய்கின்ற செய்யும் என்னும் முக்காலப் பெயரெச்சப் பொருளும் ஒருங் குணர நின்று செய்யுளுக்கும் உரைக்கும் விசேடணமாயிற்று. செப்பு - சொல்லும் வாக்கியங்களுமாம். இரமணியம் - ரமணீயம் என்னும் வட மொழித் திரிவு; இன்பம் பயப்பது என்பது இதன் பொருள். சொல் இன்பம் பயப்பதாகவே அதனோடொற்றுமையுடைய பொருள் இன்பம் பயப்ப தென்பதும் போதரும். இதனாற் சொல்லணி பொருளணி சுவையணி தொனியணி முதலிய அணிநலங்கள் பெறப்பட்டன. செய்யுள் - தனிச் செய்யுள்களும் தொடர் நிலைச்செய்யுள்களான பனுவல்களுமாம். உரை - பதவுரை பொழிப்புரை கருத்துரை குறிப்புரை விசேடவுரை விரிவுரைகள். சுப்பிரம் - வெண்ணிறம். அஃது அந்நிறமுடைய அணியப்படும் பொருள் களுக்கெல்லாம் ஆகுபெயராயிற்று. சுப்பிரம் அணியப்பெற்று என்று பிறந்தநாட் பெருமங்கலமான வெள்ளணியணிதல் கூறப்படுகிறது. வெள் ளணிகளாவன வெண்பட்டுடைகளும் முத்துக்களாலும் வயிர மணிகளாலும் செய்யப்பட்ட அணிகலன்களும் கற்பூர நறுஞ்சாந்தும் பித்திகைக் கத்திகை முதலிய நறும்பூந்தொடையல்களுமாம். இவ் வெள்ளணியணிதல் பிறந்த நாளொப்பனையெனச் சிந்தாமணியுரையுள் வழங்கப்பட்டது (செய். 614) நீ துணை யொடும் சுற்றத்தோடும் சுப்பிரம் அணியப்பெற்று எனக் கூட்டுக. துணை - வாழ்க்கைத் துணையும் தோழரும், சுற்றம் - உறவு முறையாரும் நண்பர்களும் சூழ்ந்திருக்கும் பரிசனங்களும்; நண்பரும் பரிசனங்களும் சுற்றம் போல உற்றுழியுதவுதலாற் சுற்றமெனப்படுவர். தலைமக்கட்கு ஆயுள் வளர வேண்டி ஆயுளோமத்* தாகுதி வளங்குதலால் *இவ் வெள்ளணி நாள்* ஆகுதி நாள் *என்றும் வழங்கப்படும். 'அளி முடியாக் கண்குடையாளுகுதி நாள்' என வருதல் காண்க (தொல் - பொருள் புறத் 36. நச். உரை. மேற்கோள்.) சுப்பிரமணியத் தெய் வம் தொழுது என்பது இரட்டுற மொழிதலாய் ஆயுளோமத் தாசிரியர்*

வழிபாடும், கடவுள் வழிபாடும் உணர நின்றது. ஆசிரியர் வழிபாட்டினை உணர்த்துமிடத்து சு பிரமணியத் தெய்வம் தொழுது எனப் பிரிக்க. இதனுள் சு என்னும் வடமொழியுரிச் சொல் சோபனப் பொருளுணர்த்திப் பிரமணியத்திற்கு அடையாயிற்று. பிரமணியம் - அந்தணர்குழு. இது வடமொழித் திரிவு. சு பிரமணியத் தெய்வம் - அருளுடையந்தணர் குழுவாகிய தெய்வம். அந்தணர் குழுவைத் தெய்வமாகக் கருதுதல், "கரியமாலினும் ........................................................
பெரியரந்தணர்' என்பதனுற் பெறும். அவரைத் தொழுகையாவது: வெள்ளணி நாளாயுளோமச் சடங்கில் அந்தணருவந்து வந்து அங்கியங் கடவுளையழைத்து அவியும் நெய்யும் ஆவுதி சொரிந்து அறுகு நீர் தெளித்து ஆசிவசனங் கூறி அக்கதமிடுங்காலத்துத் தலைமக்கள் அஞ்சலியத்தராய் அதனையேற்றல். இனி, கடவுள் வழிபாடுணர்த்துமிடத்து முருகக் கடவுளாகிய வழிபடு தெய்வத்தை ஆலயத்திற் சென்று அருச்சித்துப் பூசித்து வந்தனை வழிபாடியற்றி என்க. எல்லா நலங்களுமுள்ளதாய் எங்கும் நிறைந்துள்ள முழுமுதற் கடவுளை வணங்கி எனினும் ஆம்.

முதலிரண்டடிகளால் தோன்றல் என்னும் சொற்பொருளாற்றல் முதலியவற்றால் பிரசித்தி முதலிய பெருமைக் குணங்களும் சொல்வித்தகமும் கல்வித் திறமையும் சொல்லப்பட்டன. மூன்றாமடியில் வெள்ளணியொப்பனையாற் செல்வச் சிறப்புச் சொல்லப்பட்டது. நான்காமடியால் ஆகுதி நாளிற் செய்தற்குரிய ஒவிலொழுக்கம் சொல்லி வாழ்த்தலாயிற்று. பின்னிரண்டடிகளால் 'இன்றுபோல் என்றுமிரு' என்பது குறிப்பாயிற்று. தெய்வந்தொழுது வாழ்தல் அறப்பேறாயிற்று. சுற்றத்தோடு வாழ்தல் பொருட்பேறாயிற்று; 'சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான் - பெற்றத்தாற் பெற்ற பயன்' என்பது சான்று. துணையொடு வாழ்தல் இன்பப்பேறாயிற்று. அறம் பொரு ளின்பங்களடையக் கூறினமையால் இது பெருமங்கல மாயிற்று.

---

சேந்தமிழுதவிப் பத்திராசிரியர்,

## T. K. இராமநுஜையங்காரவர்கள் இயற்றியது.

பூமாதி னெழின்முக மாத்திகழ் பாண்டி நாட்டகத்துப்
புவியோர் போற்ற
நாமாது நலம்பெறப்புத் தமுதநிகர் முத்தமிழெந் நாளு மோங்கக்
காமாதி கடிந்துயர்ந்த அகத்தியனு ருறை பொதியிற் கவின்சேர் யாவும்
யாமோதி யுணர்த்தவரி திவ்வரைசார் நிலவரைப்பி னெந்த நாளும்

வேறு.

தெள்ளு தீஞ்சுவைத் தமிழொடு தென்றலுஞ் சாந்தும்
பள்ள நீருல கினுக்கெலாம் பரிந்தளிப் பதுவாய்
வள்ளி யோருள மெனவ்வளம் பலபல வாய்ந்து
வெள்ள காலெனப் புவிபுகழ் நகரொன்று விளங்கும். 2.

அந்த மாநக ருறையும்வே ளாளரில் அறமே
சிந்தையாற் சொலாற் செய்கையால் வளர்த்திடு திறத்தால்
முந்து நாவலர் புகழ் பழநியப்பவேள் முயல
வந்த மாதவ மனைத்துமோர் மகவுரு வாகி, 3.

வந்த தாமென வந்தன னொருதிரு மதலை
யந்த நன்மக னறிவரு ளாள்வினை யாற்றல்
செந்தமிழ்க் கலைத்திறமுத னலமெலாந் தெரிந்தே
இந்த மாநிலஞ் சுப்பிரமணிய னென் றிசைக்கும். 4.

மற்றவன் கலைமதியென வளர்ந்து செந்தமிழின்
முற்று மாங்கில மொழியினின் முதிர்ந்தநற் புலமை
யுற்று நாவலர் காவலர் மதிக்கும்வாழ் வுடனே
கோற்றவன் தரு பட்டமும் பதவியும் கொண்டான். 5.

ஏற்ற பல்பொருள் களுமவை யின்புற விரிக்கும்
ஆற்றல் மேயினன் நால்வகைக் கவிக்கர சானன்
போற்று நெல்லைச் சிலேடைவெண்பா வொடு புகழ்ந்து
சாற்று கோம்பியின் விருத்தமும் தகவுறத் தந்தான். 6.

வேறு.

*ஒப்பறு சுவர்க்க நீக்கம் அகலிகை யோண்பா வென்று*
*செப்பு காவியமும் ஈந்தான் சீர்மிகு கம்பன் நல்கு*
*திப்பியக் கவியின் மல்கு தீஞ்சுவை யின்பமெல்லாம்*
*இப்புவி கொள்ளை கொள்ள இனிதெடுத் தூட்டுநல்லோன்.* 7.

வேறு.

*செந்தமிழ்க்கொரு தாயக மெனப்புவி செப்ப*
*வந்த மாமது* ரைத்தமிழ்ச்சங்க நாவலரோ
டேந்த நாளு நற்றமிழ் தழைத் திடமுயன்றிடலே
முந்து மாதவ மேனக்கோளுமுத்தமிழ்ப்புலவன். 8.

மல்கு செல்வ னண்ணுமலை வண்கலைக் கழகம்
நல்கு சேந்தமிழ்த் தேர்ச்சியாய் நாவலர் தலைவன்
*கல்வியிற் பெரியோருளங் களித்திட வழங்குஞ்*
*செல்வமுஞ் செவிச் செல்வமு மிகநிறை செம்மல்.* 9.

*மிக்க கேளிருங் கிளைஞரு மெய்ந்நெறி வழுவா*
*மக்க ளும்பிறர் யாவரு மாண்புபெற் றுயர்தற்*
*கொக்குமென்று தன் சொற்செயல் குணமெலாமொருங்கு*
*தக்க கட்டளை யாக்கொளத் திகழ்ந்திடு சதுரன்.* 10.

மற்றிவன் புகழ் வளர்ந்திட வளர்ந்தேண்ப தாண்டு
முற்றுமிற்றைநன் ளைன மொழிபல ஆண்டு
சுற்ற முந்துணை மக்களுஞ் சூழ்ந்தினி திருக்க
வெற்றியும் பெருவாழ்வுமே மேவி வாழியவே. 11.

---

முன்னீர்ப்பள்ளம்,
M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, B. A., L. T., அவர்கள் இயற்றியது

*பெரியரைப் பேணுதல் பெரும்பே றென்பர்*
*விரிவுரை விளக்கம் வேண்டுவ தில்லையால்*
*சரியெனக் கொள்ளல் சாலவு நன்றே.* 1.

முதலிடம் பெற்றோர் முதலிக ளென்பர்
கதலி பாகங் கலைமகள் கருணையை
மதலைய தாக மதிக்குமிவ் வுலகே. 2.

முருகன் கிருபையை மருவிய முதலியார்
விருதுகள் பெற்ற விவசாய நிபுணரே
கருமஞ் சிதையாக் கானடை ராயரே 3.

சாய்ப்பெனப் படுவது சத்தியச் சார்பே
வாய்ப்பெனப் படுவது வாய்மையின் திறனே
காய்ப்பெனப் படுவது காப்பியப் பொருளே 4.

வெண்பா விருத்தம் விரைந்து பாடுநர்
கொண்மூ வொப்பக் கொட்டுத லியல்பே
தண்டமிழ்க் கோம்பி தண்பொருநை நெல்லை. 5.

அகலிகை சுவர்க்கம் அகன்ற நூல்கள்
பகலவன் போன்று பார்ப்பவர்க் கொளிதரும்
இகலவ னிராம னிழைத்த விருவினை 6.

அனைத்து மணி யணி யாக்கிய கம்பனை
நினைத்து நினைத்து நிதந்தொறுஞ் சாரங்
கனைத்துக் கனைத்துக் காணுத லழகே. 7.

மாந்தர்க்கு வயது நூறல்ல தில்லையேல்
சாந்தற் காண்டு சதஞ்சத மாமே
ஏந்தற் காப்த மெண்பது பெரிதோ. 8.

முதுமை யெய்தினர் முதலியா ரென்பரேல்
புதுமை படைத்தவர் பூமியி லிலரோ
விதுர வீரியர் வீமரும் வேந்தரே. 9.

வெள்ளம் வருமுன் கால்கோலும் வேளாளர்
பள்ளம் படுமுன் பண்ணையிற் பாய்ச்சுவர்
கள்ளன் கதிரைக் கொய்ய விடுவரோ. 10.

சாயை பிடிப்பவர் சித்திரம் வரைபவர்
காயைக் கனியெனக் கொள்பவ ரொப்பரே
தாயைப் பேணுவோர் சேயை யென்செயார் 11.

கறைபடா மதியெனக் கவினுறு கவிஞர்க்கு
இறைவ னருளுவ னிகபர வாழ்வுகள்
அறைதல் வேண்டுமோ அவனியு ளார்க்கே. 12.

ஆயிரத் தெட்டு அரும்பிறை கண்டோர்
ஆயிர முக்கா லாறுட னறிந்தோர்
பாயிரம் பனுவற் கருக ரென் பாரே. 13.

நெடுந லுளரொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகெனப் புகன்ற
அருமை நோக்கியே அன்புபா ராட்டுதும். 14.

சிதம்பரா வுடையர் கதங்கொளாக் குமரர்
இதநாடி நம்பி ஈசுர ரறு முகன்
நிதஞ்சிவ சீனி சேதுசெய் சிறப்பே. 15.

தமிழ்த்தாய்க் கரும்பணி தளரா தாற்ற
உமிழ்த்த பெரும்பொரு ளுலகந் துய்த்தலின்
அவிழ்த்த நாதனு ராலய மோங்குக. 16.

கற்பகம் வாழுநற், கைம்மா று கருதார்
சொற்பத மாயுஞ் சோணகிரி யங்ஙனே
நற்பத, நல்குவர் நம்பூ ரணரே. 17.

---

திண்டிவனம், M. S. சுந்தரேசையரவர்கள் இயற்றியது.

தேன்பிலிற் றுந்தெய்வச் செந்தமிழால் பாரோர்க்குப்
கோம்பி விருத்தமுதற் கூறினேன்—தீம்புகழை
இம்மையிலே யேத்தி இனிமையுடன் பாடிடவோர்
கைம்மிகூஉம் எம்மிறைவன் காப்பு. 1.

வேறு

இப்பிர பஞ்ச மதனிலி யாரு மெடுத்துரைக்கும்
விப்பிர மாமணி சாமிநா தப்பெயர் வித்தகன்போல்
அப்பிரம் நாணு றுஞ் செங்கைத் தமிழ ரகத்தினிலே
சுப்பிர மாமணி யென்றோர் அருமணி தோன்றியதே. 2.

வேறு

நீர்மலி பொருநை நிலமகட் கணியாய்
ஆரம் போல அழகுசெய் தோடும்
ஈண்டிய பெருமைகொள் பாண்டிய நாட்டில்
திக்கெலாம் புகழும் திருநெல் வேலி
சில்லா வின்கண் நல்லார் பலர்உறை
வெள்ள காலெனும் வியன்மூ தூரில்
சிவனடி மறவாச் செம்ம லாகிய
பழநிவேள் செய்த பாக்கியத் தாலே
முத்தமிழ் சிறக்க இத்தரை மீது
மாண்புடை மணியென வந்தநற் பெரியோய்!
அன்பருள் வாய்மை அடக்கம் முதலா
பற்பல உயர்குணம் பாரிற் பெற்றுத்
தெய்வ மணங்கமழ் சைவர் குழாத்துள்
சுந்தர மாயொளிர் செந்தமிழ்ச் செல்வ !
விலங்கின மெல்லாம் மெய்ப்பிணி யற்றுத்
துலங்கின மென்று சொல்லும் வண்ணம்
அவைபொருட் டாக அருளோ டுழைத்தோய்!
மக்கள் உவக்க மாட்சிமை யோடு
தாலுக் போர்டிலும் தலைமை நடாத்தி
நாட்டுக் கும்பல நன்மை புரிந்தே
அரசாங் கத்தார் அன்புடன் அளித்த "ராவ்
சாஹெப்" பென்னுந் தக்கவோர் பட்டம்
நானிலத் துற்ற நற்றவ முடையோய்!
கல்வி விளக்கம் கற்பிற் சிறந்த
அகலிகை வெண்பா அறிவோர் போற்றும்
நெல்லைச் சிலேடையும் நீணிலத் தார்க்கே
ஒப்புடன் தந்த அப்பரைப் போன்றோய்!
பாரத நாட்டோர் பண்புடன் உன்றன்
எண்பதாம் ஆண்டினை எங்கும் சிறப்பாய்க்
கொண்டா டிப்புகழ் கொள்வான் வேண்டி
எல்லாம் வல்ல ஈசன் அடியிணை
வணங்கி நாளும் வழுத்துகின் றோமே. 3.

வேறு

*புத்தமுத மெனருசிக்கும் பற்பலநூல் தமிழ்*
*மொழியிற் புலவோர்க் காக்கி*
*வைத்தவொரு வித்தகனும் வெள்ளகா*
*லளித்ததிரு வள்ளல் தன்னை*
*எத்திசையும் புகழ்ந்தோதும் அறிவுடையீர்!*
*இப்படிநாம் ஏத்த லன்றி*
*இத்தலத்தி லடங்காத அவன்பெருமை*
*எப்படி நாம் இயம்பு வோமே!* 4.

வாழி

*பாண்டிய நாடு வாழ்க; பாசமாம் பிறவித் துன்பம்*
*தாண்டிய மேலோர் வாழ்க; தண்டமிழ் மூன்றும் வாழ்க;*
*ஈண்டிய புகழான் மிக்க இயற்றமிழ் சுப்ர மண்யன்*
*வேண்டிய யாவும் பெற்றே விருப்புடன் வாழ்க மாதோ!* 5.

---

## கருந்திட்டைக்குடி, வி. சாமிநாத பிள்ளையவர்கள் கூறியது

*பூமிகு பாண்டி நாட்டுநெல் வேலி பொலிவுறு*
*வெள்ளகால் தன்னில்*
*தோமிலாத் தொண்டை மண்டல வேளாண்*
*தொல்குலத் தினின்முதன் மையோர்*
*ஆமிணை யில்லாப் பரம்பரைச் சைவ வருங்குலப்*
*பெருந்தவ மென்னப்*
*பாமிடை புலவர் துதிசெய வுதித்த*
*பழனியப் பன்னெனும் பண்போன்.* 1.

*செய்தமா தவமே திரண்டொரு மகனைச்*
*செனித்ததென் றுலகுரை செல்வன்*
*மெய்திகழ் சைவ நூலொடங் கிலநூல் மேவுசெந்*
*தமிழினூல் யாவும்*
*பொய்தினை யில்லாப் பொருள்தெரிந் தெவர்க்கும்*
*புதுக்கிய வுரைபல தருவோன்*
*வைதிக சிலன் சுப்பிர மணிய மறுவில்நன்*
*னைமே வாய்ந்தோன்.* 2.

பன்னுறும் ஆழ்வார் குறிச்சியில் மேலப்
பண்ணையிற் றன்னுடை யம்மான்
நன்னய இராம லிங்கவேள் பெற்ற
நலமிகு வேலம்மாள் தனையே
முன்னுறு மனைவி யாய்மணந் தீன்ற
மூத்தபெண் உலகம்மாள்தன்னைச்
சொன்னவப் பண்ணை தனிலம்மான் பேரன்
றலங்(கு)இராம லிங்கவேட் கீந்தும், 3.

மன்னுசீர்த் திருநெல் வேலிமா நகரில்
வளங்கெழு மேதகு சீர்த்தி
பன்னுநல் மேடை தளவாயாங் குடும்பப்
பரம்பரைத் தொடர்புடை மையினால்
துன்னுபேர் அரங்க நாதவேந் தனுக்குத்
தூயதன் னிளையபுத் திரியாந்
தன்னிகர் குணமார் தருகலி யாணி
யண்ணியைத் தகவுடன் றந்தும், 4.

பின்னவ் னிளையான் பேசுசண் முகசு
மாரசா மிப்பெயர்ப் பெரியற்
கின்னல்தீ ரிளைய மனைமகள் செல்லம்
மாளினை யியல்மணத் தீந்துந்
தன்னரு மிளைய புதல்வனுந் தீத்தா
ரப்பவேள் தனக்குமத் தளவாய்
பன்னுசீர்க் குடும்பந் தனிற்றன தருமைப்
பகர்தவு கித்திரி யான, 5.

அருங்குண வடிவம் மாளேனு மமையை
யன்புடன் மணஞ்செயச் செய்தப்
பெருங்குடும் பத்தைப் பேணுமா வைத்துப்
பிறங்குதன் குடும்பமா னதையே
ஒருங்கமை நல்ல குணங்களோ டுற்ற
ஒப்பிலாத் தன்முதற் புதல்வன்
தருங்குலத் தூரிய தண்ணளி சாந்தந்
தருகொடை முதற்குணஞ் சார்ந்தே, 6.

ஆங்கிலந் தன்னிற் பீ. ஏ. ஆனர்ஸா
ஐ. ஸி. எஸ் அதனினும் படித்துத்
தேங்கிய வறிவின் நிறைமனப் பழநி
யப்பவேள் திறம்பட நடத்தப்
பாங்கினி தமர்ந்து பாருல குய்யப்
பகர்தமிழ்த் தொண்டினைப் புரிந்தே
யோங்குறு புகழின் வாழ்வுகந் திருக்கும்
உத்தமன் பத்திமை மிக்கோன். 7.

நத்துசீர்த் திருவா வடுதுறை யாதீ
னத்தினைச் சார்தரு நன்செய்க்
குத்தகை யெடுத்து மத்தியார்ச் சுனத்துக்
குலவியாழ் வார்குறிச் சியில்வாழ்
தத்துநீர் நெட்டூர்ச் சுப்பிர மணிய தனதர்கோன்
றனக்குநன் முறையால்
மைத்துனக் கேண்மை மன்னிய வுறவோன்
வழிவழி சிறக்குநல் வாழ்வோன். 8.

வாயிலா வுயிர்கள் வருந்திடா துறுநோய்
மாற்றுநன் மருத்துவத் துறையில்
ஏயயா வருக்கு மேலியை டிபுட்டி சூப்பரின்
டெண்டென விசைக்க
மேயபல் லாண்டு வேலையைப் பார்த்து
மிக்கபென் ஷனையுமே பெற்றுத்
தாயென நாடு புரக்குநாட் டாண்மைக்
கழகநற் றலைவனு மாகி, 9.

இயன்றபல் லறங்கள் செய்திட லறிந்தே
இனியநல் லரசிய லார்தாம்
பயின்ற 'ராவ் ஸாஹேப்' பட்டமுந் தரவே
பண்புடன் பெற்றுவாழ் உரவோன்
முயன்றுநற் "சுவர்க்க நீக்க" மா நூலை
மொழிபெயர்த் ததனொடு மழகு
தயங்கிடா " நெல்லைச் சிலேடை வெண்பா "வுந்
தரும்" அக லிகையின்வெண்பா "வும், 10.

இம்பரில் யாரும் புகழ்ந்தினி துரைக்கும்
எழின்மிகு நல்லிதி காசக்
"கம்பரா மாய ணத்தின்சா ரமு" நற்
கரிசிலாப் பரிசுலாஞ் செய்ய
பம்புசீர்க் "கோம்பி விருத்தமு" முதலாப்
பனுவல்கள் பலப்பல வியற்றி
நம்பன்நல் லடியே நாளுநன் மனத்தில்
நவில்தரு தூயவாழ் வினனால் 11.

இத்தகு பெரியோற் கெண்பதா மகவை
யெய்துதல் குறித்தறி வுடையோர்
மெத்தவு மன்பின் விழாவுஞற் றினரால்
மேதகு குழுவினிற் குழுமி
அத்தகு சீர்த்திச் சுப்பிர மணிய
அருங்கவிப் புலவனன் னலத்தின்
இத்தரை யினிற்பல் லாண்டுபல் லாண்டா
இறைவன தருளின்வா ழியவே. 12.

---

## மதுரை, U. N. காளிமருத பிள்ளை அவர்கள்

Hon. Magistrate and Contractor,

இயற்யறிய கலி வெண்பா

சீராரும் நெல்லைத் திருவெள்ள கால்வந்த
போரரும் வேளாண் பெருமரபோய்!—நேரார்

திர மணிய ராவ்சாகிப் தேர்பட்டம் சேர்சுப்
பிரமணிய செம்மால்! புகழ்சேர்—தரமுறுநின்

'எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா' யாங்கூடிப்
பண்பதாகக் கொண்டாடும் பாக்கியமின்று—.....................
................................................................நின்
உந்து பெருந்தகைமை யோதிட நா—நொந்தசந்த்

பிற்படுவ தன்றிமுற்றும் பேச வலியறியோம்!
கற்பகமே யன்ன கருணையனே!—சொற்பலவென்?

ஆங்கிலத் தேர்வும் அரசாங்க மேற்பதமும்
தாங்கி யுபகாரச் சம்பளம்பெற்—றோங்குமணம்

ஓய்வுற் றயராதே யுள்ளன்பு பூண்டு தமிழ்த்
தாய் பற்றி சேயாய்த் தவழ்ந்தனை கொல்!—ஆய்வுற்ற

கன்னித் தமிழ்ச்சுவைக்க லைக்கடலை நீந்திநூல்
பன்னிப் பலவுதவிப் பாரோர்க்குச்—சென்னிப்பூ

மாலையாத் தந்து வழிகுலவு மாபுகழோய்!
வாலையாள் வாழு மணிவாக்கோய்—மாலை

மதியமொடு வீணை வான்றென்றல் பொய்கை
பதிவேனில் போன்றபர மேசன்—துதிநீழல்

சென்றங் கிறுமாந்த சிந்தைபொலியக் கன்ம
பந்தங் கெடவாழ்வு பாலித்தோய்!—இந்துரவி

உள்ளளவுந் தண்டமிழும் ஓங்க வுறுமன்பர்
எள்ளளவும் மாறாதே எத்திசைப்பத்—தெள்ளியபே

ராற்றலுடை யாருதவு மாக்கம் பழுதுபடா
ஆற்றந் தருமாறே யூகத்துக்—கேற்ற தமிழ்ச்

சங்கந் தழைக்கத் தமிழ்த்தாய் செழிக்க மக்கள்
இங்கிதந் தயைபொருந்த வேற்றமுறச்—செங்கமலக்

கையாலுதவுதியால்! காராள் குலக்கொழுந்தே!
நையாது மாந்தர் நலப்பேறு—பொய்யாது

நூறு நூறாண்டாக நூற்றாட்டைப் பெற்றதாய்
வீறுயர நீ வாழி! வாழியவே—கூறுமர

புங்குலம்நா ளுப்பேறும் பூண்டினிது யாண்டுமுல
வும் புகழும் பண்புமுயர்ந்து.

பரிதமாற் கலைஞன் சுதன்

## வி. தூ. நடராஜன்

Rural Sanitation Health Officer, Tinnevelly District.

இயற்றியது

சொல்லும் மிருக மருத்துவனே! தூய்தமிழில்
கல்லும் உருகக் கவி செய்வோய்! — நல்லார்
விரும்புதமிழ் ஆயமுக! மேதினியில் பன்னூல்
தரும்புலவ வாழி தழைத்து. 1.

'வெள்ளத்தாற் போகாது வெந்தழலால் வேகாது
கொள்ளத் தமிழும் குறையாது' — வெள்ளக்கால்
சுப்பிரமணி யாநஞ் சுவாமிநா தையன்சீர்
எப்பொழுதும் வாழி இசைந்து. 2.

---

கடையம் பென்ஷன் போஸ்ட் மாஸ்டர்

## K. S. வயித்தியலிங்கம் பிள்ளை அவர்கள்

இயற்றியது

நின்சுமுகத்தினைப் பார்க்க, நின்னமுத மொழி கேட்க
நின்பாற் பேச
என்னிருகண் இருசெவி வாய்க்கு எப்போதும் கிடைத்தில
மற்றிவைகள் மூன்றும்
மன்னுபெரும் பாதகங்கள் புரிந் திருக்கவேண்டும் என்மனம்
எப்போதும்
உன்னை அகலாதிருத்திக் கொள்ள என்ன தவம் புரிந்தது
உரைப்பாய் மன்னே.

T. B. KRISHNASWAMI,

Principal, Ceded Districts College, Anantapur.

We shall not with impertinence of speech
Vex your grey hairs, nor seek with judgment vain
To assess your worth, who have the garnered grain
Of your laborious gleaning. We beseech
God grant you length of life and us to reach
Unto your wisdom ripe and ripe old age
Delightfully familiar with the page
Of culture, apt alike to learn and teach!
You kindled the fire and kept it bright burning
When all was dark and few had Tamil learning!
Shower what a deft and supple instrument
Our ancient tongue could be, sufficient
For subtle turns of wit and Thought sublime
The noblest waftage on the tide of time!

# அன்பர்கள் பாராட்டுரைகள்

## கம்பராமாயண சார ஆசிரியர்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய காலாநிதி
**டாக்டர் வே. சாமிநாதையரவர்கள்**

தமிழ்நாட்டில் தமிழறிவுடைய யாவரும் தெரிந்து படித்தற்கு இன்றியமையாத நூல்களுள் கம்பராமாயணம் ஒன்று. இந்நாட்டினர் கம்பராமாயணப் பிரசங்கத்தை மிகச் சிறப்பாக மதிக்கின்றனர். இது சுவையினால் தமிழுலகைத் தன்வசப் படுத்தியிருக்கின்றது. இதனை எத்தனை வகையில் ஆராய்ந்து பார்த்தாலும் சலிப்பு உண்டாவதில்லை. அப்படியே கம்பராமாயணத்தின் தொடர்புடைய நூல்கள் எத்தனை வெளிவந்தாலும் அத்தனையும் தமிழ்நாட்டாருடைய ஆதரவுக்கு உரியனவாகும்.

இப்பொழுது நண்பர் ராவ்ஸாஹெப் மகா-ா-ா-ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள், ஜி. பி. வி. ஸி., வெளிப்படுத்தி வருகின்ற கம்பராமாயண சாரம் தமிழ் நாட்டாரால் போற்றிப் படித்து இன்புறற்குரிய சிறந்த நூலாகும். முதலியாரவர்களை நான் பல வருஷங்களாக அறிவேன். தமிழ்க் காப்பியங்களிலும் பிரபந்தங்களிலும் ஆங்கில நூல்களிலும் இவர்கள் சிறந்த பயிற்சியுள்ளவர்கள். தமிழில் இனிய வசன நூல்களும் அழகிய கவிகளும் இயற்றும் ஆற்றலுடையவர்கள். பழகுங்காலத்தில் இவர்களுடைய சம்பாஷணைகளினால் எனக்கு உண்டாகும் இன்பம் ஒரு தனி இயல்புடையதாக இருக்கும். தமிழ் நூல்களையும் ஆங்கில நூல்களையும் இடைவிடாமற் படித்துப் படித்து அவற்றிலுள்ள சாரத்தை அறிந்து தெளிவாக்கி இவர்கள் சொல்வதைக் கேட்கும் ஒவ்வொருவருக்கும், நூல்களில் பேரார்வமும் சுவை கண்டின்புறும் ஆற்றலும் இவர்களுக்கு மிகவுண்டென்பது நன்றாகப் புலப்படும்.

இங்ஙனம் மதிநுட்பமும் பரந்த நூலறிவும் உடைய இவர்கள் இளமை தொடங்கியே கம்பராமாயணத்தைப் படித்துப் படித்து இன்புற்று வருகிறார்கள். அந்நூலை எத்தனையோ முறை ஆழ்ந்து ஆராய்ந்து படித்திருத்தலின் அப்பொழுதப்பொழுது கண்ட அரிய பொருள்களைத் தொகுத்து இப்புத்தகப் பகுதிகளில் வெளியிட்டிருக்கிறார்கள்.

கம்பராமாயணம் முழுவதையும் படித்து இன்புறுவதென்பது யாவருக்கும் இயலாத காரியம். முதலியாரவர்களுடைய கம்பராமாயண சாரமோ எல்லோருக்கும் பயன்படும் முறையில் அமைந்திருக்கிறது. தாம் தேர்ந்தெடுத்துள்ள கவிகளுக்குப் பொழிப்புரையும்,கருத்தும்,விசேடவுரையும் இந்நூலில் முதலியாரவர்கள் அமைத்திருக்கிறார்கள். கம்பராமாயணப் பாடல் முழுவதும் இல்லாவிடினும் கதைத் தொடர்பு அறுபடாதபடி இடையிடையே உள்ள வரலாறுகளை எளிய அழகிய வசன நடையில் எழுதியிருப்பதால் இதனைப் படிப்பவர்களுக்கு ஒருவாறு கம்பராமாயணம் முழுவதிலுமுள்ள அமைப்பு விளங்கும்.

பலகாலம் தேர்ந்துதேர்ந்து இன்புற்று வெளியிடப்படுவதாதலின் இப்புத்தகம் முதலியாரவர்களுடைய பலவகை ஆற்றல்களையும் ஆராய்ச்சி முறைகளையும் தெரிவிக்கின்றது.

இதனைத் தமிழ் நாட்டார் படித்து இன்புற்றுப் பார்ப்பார்களாயின் முதலியாரவர்களுடைய பேருழைப்பின் சிறப்பு நன்றாகப் புலப்படுமென்பது திண்ணம். முதலியாரவர்கள் இன்னும் நீண்டகாலம் எல்லா நலங்களோடும் வாழ்ந்து பின்னும் இம்முறையே கம்பராமாயண சாரத்தின் பிற்பகுதிகளையும் வேறு பல நூற்பொருள்களின் சாரத்தையும் வெளியிட்டுத் தமிழ்நாட்டினரை மகிழ்விக்கும்படி செய்தருளும் வண்ணம் அலகிலா விளையாட்டுடைய இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

---

## Mr. MUDALIAR - AUTHOR OF KAMBARAMAYANA SARAM

SWAMI VIPULANANDA MAHARAJ, B. Sc. [Lond ]
[ Emeritus Professor of Tamil, Annamalai University ]
Shivananda Vidyalaya,
Kalladiuppodai, Batticaloa, [Ceylon].

The fame of Rao Sahib V. P. Subramania Mudaliar reached my ears long before I had the opportunity of making his acquaintance. Some of the most eminent Tamil scholars with whom I had the happiness of being associated bore eloquent testimony to the profound scholarship and spotless character of Mr. Mudaliar. His published works revealed to me a well-disciplined mind and a personality that responded to all that is noble and lofty in the domain of literature.

It was in the suburbs of the sacred city of Chidambaram that I first had the pleasure of meeting him. I was then the head of the Tamil Department of the Annamalai University, and the Syndicate had invited Mr. Mudaliar to be the Chairman of the Examination Board of the Tamil Department. Having heard so much of Mr. Mudaliar, and having read a good many of his published works, I was so anxious to meet him and eagerly looked forward to the day fixed for the meeting of the Board. The thoroughness with which the Chairman attended to his exacting duties and his intellectual virility impressed me greatly. After the meeting of the Board, the Chairman spent a few days in the University, to the immense pleasure of the undergraduates, scholars and teachers of the Tamil Department. The talks given by Mr. Mudaliar very often centred round Kamban, and Thiruvallur, two of the greatest figures in the wide realms of Tamil Literature.

The Kamba-Ramayana Inkavi-thirattu. 'a Compendium of the sweetest songs of Kamba Ramayanam' was serially appearing in the pages of the 'Senthamil' for some years past,

and those of us who had read the brilliant interpretation of Kamban given by Mr. Mudaliar were prepared to discuss the subject and to be introduced to further beauties lying hidden in the majestic verse of the greatest epic poet of Tamil land. The Kamba Ramayanam is so vast, running to over forty thousand lines, and so magnificent that none but those who have spent a lifetime in mastering it could speak of it with authority. Mr. Mudaliar had attempted and achieved the stupendous task of mastering Kamban and had brought to bear to the study of Kamban the same energy, earnestness, and thoroghness which he gives even to the minutest task entrusted to him. The result of his extended study and patient research is being published in the 'Senthamil' since 1922. The great work is nearing completion. This book that is now offered to the Tamil Public is the first part 'Bala Kandam' of 'Kamba Ramayana Saram'. As I am writing, I have before me besides the 'Bala Kandam', the 'Ayodhya Kandam', the 'Aranya Kandam' the 'Kishkinda Kandam' and portions of the 'Sundara Kandam'.

As already mentioned, these 'studies' appeared serially in the pages of the 'Senthamil', the official organ of the Madura Tamil Sangam. The Tamil Sangam at Madura continues to preserve in a way the literary traditions associated with the ancient city of the Pandyan Monarchs. Some of the most eminent of contemporary Tamil scholars have identified themselves with the work of the Sangam and this learned Society is always jealous of its reputation. The fact that the present work appeared serially in the 'Senthamil' is in itself sufficient testimony to its high standard of excellence.

The most notable among the works already published by Mr. Mudaliar is the Tamil translation of Milton's Paradise Lost, Book I. The great epic of Milton and the equally great epic of Kamban have many points in common. Both poems immortalize the unconquerable spirit of the respective ages in which they were written. Both poems attempt 'to assert Eternal providence and justify the ways of God to men'.

In both some of the scenes are laid amidst the splendours of Heaven. In Milon's epic the son of God offers to die in man's stead. In Kamban's epic the great God, who forgot His devinity on hearing the wails of a suffering world walks in the midst of kings, outcastes and recluses as a man among men sharing their joys and sorrows.

The sublime and the Heroic in literature naturally appeal to minds that are moulded on high principles and lofty ideals. Herein we find the reason why Mr. Mudaliar was attracted to the two great epics of the East and the West. Born of a well-to-do Vellala family of Tinnevelly, Madras Presidency, on the 14th August,, 1857, Mr. Subramania Mudaliar will soon be entering into his eightieth year. Throughout his life, all who came in contact with him have testified to his devotion to duty, nobility of character, generosity and erudition. The Tamil Translation of Paradise Lost earned the approbation of the greatest European Tamil Scholar, Dr. G. U. Pope. The greatest living Tamil Scholar, Pandit Mahamahopadyaya Swaminatha Iyer, has warmly appreciated the writtings of Mr. Mudaliar. The Tamil introduction to the present work is from his gifted pen.

The learned Mahamahopadyaya says, 'Mr Mudaliar whom I know for several years is highly learned both in English and Tamil, and possesses the rare ability of writing sweet Tamil prose and beautiful Tamil poems. When I came in contact with him, I noted that his conversation afforded me a rare and unique pleasure. As the Mudaliar has assiduously applied himself to the study of Tamil and English litetary works, all who listened to his lucid expositions become well aware of his abiding interest in literature and his rare abilities of interpretation and appreciation. With keen insight and wide general reading he has applied himself from his younger days to the study of Kamba-Ramayanam and the results of his deep research are now presented in the form of this volume.' Nothing more need be said in the way of commending the book to the Tamil reading public.

In his learned commentary on the Bala-Kantam, Mr. Mudaliar beautifully discusses the following among several others equally-interesting topics: Kamban's conception of the transcendent aspect of the Supreme Being; the poet's appreciation of the great work of his predecessor, Valmiki; the points of similarity in the poetry of Valmiki, Kalidasa, Valluvar and Kamban; the immanent aspect of the Divine Being; the existence of souls; the greatness of Womanhood; the generosity, valour and wisdom of the inhabitants of Kosala; the magnificence of the city of Ayodhya; the characteristics of true learning; the qualities to be noted in a great ruler of men; the greatness of the sages; the varying aspects of nature; the opulence of the city of Mithila ruled by the Sage-king Janaka; the meeting of the hero and heroine; the course of true love; the greatness of the dynasty of Rahu; the marks of a true Kshatriya; amusements and entertainments; innocent revelry; marriage rites and ceremonies; and Kshatriya prowess. While describing Kosala, Ayodhya, and the kings of the solar race, Kamban gives us a true picture of Chola Nadu and Chola Monarchs. Kamba-Ramayanam has thus become a national heritage of the Tamil people.

From the time of its composition, Kamban's immortal epic has captured the heart of the Tamilians. Thirty generations have perused it with pleasure, and countless generations of the future will fined in it a source of endless delight. Kamban is not only the greatest Tamil poet, but he does at the same time occupy a very high place, if not the highest, among the galaxy of learned scholars. The popular saying 'கல்வியிற் பெரியன் கம்பன்' is worth noting in this connection. The erudition of Kamban, often makes his poetry difficult of comprehension. It is here that the lucid exposition of Mr. Mudaliar would greatly assist all students of Kamban's poetry. In conclusion, one can confidently say that this book will open the portals of the wide expanse 'that deepbrowed Kamban ruled as his demesne' to those that have not yet entered into those vast realms, and to the fortunate few who have entered therein, the book will serve as a guide to lead them to spots of delight.

## அகலிகை வெண்பா ஆசிரியர் :

ஸேது ஸமஸ்தான மகாவித்வான் பாஷா கவிசேகர
**ரா. இராகவையங்கார்**
தமிழாராய்ச்சியாளர், அண்ணுமலைப் பல் கலைக் கழகம்.

அகலிகை வெண்பா என்பது, அகலிகையைப் பற்றிய வெண்பாவாலாகிய நூல் என்று பொருள் தரும். இது, பாரீ பாட்டு, நளவெண்பா என்ற பெயர்களோடு ஒப்பதாகும்.

இந் நூலியற்றியவர், கல்வி யறி வொழுக்கம் இவற்று னிரம்பிய ஸ்ரீமான் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் எனப் பெயர் சிறந்தவர். இவர் நெடுங்காலம் இந் நாட்டின்கண் விலங்குகளின் உறுபிணி நீக்கும் புண்ணிய காரியத்தை நன்றாற்றிப் புகழ் படைத்தவர். இவர் இராஜாங்க பாஷையாகிய ஆங்கிலத்தை வேண்டிய அளவு கற்றகாலத்தும், நந் தாய்மொழியாகிய நறுந் தமிழை மறவாமல், அதன்கட் பேரன்பு பாராட்டிப் பயின்று அம்மொழியின் மேம்பட்ட கல்வித்திறம் வாய்ந்தவர். பெரிதாகிய கல்வித்திறம் வாய்ந்தார்க்கும் அரிதாகிய கவித்திறம் இவர்க்கு இனிதினமைந்துள்ள தன்மை, இவ்வினிய நூலானன்றி, இவ ரிதற்குமுன் பாடிய 'கோம்பி விருத்தம்' 'சுவர்க்க நீக்கம்' என் னும் நூல்களாலும் இத்தமிழுலகம் நன்கறிந்ததொன்றும்.

கற்றவரெல்லாங் கவிகளாகாராதலான், ஒருவர்க்குக் கவித் துவம், கேவலம் கல்விமாத்திரையா னெய்தலாவதன்று. கவி யாவான், குற்றமிலிலிலக்கண முற்றப்பெற்ற சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய வளமிக்கச் செய்யுளில் உறைக்குக் குறுதி பயக்கும் விழுமிய பொருளை இனிதமைத்துத் தருபவனே என்ப. செய்யுள், இலக்கணம் நிரம்பிய பலவகை யுறுப்புக்களாலும் கண்டார்க்கு விழைவுறுத்தும் அழகுடைச் சரீரமாகுமென்றும், அதன்கண் நிறைந்து விளங்கும் விழுமிய பொருள், உத்தம குணங்கள் மலிந்த ஜீவனுகுமென்றும் துணியலாம். இதனுல் விழு மிய பொருளாகிய உத்தமாபிப்பிராயம் இல்லாத செய்யுளினழகு உயிரில் பிணத்தழகு போல்வதென்று கொள்க.

கூன், குருடு, செவிடு, மூங்கை முதலாகிய குறையுடற்கண் ஆன்மசத்தி நிறைந்திருந்தபோதும், அச்சத்தியினிகழ்ச்சிக்கு உற்ற வாயில்களில்லாமையாற் குன்றி உலகிற்குப் பயன்படாத வாறுபோல, இலக்கணங்களாற் குறைபட்ட வுறுப்புக்களையுடைய செய்யுளின்கண் உள்ள அபிப்பிராயமும் தன்னை இனிது புலப் படுத்தும் வாயில்கள் ஏற்றபெற்றியான் அமையப்பெறுமையாற் பயன்படாதென்று தெரியலாம்.

இவற்றால் மக்கட் குறுதிபயக்கும் நல்லதோ ரபிப்பிராயத்தை அவர்க்கு விழைவூட்டும் நல்லதோர் செய்யுளில் அழகுபெற அமைக்கும் ஆற்றலே கவித்துவசத்தி எனத் தெளியலாகும். இதனையே ஆசிரியர் தொல்காப்பியனார், 'இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்' என்பதனால் நன்கு புலப்படுத்தி யருளினர். இதன்கண் உலக நிகழ்ச்சிக்கு நல்லுடலும் நல்லுயிரு மாகிய இவ்விரண்டன் கூட்டம்போல இன்றியமையாது என்று, இழுமென்மொழியும் விழுமியதும் ஆகிய இரண்டன் கூட்டமும் வேண்டுதல் காண்க.

இவ்வரிய கவித்துவசத்தி, உத்தம குணங்கட்கிருப்பிடமாகிய நல்ல மனோபாவத்தா லுண்டாவதொன்று. இஃதொருவன் பிரயாசையான் மட்டும் உண்டாவதின்று என்பது அறிஞர்க் குடன்பாடு. 'பாவருங் கிழமைத் தொன்மைப் பருணிதர்' என்று, கல்வியிற் பெரியார் கூறினர். இதன்கட் பாவருங் கிழமை என்றது, பாடல் இயல்பாகவே வரும் உரிமை என்றவாறும்.

இப் பாவருங் கிழமை, பண்டைக்காலத்து இத்தமிழ் நாட்டு உத்தம மனோபாவத்தால் ஆண்மக்கள் மட்டிலில்லாமற், பெண்மக்கள்பாலும் மலிந்து நிலவியது என்பது, வான்றோய் நல் லிசைச் சான்றோராகிய சங்கப்புலவருள் எத்துணையோ பலர் பெண்பாலாராதலாற் றெரிந்தது. பெண்பாலார் செய்யுட்டிறம், 'கந்துக வரி', 'அம்மானை வரி', 'ஊசல் வரி', 'குரவைப்பாட்டு' முதலிய விளையாடற் பாடல்களானும் 'பிணக்கானம்' முதலிய இரங்கற் பாடல்களானும் நன்கறிந்துகொள்ளலாம்.

* * *

பஃறொழின் மாந்தரும் இனிய ஓசையும் பொருளும் நிறைந்த பாடல்களையே தமக்கு இளைப்பாறி மகிழும் வாயிலாகக்

கொண்டு உத்ஸாகத்துடன் போற்றி வளர்க்கும்படி உத்தம மனோபாவத்தையும் அதற்கேற்ற இன்சொற் றொடையையும் ஊட்டி இக் கவித்துவசத்தியை இந்நாட்டுப் பலவகை நிலத்தும் பரவச்செய்த மகோபகாரிகள், பண்டை நல்லிசைப்புலவரும் அவரை அன்புடனாதரித்த மூவேந்தரும் பெருவள்ளல்களும் ஆவர். மனோபாவத்தின் சிறப்பானன்றே "தேவரனையர் புலவர்" என்பது. "தேவர் தமரனைய ரோரூ ருறைவார்" என்பது அப் புலவர் சொல்லுடனும் பொருளுடனும் பயிலுகின்ற சிறப்பினால் அவ்வூராரும் அப்புலவர் தமரோடொப்பர் என்று தெளிவித்த வாறும்.

இத்தகைப் புலவர்கள் இக்காலத்து மிகவுங் குறைதற்குக் காரணம்:

'............................................................................ பெற்ற தாயிருக்க மணைவெந்நீ ராட்டுகிரோ மாட்டாத தகவற் றீரே' என்று கலிகன்றியார் அருளிச்செய்தபடி தமிழ் நிலத்துப் பிறந்த பலரும், தம்முயிர்க் குறுதிபயக்குந் தந் தாய்மொழியை விட்டு வேற்றுமொழியையே ஆளப்புக்கதேயாகும்.

ஜீவனோபாயத்திற்காக ஒவ்வோர் தொழிலை மேற்கொள்ளினும், நல்லோனொருவன் தன் பாஷை, ஜாதி, மதம் அவற்றிற்குச் சிறந்த ஒழுக்கம் வழக்குகளை விடாது போற்றுவானாயின், அவனே முன்னைத் தொட்டுப் பெருமை வாய்ந்த தன்றேயத்தை யழியாது காத்து வளர்ப்பவனாவன். ஒரு தேயத்தார் மற்றையரின் வேறாக நிலைத்து வளர்தற்கு இப்பாஷை முதலியன முக்கியமான வேர்களாக விளங்குதல் ஒருதலை. தன்றேயத்தின் பாஷையை மறப்பவன், தன்றேயமாகிய பல்லோர் பயன்றுய்க்கும் பழுமரத்தின் வேரினை அடியறுத்தவனாதலுண்மை.

இங்ஙனந் தானும் பிறரும் வாழ்தற்கு இனிய நிழலும் உரிய பயனும் அளிக்கும் தாய்நாடாகிய பழுமரத்தின் அடிவேரறுப்பார் பலர் மலிந்த இக்காலத்து எத்துணையோ இடையூற்றை எதிர்த்து அதனைப் பாதுகாத்து வளர்க்கப் புகும் பெரியார் மிகவும் அரியரே யாவர். இவரே இக்காலத்துச் செயற்கரிய செய்வாராகிய பெரியர் எனப்படுவார். இவ்வரிய பெரியார் மிகச் சிலருள், இச் சுப்பிரமணியப் பெருந்தகையே முதலியார் என்று யான் கூறுதற்குப் பலரும் உடன்படுவர் என்று கருதுகின்றேன்.

இவர் தமிழன்புந் தமிழறிவுந் தமிழ்க் கவி வன்மையும் பல்காலும் பயின்றறிந்த நன்மக்கள் இதனைத் துதிவாதம் என்று கருதாரென்று துணிகின்றேன்.

*　　　*　　　*

இவ்வினிய நூல் பன்னெறியானும் கற்றார்க்குப் பெருவிருந்தாதல் ஒருதலை. இந்நூல், செந்தமிழ் நாட்டின் செய்தவப் பயனாகத் தோன்றிய பெருந்தமிழ் வேந்தரும் நுண்ணிய பேரறிவானும் அரசியலைச் சீர்பெற நடாத்தும் தகைமையானும் செந்தமிழ்ச் சங்கத்தினைத் திறம்பெறப் பாதுகாத்தலானும் தேவ காரியமும் இராஜகாரியமும் சிறக்கச்செய்யும் ஆற்றலானும் அறிவாளர் பலரும் மனனோடு வாயாரப் புகழும் கண்ணிய சிலரும் எம்போற் புலவர்க்கு எய்ப்பினில் வைப்பும் ஆக விளங்கும் மாட்சிமைதங்கிய ஸ்ரீமான் இராஜ ராஜேசுவர சேதுபதி மகாராஜா அவர்கள் நல்லவைக்கண்ணே இவ்வாசிரியர் அரங்கேற்றிய காலத்து, ஆண்டு அந் நல்லவையினை அணிந்த தமிழ் மக்களெல்லாம் இதன் அருமை பெருமைகளை மிகவும் பாராட்டியதனை யான் நன்றறிந்துளேன். இஃது அக்கால நிலையினும் அறிஞரெல்லாம் விழைவுறுமாறு பல் வகை அழகுடனும் சிறந்து வளர்ந்து விளங்குகின்றது. இந்நூலினைத் தமிழ்க்கணியாக உதவிய ஸ்ரீமான் முதலியாரவர்கள் இதுபோல இன்னும் பலநூல்களை இயற்றிப் புகழும் புண்ணியமும் பெற்றுவாழ இறைவன் திருவருள் புரிக.

---

## Mr. MUDALIAR – AUTHOR OF AKALIKAI VENBA:

K. SUBRAMANIA PILLAI, M. A., M. L.

This is a beautiful poem by Mr. V. P. SUBRAMANIA MUDALIAR, G. B. V. C., who combines in himself the critical acumen of a scholar with a capacity for developing poetic art. This book is an adaptation of the Ramayana Episode about the relation of Gautama's wife with Indra. The special charecteristic of the theme is that it is full of human interest and affords a wide scope for the conflict of deep-rooted feelings in human nature. Thus it is a theme which can never fail to inspire interest in us, so long as human nature is constituted as it is.

The author besides choosing a proper subject for his poem has taken pains to deliveate in detail the various phases of thought that may surge in the mind of an ideal woman placed in a most trying situation under the sudden clutches of one who set the realisation of his passion above his life and his honour. The one point that should excite the admiration of every reader is the fidelity to consistency which the author has made a point of keeping up throughout his poem. Akalika is according to Hindu notions one of ideal Indian women for chastity and it is therefore highly essential that her chastity should not in the least be stained by the betrayal of any moral weakness on her part. The idea that she fell into a trance at the thought of her escape from the grip of Indra next to impossible, shows her at her best, and it is instinctions to note that the course of being transfered into a stone gave her pain from a selfless point of view (ie., that she should be deprived of the opportunity to minister to the holy functions of her Lord Gautama.)

This traditionary legend seeks to restore her to her original purity of body and mind. Thus Akalikai, in spite of the incident, stands an untarnished model for chastity. For presenting the story in this fashion, the critical world is much odliged to the author.

As regards the form of the poem, it is written in a metre which is difficult for expressing beauty of poetic art for an ordinary verse-maker. That the author has employed it without prejudice to clear, consistent and eloquent expression of his ideas speaks volumes about his capacity for poetic composition. The poem is also evidence of the author's deep study of Tamil classical literature. The poem presents many pleasant classical recollections in a style suited to modern taste. His tendency in this direction is more classical than romantic. In brief the poem has hardly any equal of its kind at the present day both in respect of its metre and its dictum.

—JUSTICE 22-4-21

## கோம்பி விருத்தத்தின் ஆசிரியர்:

ராய்பஹதூர்

### சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்

*கோம்பி விருத்தம், குமைந்து நரியெலிகள்*
*தேம்பி யிறும்புஞ் சிறைவளையும்—போம்படி,வந்*
*தாறு முகில்விதா னத்தா லரியணைவீற்*
*றீறாய மின்றிருந்த தே.*

கோம்பிவிருத்தம் மெய்யாகவே என் மனதுக்கு விருந்தாகியது. அது நரிவிருத்தத்தையும் எலி விருத்தத்தையும் காடுகளிலும் வளைகளிலும் மறைவிடந்தேடி யோடச்செய்து, பூவாகிய வயிரங்களாலும் காயாகிய மரகதங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற உயர்ந்த பைந்தருச் சிங்காதனத்தின்மேல் உடுமணிகளிழைத்த அகல் விசும்பு விதானத்தின் கீழ்க் கெம்பீரமாக அரசு வீற்றிருக்கும்போலும். கோம்பி விருத்தத்தின் நடை மிகவும் மனோகரமானது. அதன் உரை அதனை வாசிக்கும் பண்டிதரும் வித்தியார்த்திகளும் ஒரு நிகராக இன்பம் அநுபவிக்கும்படி உதவுகின்றது. இந்நூலாசிரியருக்கு (இதுபோன்ற நூல்கள் இயற்றுதலில்) ஊக்க முண்டாகும்படி தமிழறிந்த சகலரும் உதவி புரிவாரென நம்புகிறேன்.

---

## இராமாயண உள்ளுறை பொருளின் ஆசிரியர்:

J. M. NALLASWAMY PILLAI,
CUDDALORE N. T.

The following papers on '*A Critical Review of the Ramayana or An Account of South Indian Castes*' were originally contributed by Mr. V. P. Subramania Mudaliar to *Dakshina Deepam*, a weekly newspaper of Salem, when it was in the hands of its talented editor, the late Mr. D. Wilson.

They purport to contain the views of the late Professor, P. Sundaram Pillay of Trivandram College, on some of the social and ethnological questions connected with Southern India. It may not be well-known that the Professor held some strong views on these questions, but he was lost to Southern India, before he gave full expres sion to his views in print and from the platform. My acquaintance with the professor was, alas! only short, but we carried on a brisk correspondence in the short time. Just before his death, it was his intention to go to Ooty and stay there for a couple of months, and he intended to see our people in different towns, and speak to them on some of these topics. And he wrote, "I am anxious to be acquainted also with the leaders of our Vellala Caste there, for purposes I have explained in a former note. I don't hope to make converts soon, but it is well to make a start.........Please instruct how I could make any impression upon them. I trust you can write to such of them as you have influence with, so as to prepare them to give me a hearing. I want to do my work in a quiet, silent and private fashion. It would be enough if they are led to think that I have paid some attention to the history of the Tamils, and feel keenly their fallen condition. The rest will follow in due course when I shall have matured my scheme."

* * *

I give these extracts to corroborate Mr. Subramania Mudaliar's statement that the views embodied in his paper were those he gathered from the late Professor at a private conversation in Madras. And it is the misfortune of the Tamil race that he did not live to mature and elaborate his views and publish them to the world. He must have collected valuable materials, and I am not in a position to know what has become of them, though I made some attempt at the time to get at them. Anyhow my friend Mr. Subramania Mudaliar

is to be heartily congratulated for his earnest attempt at preserving a fleeting conversation and giving it to the world.

* * *

Going into the contents of these papers, my friend divides his subject under the following headings : *Chapter I* – Condition of South Indian People at the time of Ramayana. *Chapter 11* – Condition of South Indian people before the time of Ramayana. *Chapter 111* – Condition of South Indian People after the time of Ramayana. *Chapter IV* – Caste defined. And the present condition of South Indian castes.

In the first chapter, he contrasts the faults and virtues of the Heroes of Ramayana with those of Ravana and Vali, who stand forth as the travesty of the Tamil people in the hands of the Poet Valmiki as admitted by almost every oriental scholar of any fame. And Swami Vivekananda also gave his adherence to this view in one of his lectures, and by the contrast he brings out the high state of civilization the Tamilians had attained in fine arts, in arts of Government and in morals. When pundits and preachers declaim against the vileness of Ravana and Vali in abducting other people's wives, they forget that in those days, as they understood the art of war and Government, it was the common practice for one conquering king to remove to his harem the wives of his fallen foes. And one can readily understand the conscience of such a sage and patriarch as King Bhishma being silent at the unnameable outrage perpetrated on Droupadi, who was won but in a game and not even in war. These practices existed even in European countries at a much later age. The point to be noted is that though Ravana abducted Sita, she was not forced against her inclination, which has to be contrasted with the utter barbarity displayed by Lakshmana in dealing with *Surpanakai*. And it has to be noted how

Tara and Mandothari were regarded as types of chastity and Hanuman as type of loyalty and truthfulness.

* * *

In the 2nd chapter is explained the ancient condition of the people in the Tamil Land. The name of the people followed the land or tract they occupied. The land is divided into five divisions or *tinai* ( திணை ) called *marutham* (irrigated country) *mullai* (forest land) and *kurunji* (hilly country), *palai* (sandy desert) and *neithal* (seaboard) and the names of the dwellers of these tracts were respectively *mallan* or *pallan* or *uzavan* (cultivator) *idaian* (shepherd), *kuravan, maravan, paravan;* and their callings practices and usuages &c, were in sense different yet there was no barrier for one man of one tract settling in another and intermingling with the people of the new territory. And he instances how Jivaka (in the famous Tamil Epic Jivaka Chintamani) travelled about and married wives in different parts of the land. All were regarded as equals and no distinctions existed among them till at a later and more civilized time, the distinctions of higher and lower, as Mudaliar, Idayar and Kadaiyar came into existence. The people from the north were solely responsible for introducing the distinctions of Brahman &c. And we find poet Kabilar himself born of Brahman parents, charging his people in his, famous Agaval (vide the translation of Rev. Dr. G. U. Pope in the Siddhanta Deepika) with being responsible for such introduction in the Tamil land "நாற்குலச் சாதி யிந்நாட்டில் நீர் நாட்டினீர்."

In the 3rd chapter, it is shown that the Aryan settlers did intermarry for a time with the people of the Tamil land and there was greater intercourse and commerce between the two peoples and as I have shown above, they had identified themselves with each other, but later on they became more erclusive, and by giving up meat and drink they raised themsemselves much more in the estimation of the people as even

to day some non-Brahmans try to raise themselves; and the much despised Kali age is much more responsible for the social elevation of the Aryans than the other Yugams.

* * *

In the fourth chapter, the writer divides caste into natural and artificial. The division into Negroes and Chinese would illustrate the first division, the ethnological one. The artificial division into Brahman etc., exists in India alone. Whatsoever distinction existed in the beginning between the Tamils and the Aryans, they were all wiped out by ages of intermingling between two races; and now no ethnic difference can be perceived between the two races. And he quotes from Mr. Bhandarkar, that caste was even a later introduction in the Aryan Polity. And in conclusion, he points out the iniquity of preserving such caste distinctions, which has resulted at least in driving the lower castes in Hindu society to seek the cloak of other religions to better social prospects.

I have barely indicated the main points discussed in these pages, and it will not be possible to go into all the matters in a bare introduction, and I hope my friend Mr. V. P. Subramania Mudaliar would bring out an English translation in due course. And I have every hope that these pages will tend to stimulate healthy enquiry and research into the dark pages in the history of our ancient mother-land.

---

## சுவர்க்க நீக்கம் முதற் காண்ட மொழி பெயர்ப்பு ஆசிரியர்:

Dr. G. U. POPE
Indian Institute, Oxford

It is a strange thing that the great English Christian Epic should be reproduced, in this end of the century, in Tamil, for the use principally of non-Christians, and that the translator himself should be a non-Christian. One of the readers of the Book in India has called it a Christian Puranam, and this in

fact it is. An objection which we should have felt inclined to urge, if consulted as to the benefit of the translation of Paradise Lost, would have been founded upon the fact that in itself the Poem is, to a very great extent indeed, merely legendary; and so embodies very much, which, though it has gained acceptance among many Christians, is certainly no part of the Christian revelation.

And in India we are bound more especially to guard ourselves from giving any encouragement to the substitution of myths and fables for the authentic teaching of the great Master himself.

But if the expediency of the translation be conceded, we have no words but of hearty commendation for the way in which this first instalment of the work has been completed. It is not possible to give here any extracts which will prove the fitness of the translator for his arduous task, but we feel bound to say, after an exceedingly minute and careful study of the lines, that the *translator has succeeded to a very great — indeed a surprising — degree in making fluent and interesting Tamil verse out of the stately poetry of the great Puritan.* It has always seemed to us that Tamil epic metres might be made more simple, and Mr. Sundaram Pillai (whose early death has filled the mind of every lover of Tamil with profound sorrow), in his remarkable poem, *The Manonmaniyam*, and especially in the ballad *The Indian Hermit*, has produced Tamil verse which (to our foreign ears) is exquisitely pleasing and appropriate. This translation we confess we do not find quite so pleasant and easy, and some of the quatrains took more time to understand than we could well spare! After all, poetry should not only be elegant, artistic, and ingenious, but flowing, stimulating and pleasant to the student. Perhaps the translator may be able to give us something less archaic and enigmatic in some of the following cantos. Turning from the translation to the apparatus of introduction, history, biography, prose commentary and notes, we can find no words sufficient

to express our thankfulness for them. If the numerous students of English in South India will 'get up' their subject with these helps, they will doubtless find that in comparing the English and Tamil of paradise Lost, line for line, they will have a most profitable course of study marked out. The book is only fit for conscientious students, and to them it must be invaluable.

It may be impossible to give the history of the great Master in fitting Tamil verse, but it would be a glorious task for the right man! The Tembavani is a very wonderful Tamil poem, but it exhibits, and appears to us to intensify, the peculiar defects of Tamil poetry; and the wild legends, in which real Christian teaching is utterly lost, render it, from our point of view, a really mischievous book. The translator of Paradise Lost must beware of the danger of depraving the taste that he would fain improve! We cannot but think that a great deal in the later cantos should be omitted.

We may say in conclusion that the *writer's prose Tamil style is remarkably good,* and *that quatrains 38—60 are exceedingly spirited;* while somethings in the poetical preface irresistibly provoke a smile.

Certainly Tamil scholars are awaking, and we trust that, more and more they will be able to execute translations, publish editions of their own classics, and do original work which may benefit generations to come.

*N. B. The Rev. Dr. again appreciatively refers to this work in the introduction of his monumental Translation — Thiruvachakam.*

---

## நெல்லைச் சிலேடை வெண்பா ஆசிரியர்:

### கவிராஜ நெல்லையப்ப பிள்ளை அவர்கள்

திருமணங் கமழுங் கமலமென் மலரிற்
றிசைமுகச் செம்மல்செவ் வாயாற்
பெருமணங் கடக்கு முந்திமா தவன்விண்
பிலத்திலுந் துருவிட நீண்ட
வருமணங் கடக்குஞ் சரமுரித் தவரு
மானநல் வரதர்பொன் மாலை
தருமணங் கமழு மேனியர் நெல்லைத்
தலம்வளர் தானநா தருக்கு, 1

வழுதிநா டதனிற் பொன்னகர் மான
வளங்கெழு சோழவந் தானிற்
பழுதிலா திருந்தச் செழியநாட் டிடைமேல்
பால்வயங் கெழிற்பயோ தரத்தின்
தொழுதியார் பொழில்சூழ் வெள்ளகா லெனுந்
தூயமா நகரில்வான் றன்னி
யெழுதிவா கரனைப் பொருவவா துலர்தம்
மிரவொழித் திருந்தவோ ரேந்தல். 2.

அத்தநீ டியநல் லாறையில் வாழ்நம்
அழகப்ப பூபதி யங்கச்
சித்தசன் தளவாய் குமாரசு வாமிச்
சேரன்செங் குவளையந் தெரியற்
கொத்தலர் புயத்திவ் விருவர்தம் பெருமைக்
கோக்குடிச் சம்பந்தங் கொண்ட
வுத்தம னருமைச் சுப்பிர மணிய
னூற்றிய தவத்தில்வந் துதித்த, 3.

பணமலி நிதிக்கோன் றன்னையொப் பாகும்
பழநியப்பன் றரு பாலன்
குணமலிநந்த நிதிகவி மாரி
கொழுத்திடுஞ் செந்தமிழ்க் கொண்மூ
விணைமதி வதனன் கருணைதத் திடுநல்
விழியினன் வியப்புறும் விவேகன்
வணமலி தரளத் தார்கிடந் திலங்கு
மணியெழு வனையதோள் வள்ளல். 4.

வேறு.

வன்னந்தந் தாதரிக்கு வளைகளங்கண் மாதொர்கல்லில்
வரத்தாள் வைத்தோன்
முன்னந்தந் தாதரிக்கு குவெனமன்றி னடித்திடுநம்
முதல்வர் செல்வத்
தன்னந்தந் தாதரிக்கு விலுமணுகா தருள்சம்பு
சரண்போற் றியார்க்கும்
அன்னந்தந் தாதரிக்கு மெங்கள்சுப்ர மண்யனெனு
மதுல னன்பால். 5.

வேறு.

அருண்மணங் கமழும் பொருளினின் சுவையும்
மறைதரு சொற்சுவை யமைவும்
மருவுற விசைத்த சிலேடையின் வியப்பும்
வாய்த்தநற் கற்பனை வனப்பும்
தருபத மதுரங் கொழித்திடு பொலிவுஞ்
சார்திரி புயமகத் தகவுந்
தெருடரும் யாரும் புகழ்தர நெல்லைச்
சிலேடைவெண் பாத்தமிழ் செப்பி, 6.

ஆயிரத் தறுபத் தாறெனு மாண்டி
லணுகுறும் விகிர்தியாம் வருடம்
எய்தரு மகர மாமதி மருவு
மெட்டுட னேகமார் தேதி
வாய்தரு புந்தி வாரநற் பகற்று
வாதசி யுந்திங்க ளுளுந்
தோய்தரு கும்ப லக்கின முஞ்சேர்
சுபதினம் பத்திமை தோன்ற, 7.

வண்ணவான் குன்றின் மணிவிளக் கென்ன
வளர்தொண்டை மண்டல மரபு
கண்ணகன் ஞால முழுவதும் விளங்கக்
கருதிமுற் கவியினிற் கழறும்
பண்ணவா வின்சொற் காந்திம திக்காய்
பங்கமர் பரமர்மெய்ப் பத்தர்
எண்ணமா ரவ்வேய் வனத்தர்சந் நிதியி
லினிதரங் கேற்றினன் மாதோ. 8.

### மு. ரா. அருணசலக் கவிராயரவர்கள்

சீர்கொண்ட சொற்சுவை பொருட்சுவை சிலேடைச்
செழுஞ்சுவை முதிர்ச்சி செறியுந்
திரிபுயம கங்கற்ப னைச்சுவைகண் முதலிய
சிறப்புறாஉ நெல்லை வெண்பா
வேர்கொண்ட வெள்ளகால் வள்ளல்சுப் பிரமணிய
விறைவனுங் கவினு ரேறிங்
கியற்றின னதுகண்டு புகழேந்தி யன்றியீ
தியம்புவா ரில்லை யென்னப்
பேர்கொண்ட பாவக ருரைத்தசொன் முழுதும்
பிழைத்ததிலை தென்ன பெற்றி
பேசுவீ ரென்பார்க்கு மேலோர் மொழிந்தசொற்
பிழைபடுத லில்லை யென்னும்
பார்கொண்ட விவனுமுயர் கல்வியாற் கேள்வியாற்
பரவுபுக ழேந்தி யான
பண்பினற் பாடின னென்றுரைப் பாமறிஞர்
பலருமொப் பும்ப டிக்கே.

முல்லைச்சி லேடை வெண்பான் மொய்குழற்சொன் மாதங்கர்
நெல்லைச்சி லேடைவெண்பா நிர்மித்தான்—சொல்லைப்
பிரபலமாக் கொண்சுப் பிரமணிய வள்ளல்
வரபலமாக் கொள்வாருள் வார்.

---

## தமிழுக்கு வாய்த்த அரும் புதல்வன்:

**டி. கே. சிதம்பரநாத முதலியார்,** B. A., B. L.,
Ex. Commissioner, H. R. E. Board

இந்த உலகில் சிலர் முஷ்டி யுத்தத்துக்கென்றே பிறக்கிறார்கள். அப்படிப் பிறந்தவர்களில் ஒருவர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள். முஷ்டி யுத்தம் செய்யவேண்டிய அவசியம் இரண்டு கைகளிலும் உள்ள தசை நரம்பு எலும்புகளில் அமைந்து கிடக்கிறது. உடல் உறுப்புக்களில் கிடப்பது ஒருபுறம் இருக்க ரொம்ப ஆழமாயும் அசைக்க முடியாத படியும் பதிந்து கிடப்பது உள்ளத்தில்த்தான்.

கைக் குத்துச் சண்டைக்குப் பயின்றிருந்தால் முதலியாரவர்கள் உலகப் பிரசித்தி பெற்ற வீரர்களை ஒருகை பார்த்திருப்பார்கள். எஞ்சினீர் தொழிலில் பிரவேசித்திருந்தால் குறைந்த பக்ஷம் பொதிகைமலையையாவது ஒரு குடை குடைந்து மலையாளத்து மழை வெள்ளத்தைக் குடைசல் வழியாக வடித்து, தமிழ் நாட்டை வளம்படச் செய்ய முயன்றிருப்பார்கள். அவர்கள் கைக்குமுன் பாறைகள் எல்லாம் நொறுங்கிப் போயிருக்கும். கல்லுளி மங்கன் போன வழி, கல்லுகள் எல்லாம் தவிடு பொடி அல்லவா?

எஞ்சினீர்த் தொழில் இல்லை என்றால் ஜாதகம் பொய்த்தா போய்விடும்? பாறைகளும் கருங்கல்லுகளும் தமிழில் இருக்கத் தானே செய்கின்றன.

பதினாறு வயசுப் பிராயமாய் இருக்கும்போதே தமிழிலுள்ள சிலேடை, திரிபு, யமகம் என்ற தமிழ்க் கற்பாறைகளை உடைக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்த வர்க்கத்துச் சித்திரக் கவிகள் எவ்வளவு வைரம் பாய்ந்திருந்தாலும் முதலியார் அவர்கள் கைக்கு வந்தால் தாமாகப் பிதிர்ந்து போய் விடும். தமிழ் பாஷை இடம் கொடுக்கக் கூடிய சிலேடை வின்னியாசங்களை எல்லாம் ஒருவாறு அளந்துவிட்டார்கள். அதனால் நெல்லைச் சிலேடை வெண்பாவை (நூறு செய்யுள்) எளிதில் செய்துவிட முடிந்தது. அது அந்தக் காலத்துப் (50 வருஷத்துக்கு முந்தியகாலத்துப்) புலவர்களுக்கும் கவிராயர்களுக்கும் பெரும் வியப்பாகவே இருந்தது. சிலேடை யமகங்களிலுள்ள விசித்திரங்களை அனுபவித்துப் பழகியவர்களுக்குத்தான் நெல்லைச் சிலேடை வெண்பாவின் திறம் தெரியவரும்.

தமிழ் நூல்களை ஒழுங்காகப் படித்து முடித்து வைத்தவர்களும், காஞ்சிப்புராணமும் தணிகைப்புராணமும் இருப்புக்கடலை என்று சொல்லுவார்கள். அவற்றின் பாட்டுகள் ஒவ்வொன்றிலும் அநேகமாய்ப் பலமான முடிச்சு ஒன்றோ இரண்டோ போட்டு வைத்திருக்கும். ஆனால் எப்படியாவது முடிச்சுக்களை இழைஇழையாக அவிழ்த்து இழைகளைக் கையில் தூக்கி உதறிக்காட்டுகிற மாதிரி, அச்செய்யுள்களிலுள்ள பொருள்களை முறைப்படுத்தி கருத்தைக் காட்டுவார்கள்.

மேலும் மில்டனுடைய சுவர்க்க நீக்கம் பளுவான கருங்கற் பாறை என்று ஆங்கிலப் புலவர்கள் சொல்லுவார்கள். இதர பாஷைகளில் மொழிபெயர்க்க முடியாதபடி அவ்வளவு கஷ்டமாய் அமைந்தது. ஒரு ஆசிரியர் பிரஞ்சு பாஷையில் மொழிபெயர்க்க ஆரம்பித்துத் திணறிப்போய்விட்டாராம். அப்பேர்ப்பட்ட இதிகாசத்தைத் தமிழில் மொழிபெயர்க்கத் துணிந்து முதற்காண்டத்தை விருத்தப்பாவில் மொழிபெயர்த்து விட்டார்கள். மூலத்தி லுள்ள ஒவ்வொரு விஷயமும் அடையுமே அப்படி அப்படியே விருத்தத்தில் அமைந்துகிடக்கும். மூலத்தையும் மொழிபெயர்ப்பையும் ஒத்துப்பார்த்தால் அது பகீரதச் செயலென்றே தோன்றும். ஜி. யு. போப்பு முதலான ஆசிரியர்கள் இம்மொழிபெயர்ப்பைப் பார்த்து இது ஒரு அசாத்தியமான வேலை என்று அதிசயித்திருக்கிறார்கள்.

மேலே சொன்னதெல்லாம் முஷ்டியுத்தசக்தி அடங்கிக் கிடக்கிறதென்பதைக் காட்டுகின்றன. ஆனால் அதை வெளிப்படையாக இன்றும், அதாவது அவர்களுடைய எண்பதாவது வயதிலும் காணலாம். ஏன், சென்ற அறுபது வருஷமாகவே முஷ்டியுத்தம் சதா செய்துகொண்டே வந்திருக்கிறார்கள் என்றால், கலப்பில்லாத உண்மை. சென்னை மில்லர் காலேஜில் மாணவராய்இருந்தபோது ஆரம்பித்தது இன்னும் நடந்தேவருகிறது. இங்கிலீஷ் பாஷை தான் முக்கியமாக வேண்டியது, தமிழ் தெரியவேண்டியதெல்லாம் அலங்காரத்துக்காகத்தான் என்று யாராவது முதலியாரவர்கள் முன்னிலையில் சொல்லிவிடவேண்டியது; அவ்வளவுதான். வீராவேசம் அப்படியே வந்துவிடும். பொங்கிவிடும். அடங்கிக்கிடந்த முஷ்டியுத்த வீரன் வெளிக்கிளம்பிவிடுவான். பக்கத்தில் நிற்க நேர்ந்தவர்பாடு ஆபத்துத்தான். ஆனால் இப்போது தமிழ் மக்களுக்கு முக்கியமான பாஷை, இலக்கியச்சுவையை அனுபவிக்கக்கூடிய பாஷை, தமிழே என்று எல்லாருமே அங்கீகரித்து வார்த்தை ஆடுவதால் முதலியார் அவர்களுக்குக் கோபாவேசம் வருவதற்கு அவ்வளவாகச் சந்தர்ப்பமில்லை. அது அவர்களுடைய யோகம்.தேசிய உணர்ச்சியோடு கலந்துவந்த தாய்மொழிப்பற்றும் உணர்ச்சியும் தமிழ் நாட்டிற்குப் புதிய யுகம் பிறந்துள்ளதென்று சொல்ல இடந்தருகின்றன. இந்த யுகத்தை வரவேற்பதற்கான ஆர்வமும் களிப்பும் முதலியார் அவர்களிடத்தில் இருக்கிற அளவு வேறு யாரிடத்தில்தான் இருக்கக்கூடும்?

சென்ற நூறு நூற்றைம்பது ஆண்டுகளாக மேல்நாட்டில் முன்பு என்றும் இல்லாத அளவில், விஷயங்களைப் பகுத்துப் பகுத்து உள்ளாகக் கிடக்கும் அமைப்புக்களைக் காணுவதும் கண்டனுபவிக்கிறதுமாய் இருக்கிறார்கள். இந்தப் பகுத்தறிவியலை ஸையன்ஸ் உணர்ச்சி என்று சொல்லவேண்டும்.

மேல்நாட்டார் நம்முடைய பள்ளிக்கூடங்களில் இன்னும் ஸயன்ஸை நேர் முறையில் சொல்லிக்கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்ல இடமில்லை. ஆகவே நம்மவர்களுக்கு ஸையன்ஸ் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. ஏதோ அங்கொருவர் இங்கொருவர் ஸையன்ஸில் நிபுணர்களா யிருந்தால் ஏனையோருக்கு ஸையன்ஸ் உணர்ச்சி இல்லை என்பதை எடுத்துக்காட்டிச் சொன்னதேயாகும். ஆனால் முதலியாரவர்கள் ஸையன்ஸ் உணர்ச்சியை அபூர்வமாக வளர்த்தவர்கள். மேல்நாட்டு ஸையன்ஸ் சம்பந்தமான நூல்களை நெடுகிலும் படித்து அவைகள் வெளிப்படுத்தும் உண்மைகளில் மோகம் கொண்டவர்கள். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் வெளியிட்ட கல்வி விளக்கம் என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்ததிலிருந்து மேல்நாட்டு ஸையன்ஸ் முறைகளில் இவர்களுக்கு எவ்வளவு ஈடுபாடு என்பது தெரியவரும். குதிரை வைத்தியத்தையும் கால்நடை வைத்தியத்தையும் கற்கும்போது ஏதோ வைத்தியத் தொழிலுக்கு உபயோகப்படும்படியாக மாத்திரம் கற்றதென்று கருதக்கூடாது. குதிரை கால்நடை சம்பந்தமாகவும் அவைகளுக்கும் மனுஷனுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்புகள் சம்பந்தமாகவும் எத்தனை எத்தனையோ நுட்பமான தத்துவங்கள் இருக்கின்றன. அவைகளை ஆராய்ந் தனுபவிப்பதற்கு ஒருவர் ஆயுள்நாள் போதாது. அவைகளில் நோயுற்ற குதிரையோ காளையோ வந்தால் எப்படி அதனிடம் நெருங்குவது, எப்படி அவைகளைக் கையாளுவது என்பது ஒரு விசித்திரமான கலை. அதைப்பற்றி முதலியாரவர்கள் அனுபவ ரசத்தோடு பேசும்போது நமக்கு ஒரு புது உலகத்துக்குள் புகுந்து அநேக அதிசயங்களைக் கண்டுகளிப்பதாகத் தோன்றும். இப்படி அனுபவ ரசத்தோடு சொல்லுவதில்தான் உயர்வான ஸையன்ஸ் உணர்ச்சி என்ன என்று தெரியவரும்.

இன்னொரு விஷயம்: சுமார் இருபத்தைந்து வருஷ காலம் முதலியாரவர்கள் குக்கிராமங்களில் போய்க் கால்நடை சம்பந்தமான பரிசோதனை, சிகிச்சை செய்யும் தொழிலில் அமர்ந்திருந்தார்கள். அதற்காகச் சுற்றுப் பிரயாணம் போகவேண்டியிருந்தது. மாசத்தில் இருபது நாள் அநேகமாய் முகாம்தான். குழந்தைப் பருவத்தில் இருந்தே சௌகரியமான வாழ்வில் வாழ்ந்து வந்த காரணத்தால் முகாம்களிலும் சௌகரியமாக இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நல்ல சுவையான சமையல் செய்வதற்கும் நண்பர்களுக்கு விருந்து நடத்த வேண்டியதற்கும் அவசியமான தட்டுமுட்டுகளுக்குக் குறைவில்லை. வீட்டில் நடக்கிற உபசாரமும் விருந்து சாப்பாடும் முகாம் போட்ட சத்திரம் சாவடியிலுந்தான். ஆனால் படுக்கிற கட்டில் வசதி மட்டும் குறைவாகத்தான் இருக்கும்.

அதற்காக 'கியாம்பு'க் கட்டில் செய்ய வேண்டும் என்று முயன்றதெல்லாம் ஒரு கதை: மடக்குக் கட்டில் ஒன்று செய்தார்கள். 'கியாம்பு'க்குக் கொண்டுபோய் ஒருநாள் இரவு படுத்தார்கள். கொஞ்சம் தொய்ய ஆரம்பித்தது. தொய்யாமல் இருப்பதற்கு என்னசெய்யலாமென்று ஆலோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கட்டிலை விட்டிறங்கி அதை மலாத்திப் போட்டுச் சட்டம் கால்களையெல்லாம் அசைத்துப் பார்த்து, "சரி சரி குறுக்குக் கம்பி கொடுத்துவிட்டால் தொய்யாமல் விறைப்பாய் இருக்கும்" என்று நிச்சயித்துக் கொண்டார்கள். மனசு இப்படி யோசனைக்குள் போனபிறகு தூக்கமேது? சிவராத்திரிதான். காலையில் அந்தச் சத்திரத்துக்குத் தாசில்தார் பஞ்சாபகேச சாஸ்திரி முகாம் வந்தார். கட்டிலைப் பார்த்து நல்லமாதிரியாய் இருக்கிறதென்று சொன்னார். அவ்வளவுதான். "உங்களுக்கே கட்டிலை வைத்துக் கொள்ளுங்கள். நான் வேறு செய்துகொள்ளுகிறேன். முகாம் வந்தால் எப்படியும் தரையில் படுக்கக்கூடாது. கட்டிலில்தான் படுக்கவேண்டும். அல்லாதபக்ஷத்தில் தூக்கத்துக்குப் பங்கம் ஏற்படும்.—(முதலியார் அவர்களுக்குத் தூக்கம் பிடித்த காரியம் நமக்குத் தெரியுமே)—முகாம் மட்டில் ரொம்ப அவசியம்" என்று சொல்லித் தாசில்தாருக்குக் கட்டிலைக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுவிட்டார்கள். ஊர் வந்ததும் புதுக் கட்டில் நூதன

திருத்தங்களோடு தச்சனைக்கொண்டு செய்வித்தார்கள். இப்படியாக நடந்த சம்பவங்களை எண்ணி முடியாது. புதுமாதிரி புது மாதிரியாக முகாம் கட்டில் செய்ய வேண்டியதுதான். அவைகளை உடன் தங்கிய ஸர்க்கியூட் உத்தியோகஸ்தர்களுக்குத் தத்தம் பண்ண வேண்டியதுதான். இந்த விதமாக இருபத்தைந்து வருஷங்கள் கட்டில்களை எளிதாக மடக்கவும் நீட்டவும் தொய்யாமல் விறைப்பாக இருக்கவும் பளுவாய் இல்லாமல் லேசாய் இருக்கவும் தகுந்தபடி செய்வதில் யாருக்கும் இல்லாத ஆத்திரம். முகாம் போகிறவர்கள் அதை உபயோகப்படுத்திச் சுகமாகத் தூங்க வேண்டுமென்பது அதைவிட ஆத்திரம். தனக்குத் தூக்கம் வந்ததா என்பது பற்றி விசாரிக்க வேண்டுமானால் எந்திர உலகுக்குப் பிரமதேவதையாய் இருந்த எடிஸனிடந்தான் கேட்க வேண்டும். முதலியார் அவர்கள் எடிஸனுக்கு ஒரு தம்பி.

கட்டிலில் எத்தனை உத்தியோகஸ்தர்களைப் படுக்கும்படி செய்து அமைதி கொடுத்திருக்கிறார்கள். இதுபோல, வேறொரு பிராணிக்கு வேறொரு கட்டில் செய்து அமைதி அளித்திருக்கிறார்கள். எப்படி: அகலிகையானவள் தேவேந்திரனுடைய ஏமாற்றத்துக்கு உள்ளாக்கித் தன் நாயகனை கௌதமருக்குக் கேடு இழைத்தவளாகிறாள். கௌதமர் அவளைக் கல்லாகப் போகக் கடவது என்று சாபம் இடுகிறார். அவள் உண்மையாக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கக்கூடத் தகுதி இல்லையே என்று நொந்து கொள்ளுகிறாள். ஆனாலும் கணவருடைய சாபத்திலேயே கருணைகிடக்கிறது என்று கருதி நன்றி கூறுகிறாள். உண்மையும் கனிவும் எவ்வளவு அழகாக வெண்பாவில் அமைந்து கிடக்கின்றன என்பதைப் பாருங்கள் :

இணையில்பொறை எம்பெருமான் இன்னருளென் ! என்கேன் ?
உணர்வுளதேல், துன்பம் உளதென் — றுணர்வதிலாக்
கல்லாக என்று, கருணை வெள்ளத் தாழ்த்தினன், என்
பொல்லாத குற்றம் பொறுத்து.

(அகலிகை வெண்பா 211).

அகலிகை கல்லாகிய கட்டிலில் எவ்வளவு அமைதி பெற்றுத் தூங்குகிறாள் !

Augast 1937 —— — கலைமகள்

**எண்பதாண்டான இளைஞர் :**

## S. தேசிகவிநாயகம் பிள்ளை

வருஷங்களை ஒன்று இரண்டு என்றெண்ணி வயதைக் கணக்கிட்டு மனிதரைக் கிழவரென்றும் குமரரென்றும் மதிப்பது ஒரு சரியான முறையன்று. எண்பது வயதான இளைஞருமுண்டு. இருபது வயதான கிழவருமுண்டு. இதற்கு முக்கிய காரணம் அவரவருடைய சித்த விருத்தி அல்லது மனப்போக்கேயாம் — வயதன்று; ஓய்ந்து சோம்பி உறங்கிக் கிடப்பவரே கிழவர் — ஊக்கம் பெருக உழைத்து முன் நிற்பவரே குமரர்.

வெள்ளகால், திருவாளர் ராவ்ஸாஹிப் V. P. சுப்பிரமணிய முதலியாரவர்களை நெருங்கிப் பழகினவர் ஒருவரேனும் அவரை ஒரு குடுகுடு கிழவரென்று கூறத் துணியாரென்பது உறுதி. அவரது சுறு சுறுப்பைக் கண்ட எந்த இளைஞரும் அவர்முன் நாணித் தலை குனிந்து விடுவான். எதேனும் ஒரு விஷயத்தைக் குறித்து முதலியாரவர்களோடு வாதப் பிரதிவாதம் செய்யத் தொடங்கினால் போதும் — அவருக்கு ஊக்கம் எப்படியோ உண்டாகிறது. விருத்தர் குமரராகிவிடுகிறார்.

இப்பெரியாரைக் காணும்பொழுது புலவர் பிசிராந்தையாரை நினைக்க நேரிடுகிறது.

"யாண்டு பலவாக இளமையோடிருத்தல் யாங்காகியர்?" என வினவும்படி ஆசையும் எழுகிறது.

முதலியாரவர்கள் தமிழ் வளர்ச்சியின் பொருட்டுச் செய்திருக்கும் தொண்டுகள் மிகவும் போற்றற்குரியனவாம். இவரது நெல்லைச் சிலேடை வெண்பா மூலமாகத்தான் நான் இவரை முதல் முதல் அறியலானேன், அந்நூலை எனக்குப் பாடம் கற்பித்த திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சாந்தலிங்கத் தம்பிரானவர்கள் நூலாசிரியரின் கல்வியறிவொழுக்கங்களைக் குறித்துப் பாராட்டிப் பேசியிருக்கின்றனர். முதலியாரவர்கள் இனிய எளிய நடையில் அழகிய கவிகள் எழுதும் திறமை வாய்ந்தவர் — இது ஒரு உப

சார மொழியன்று, உண்மை மொழியேயா மென்பதை அவர்கள் பாடிய அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், சுவர்க்க நீக்கம், முதலிய நூல்கள் நன்கு வலியுறுத்தும்.

கம்பராமாயண சாரம் — என்ற நூலை நம் முதலியாரவர்கள் ஸமீப காலத்தில் வெளியிட்டிருக்கின்றனர் — அத்தமிழ்ப் பாக்கடலி லுள்ள இனிய கவிகளைத் தெரிந்தெடுப்பதற்குச்

'சொன்னலமும் பொருணலமும் சுவைகண்டு
சுவைகண்டு துய்த்துத் துய்த்துக்
கன்னலிலே சுவையறியுங் குழந்தைகள் போல்
தமிழ்ச்சுவை" யறிந்த நம் தமிழ் நாட்டுத்

தாதாவவர்களே பெரிதும் தகுதி யுடையாரென்பதை எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

இப்பெரியாருக்கு எல்லா நலமும் பெருகி வருமாறு இறைவனை இறைஞ்சி வேண்டிக்கொள்கிறேன்.

---

## மற்றொரு தமிழ்க் கிழவர்

### ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி)

மூன்று வருஷத்துக்கு முன்னால் நாம் ஒரு மாபெரும் தமிழ்க் கிழவரின் எண்பதாம் ஆண்டு நிறை விழாவைக் குதூகலமாய்க் கொண்டாடினோம். அப் பெரியார்—மகா மகோபாத்தியாய ஸ்வாமிநாதய்யர் அவர்கள்—மனிதர்களுக்கு உரிய நூறுண்டும் அதற்கு மேலும் நம்மிடையே வாழ்ந்து, தமிழ்த்தாய்க்கு இன்னும் பல பழைய புதிய ஆபரணங்களை அணிவித்து நமது நன்றிக் கடனுக்கு உரியவராவார் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த வருஷத்திலே மற்றொரு தமிழ்ப் பெரியாரின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. வெள்ளகால் ராவ் ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. சி. என்று கேள்விப் பட்டிருப்

பீர்கள். சுருக்கமாக வெள்ளகால் முதலியார்வாள் என்றும் சொல்வதுண்டு. அவர்களுக்கு இன்றைய தினம் — அதாவது ஆகஸ்டுமீ 1உ ஞாயிற்றுக்கிழமை யன்று — எண்பதாவது ஆண்டு நிறைகின்றதாம்.

இதை அறிந்தபோதுதான், யமனை எமாற்றுவதற்குச் சிறந்த மார்க்கம் தமிழாராய்ச்சி என்று எனக்குத் தோன்றிற்று. நல்ல திடகாத்திரமாயிருந்த காலத்திலெல்லாம் சர்க்கார் ஊழியம் செய்துவிட்டு, ரிட்டயர் ஆகி, ஒரு மாத பென்ஷன்கூட வாங்காமல் இறந்துபோகிறார்களே! அப்படிப்பட்டவர்கள் தமிழாராய்ச்சியில் மட்டும் ஈடுபட்டார்களானால்? அகா! இந்த சர்க்காரிடமிருந்து பென்ஷனாக எவ்வளவு பணம் கறக்கலாம்?

நாம் மட்டும் தமிழ்க் கவிதைகளைப் படித்துக் கொண்டும், தமிழ் நூல்களை ஆராய்ந்து கொண்டும் இருக்க வேண்டியது. யமன் வருவான்; சேமதாரத் தமிழோசை அவன்காதிலும் விழும்; அப்படியே உள்ளத்தைப் பறிகொடுத்து உட்கார்ந்து விடுவான். வந்த காரியம் மறந்துபோய்விடும். தமிழ் இன்பத்தில்திளைத்துக் கொண்டே திரும்பியும் போய்விடுவான்.

நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கைப்படாவிட்டால், தயவுசெய்து வெள்ளகால் முதலியார் அவர்களை ஒரு தடவை போய்ப் பாருங்கள். எல்லா சந்தேகமும் நிவர்த்தியாகிவிடும்.

மயிலாப்பூரிலே ஒரு தமிழ் அன்பரின் வீட்டில் முதன் முதலாக நான் வெள்ளகால் முதலியார்வாளைப் பார்த்தேன். அந்தத் தமிழன்பர் ரொம்ப நாஸூக்குக்காரர். அவர் வீட்டில் எல்லாம் 'டிப் டாப்'பாக இருக்கவேணும். அவருடைய மாடி ஹாலில் போட்டிருந்த சுகமான சோபாவில் நான் எத்தனையோ நாள் சௌக்கியமாக உட்கார்ந்து தமிழ்க் கவிதை இன்பத்தைப் பருகி இருக்கிறேன்.

வெள்ளகால் முதலியார்வாள் வந்துவிட்டுப் போன மறு வாரம் அந்தத் தமிழன்பர் வீட்டுக்குப் போயிருந்தபோது, மேற்படி சோபாவைக் காணமல் திடுக்கிட்டுப் போனேன்.

"ஸார்! சோபா எங்கே? அதற்கு என்ன விபத்து வந்து விட்டது?" என்று பதறிக்கொண்டு கேட்டேன்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்? சென்ற ஞாயிற்றுக்கிழமை வெள்ளகால் முதலியார் வந்திருந்தார் அல்லவா? அவர் இந்த ஸோபாவில் உட்கார்ந்திருந்தா ரல்லவா? அப்போது அவர் எழும்பி எழும்பிக் குதித்த குதியில் ஸோபாவின் மெத்தை பிய்ந்துபோய்விட்டது. புதிதாய் மெத்தை தைக்க அனுப்பி யிருக்கிறேன்" என்றார்.

இப்படி ஏதாவது வந்து சேருமென்று நான் முதல் வாரமே எதிர் பார்த்ததுதான். முதலியார்வாள் அவ்வளவு உற்சாகம் காட்டியது ஏன் என்று கேட்கிறீர்கள்? ஒன்றுமில்லை; அங்கே வந்திருந்த தமிழ் அன்பர்களில் ஒருவர், ஒரு தமிழ்க் கவிதையைச் சொன்னார். அவ்வளவுதான்.

"ஆஹா!" என்று ஒரு குதி குதித்தார் பெரியார். "இந்த மாதிரி ஒரு பாட்டு உலகத்திலே வேறே எந்த பாஷையிலாவது இருக்கிறதா, சொல்லுங்கள். அப்படி இருக்கிறது என்று யாராவது சொன்னால், அது பொய், பொய், முழுப் பொய்! முடியவே முடியாது, கிடையவே கிடையாது!" என்று ஆர்ப் பரித்தார். அப்போது அவரைப் பார்த்தால் எண்பது வயதை எட்டப்போகும் கிழவராகவா இருந்தது! சரிதான்! இருபது வயது இளங் காளைக்கு அவருடைய உற்சாகத்திலே ஆயிரத்தில் ஒரு பங்கு இருந்தால் பெரிய காரியம்.

கம்பராமாயணத்தைப்பற்றி இப்போதெல்லாம் நீங்களும் நானும் ஒரே விதமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறோம்.

1. உலகத்திலே இராம கதையைவிடச் சிறந்த கதை வேறு கிடையாது.

2. உலகத்திலே கம்பனைவிடச் சிறந்த கவி யாருமில்லை.

3. ஆகையால், கம்பராமாயணத்தைவிடச் சிறந்த நூல் உலகில் வேறு ஒன்றும் இல்லை.

இதுதான் நமது அபிப்பிராயம். வேறு விஷயங்களில் அபிப்பிராய பேதங்களுக்கு இடங்கொடுக்க நாம் தயாரா யிருக்கிறோம். ஆனால் கம்பராமாயணத்தை மட்டும் உலகத்திலேயே சிறந்த நூல் என்று யாரேனும் ஒப்புக்கொள்ளா விட்டால், நமக்குக் கடுங்கோபம் வந்துவிடுகிறது. "போ! உன்னோடு சேர்த்தியில்லை! டூ! டூ! டூ!" என்று முக்காலே மூன்று வரட்டியும் நாம் டூ இட்டுவிடுகிறோம். என் வரையில், இந்த மாதிரி கம்ப ராமாயணப் பிரேமை—பைத்தியம் முற்றும்படி செய்தவர் ஸ்ரீமான் டி. கே. சி. அவர்கள். ஆனால் கம்பன் பைத்தியத்துக்கு முதன் முதலில் விதை போட்டவரோ ராவ் ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்தான். வெகுநாளைக்கு முன்பு—சில யுகங்களே ஆகிவிட்டாற் போலிருக்கிறது — காலஞ்சென்ற ஸ்ரீமான் ஏ. மாதவய்யா "பஞ்சாமிர்தம்" என்ற அரிய தமிழ்ப் பத்திரிகையைத் தொடங்கி ஒன்றரை வருஷ காலம் நடத்தினார். அந்தப் பத்திரிகையில் வெள்ளகால் முதலியார் அவர்கள் "கம்பராமாயண இன் கவித்திரட்டு" என்ற தலைப்பின் கீழ், சில ரஸமான கம்பராமாயணக் கவிகளைப் பொறுக்கி, விளக்கக் குறிப்புகளுடன் பிரசுரித்து வந்தார். அந்தக் கவிகளைப் படித்த பிறகுதான் எனக்குக் கம்பராமாயணத்தில் ருசி உண்டாயிற்று.

அதற்கு முன்னால் நான் கம்பராமாயணம் படிக்கச் சில தடவை முயன்றதுண்டு. இராமாயணத்தில் முதலில் சுந்தர காண்டம் ஆரம்பிக்க வேண்டு மென்பது மரபாதலால், நானும் சுந்தர காண்டந்தான் படிக்கத் தொடங்கினேன். ஆனால், ஒரு தடவையாவது "கடறுவு படல"த்துக்கு மேல் தாவவோ, நீவவோ முடிந்தது கிடையாது. அவ்வளவு நெரடான செய்யுள்களிலே கவிதை எப்படி இருக்க முடியும் என்றுகூட நான் சந்தேகப் பட்டதுண்டு.

முதலியார்வாள் பொறுக்கி எடுத்துத் தந்த கவிதைகளைப் படித்தபிறகுதான் கம்பன் கவிதையில் எனக்குச் சுவையும் ஆர்வமும் ஏற்பட்டது. அந்தச் சுவையும் ஆர்வமும் பின்னால் ஸ்ரீமான்கள் வ. வே. சு. அய்யர், பி. ஸ்ரீ. ஆசாரியார், டி. கே. சிதம்பரநாத முதலியார் இவர்களால் அபாரமாக வளர்ந்து விட்டன.

இப்போது வெள்ளகால் முதலியார்வாள் தமது கம்பன் கவிதைத் திரட்டைக் "கம்பராமாயண சாரம்" என்ற பெயருடன் காண்டங் காண்டமாக வெளியிடத் தொடங்கி யிருக்கிறார்கள். பால காண்டமும், அயோத்யா காண்டமும் வெளியாகி விட்டன. இப்போதெல்லாம் எனக்கு வாழ்க்கையில் சோர்வு உண்டானால், உடனே மேற்படி புத்தகங்களை எடுத்துச் சில கவிதைகளைப் படிக்கிறேன். உடனே, அன்று முதலியார்வாள் எழும்பிக் குதித்த காட்சியும் ஞாபகம் வருகிறது. நல்ல அழுத்தமான மர நாற்காலியில் உட்காருகிறேனாதலால், விபத்து ஒன்றும் நேர்வதில்லை.

சென்ற மூன்று தலை முறையைச் சேர்ந்த தமிழ்ப் புலவர்கள், தமிழன்பர்கள் எல்லாரிடமும் நட்பு உரிமை கொண்டு அளவளாவியவர் ராவ் ஸாஹிப் சுப்பிரமணிய முதலியார் அவர்கள். மகாமகோபாத்தியாய சுவாமிநாதய்யர், பாஷா கவி சேகர ராகவய்யங்கார் முதலிய புலவர் சிகாமணிகளும் அவருக்குச் சிநேகிதர்கள். பி. ஸ்ரீ. ஆசாரியர், டி. கே. சிதம்பரநாத முதலியார் போன்ற ரஸிக சிகாமணிகளும் அவருடைய நண்பர்கள்.

அவரோ புலவருக்குப் புலவர்; ரஸிகருக்கு ரஸிகர். சங்க நூல்கள் முதல், பழந் தமிழ் நூல்கள் எல்லாம் ஐயந்திரிபற ஆராய்ந்திருக்கிறார். மற்றொரு புறத்தில் — சொல்ல சங்கோசமா யிருக்கிறது — விகடனில் வரும் கதைகள் கட்டுரைகளைக் கூடப் படிக்கிறார்! அவரை நான் சந்திக்க நேர்ந்தபோது, விகடனில் இரண்டு வருஷத்துக்கு முந்தி வெளியான ஒரு தலையங்கத்தைக் குறிப்பிட்டுப் பேசினார்!

ஸ்ரீ முதலியார் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைத் திருநெல்வேலித் தமிழன்பர்கள் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருப்பதாய் அறிகிறேன். அதைக் குறித்து விகடன் நேயர் குழாத்தின் சார்பாக என் பூரண மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலியார் அவர்கள் நீடூழி காலம் வாழ்ந்து தேசத்தில் தமிழ்க் காதலையும் கம்பன் பைத்தியத்தையும் வளர்த்து வருவாராக!

1—8—37 — ஆனந்த விகடன்.

## தமிழ்ப் புலியின் சேவை:

### T. S. சொக்கலிங்கம் பிள்ளை, M. L. A.

சென்ற ஜனவரி, பெப்ரவரி மாதங்களில், அஸெம்பிளி தேர்தலுக்காக, திருநெல்வேலி - தென்காசி தாலூகாக்களில் சுற்றிக்கொண்டிருந்தேன். நூற்றுக்கணக்கான கிராமங்களையும், ஆயிரக்கணக்கான சகோதரர்களையும் பார்க்கும் பாக்கியம் பெற்றேன். இதனால், பாமர ஜனங்களின் தொடர்பு வேண்டும் என்று காங்கிரஸ் சொல்லும் நோக்கம் பூர்ணமாய் நிறைவேறியது. ஆனால் அத்துடன் மட்டும் நிற்கவில்லை. பாமர ஜனங்களைப் பார்க்க நேரிட்டதோடு, சிறந்த தேச பக்தர்களையும், உணர்ச்சி பொங்கும் வாலிபர்களையும் கல்வி கேள்விகளில் மிகுந்த அறிஞர்களையும் சந்திக்க நேரிட்டது. எதிர் பாராமல் கிடைத்த இத்தகைய அதிர்ஷ்டங்கள்தான் தேர்தல் வேலையிலுள்ள கஷ்டங்களை கஷ்டமாகத் தோன்றாமல் மறைத்து வந்தன. அம்மாதிரி சந்திக்கும் படியாகக் கிடைத்த பாக்கியங்களில் பெப்ரவரி 6உ கிடைத்தது விசேஷமானதாகும்.

வெள்ளகாலில் வசித்து வரும் ராவ் ஸாஹிப் வே. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களைப்பற்றி பல வருஷங்களாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவர் எழுதிய பல கட்டுரைகளைப் படித்து மகிழ்ந்திருக்கிறேன். ஆனால் அதுவரையில் அவரை நேரில் தரிசித்தது கிடையாது. அந்தக் குறை பூர்த்தியாகுமா ஆகாதா என்பது எனக்கே தெரியாமல் இருந்தது. பெப்ரவரி 6உ யன்று மாலை 3-மணிக்குத் தென்காசியிலிருந்து வெள்ளகால் போவதாய்த் தீர்மானித்தோம். என்னுடன் தென்காசி அட்வகேட் ஸ்ரீ. ஷண்முகநயினார் பிள்ளை அவர்களும், பாப்பாங்குளம் ஸ்ரீ. சொக்கலிங்கம் பிள்ளையவர்களும், காங்கிரசில் தீவிர பற்றுக்கொண்ட தென்காசி முத்துக்குமாரசாமி பிள்ளையவர்களும் வந்தார்கள். வெள்ளகால் என்பது ஒரு சிறிய கிராமம். சென்ற தேர்தலில் காங்கிரசுக்கு விரோதமாக வேலை செய்த தளவாய் குமாரசாமி முதலியார் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் செல்வாக்குடன் இருக்குமிடம். ஆகவே அங்கே காங்கிரஸ்காரர்கள் போவதால் பயனில்லையென்று சில நண்பர்கள் சொன்னார்கள். அங்குள்ள

வோட்டுகள் என்னவோ நூற்றுக்கு உள்பட்டதுதான். என்ருலும் அந்த ஊருக்குப் போகாமல்விடக்கூடாது என்ற உறுதியுடன் பெப்ரவரி 6உ மாலை 3-மணிக்குப் புறப்பட்டோம். 4-மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். திடீரென்று புறப்பட்டதால், ராவ் சாஹிப் ஸ்ரீ. சுப்பிரமணிய முதலியாரவர்களை சந்திப்போமென்ற எண்ணமில்லை. ஆனால் ஊருக்குள் போனதும், முதலில் ஸ்ரீ. முதலியார் அவர்களையே சந்தித்தோம். பெரிய ஹாலில் ஒரு பெரிய மேஜை முன்பு அவர் வீற்றிருந்தது மிகுந்த கம்பீரமாய் இருந்தது. எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார். பின்னல் தேர்தலைப் பற்றிய பேச்சுக்களில் இறங்கினேம். அப்புறம் ஹிந்தியைப் பொது பாஷையாக வைக்கவேண்டியது அவசியமா என்பதைப் பற்றிய பேச்சு வந்தது. அவர் கேட்ட கேள்விகளுக்கு நான் சொல்லிய பதிலுக்குப் பின்னல் அவர் திருப்தியடைந்தார். அதன் பின்னல் தமிழ் மொழியைப்பற்றிய பேச்சு வந்தது. அச்சமயத்தில்தான் அவர் எழுதி சமீபத்தில் பிரசுரமான "கம்ப ராமாயண சாரம்" (பால காண்டம்) என்ற அருமையான நூலின் பிரதி ஒன்றை எனக்கு அன்புடன் பரிசளித்தார். அந்நூலை எனக்குக் கொடுக்கும்போது, "தேர்தல் முடியும் வரையில் உங்களுக்குப் படிக்க சாவகாசம் இருக்காதென்பது எனக்குத் தெரியும். தேர்தல் முடிந்த பின்பாவது இதை முழுவதிலும் நீங்கள் படிக்கவேண்டும்" என்று நிறைந்த அநுபவ ஞானத்துடன் உத்தரவிட்டார். அப்படியே செய்வதாய் ஒப்புக்கொண்டேன். அன்று சுமார் ஒரு மணி நேரத்திற்கதிகமாகக் கிடைத்த மூளைக்கு இன்பம் தருவதான அவருடைய சம்பாஷணையையும், அப்புறம் அவர் அளித்த நாவிற்கின்பம் தருவதான சிற்றுண்டியையும் மறக்க முடியாது.

முதலியாரவர்கள் பெரிய குடும்பத்தில் பிறந்தவர். அதோடு நேர்மையும், தாராள மனப்பான்மையுமுள்ளவர். நல்ல சொத்துக்கள் உள்ளவர். என்ருலும் எடுத்த காரியத்தை மிகக் கவனமாய் ஆராய்ந்து செய்யும் சுபாவமுள்ளவர். சௌக்கியமாய் சுக வாழ்வை நடத்தும் நிலைமையிலுள்ளவர். இருந்தாலும் சோம்பல் என்பது சிறிதும் இல்லாமல் சுறு சுறுப்பாய் இருக்கும் வழக்கமுள்ளவர். இப்பொழுது 80 வயதாகிறது. என்ருலும் புலியைப்போல கம்பீரத்தோற்றமுள்ளவராயும், வாலிபரைப்போல

சுறு சுறுப்புள்ளவராயு மிருக்கிறார். அவருடைய சுறு சுறுப்பைப் பார்த்ததும், அவருடைய வாழ்க்கையை எவ்வளவு கட்டுப்பாடாய் நடத்தி வருகிறார் என்ற ஆச்சரியமே எனக்கு ஏற்பட்டது. முதலியாரவர்களின் தமிழ் ஞானத்தைப் பற்றியோ அவருடைய இனிய தமிழ் நடையைப்பற்றியோ நான் புகழுவதென்பது அதிகப்பிரசங்கத்தனமா யிருக்கும். ஏனெனில் பெரிய வித்துவான்களாகிய மகாமகோபாத்யாய சாமிநாதய்ய ரவர்களும், சுவாமி விபுலானந்தர், ஜி. யு. போப் முதலியோர் புகழ்ந்து கூறி யிருக்கும்போது, வேறு யாருடைய புகழ்ச்சி அவருக்கு வேண்டும்? முதலியாரவர்களின் உத்திரவுப்படி அவர் எழுதிய கம்ப ராமாயண சாரம் முழுவதையும் படித்தேன். படித்து முடிந்ததும், தமிழ் நாட்டிற்கு இதுவரை அவர் செய்த சேவையைவிட இதுவே தலை சிறந்தது என்று எண்ணி மகிழ்ந்தேன்

கம்ப ராமாயணத்திற்கு ஈடாக வேறு நூல் எந்த பாஷையிலும் கிடையாதென்பது வ. வெ. சு. அய்யரின் அபிப்பிராயம். என்றாலும் படிக்கத் தெரிந்த தமிழர்களில் கம்பராமாயணத்தைப் படித்து அதன் சுவையை அநுபவிப்பவர்கள் மிகவும் சொற்பமென்றே சொல்லவேண்டும். இதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டு. ஒன்று கம்பராமாயணம் மிகப் பெரிய புத்தகமா யிருப்பது; மற்றொன்று எல்லாம் செய்யுட்களா யிருப்பது. பாட்டுகளிலுள்ள சந்திகளைப் பிரித்துப் பதங்களுக்கு அர்த்தம் கண்டுபிடிக்கும் பொறுமை தற்காலத் தமிழ் வாலிபர்களுக்குக் கிடையாது. எனவே கம்பராமாயணத்தைத் தமிழர்கள் அதிகமாய்ப் படிக்கும்படி செய்யவேண்டுமானால் பாட்டுகளைக் குறைக்க வேண்டும். சுலபமாய்ப் பொருள் விளங்கும்படி செய்யவேண்டும். இதை அறிந்து இம் முயற்சியில் ஸ்ரீ வ. வே. சு. அய்யர் ஈடுபட்டார். அவர் வெளியிட்டுள்ள பால காண்டத்தில் செய்யுட்களை சந்திபிரித்து அச்சிட்டிருக்கிறார். புத்தகத்தின் கடைசியில் அரும் பொருள் விளக்கமும் சில இலக்கண விதிகளும், சேர்த்திருக்கிறார். செய்யுட்களில் கதைக்குக் கோவையாக இருக்கும்படியும் உயர்ந்ததாகவும் பார்த்து பொறுக்கி எடுத்திருக்கிறார். ஸ்ரீ முதலியார் இதே நோக்கத்தோடு ஆரம்பித்திருக்கும் முயற்சியில் வேறு வழியைக் கைக்கொண்டிருக்கிறார். அதாவது

கவிகளில் அவருக்கு எவை அதிக சுவையாயிருக்கின்றன என்று தோன்றுகிறதோ அவற்றைமட்டும் திரட்டி அச்சிட்டிருக்கிறார். இடையிடையே கதையின் போக்கையும் வசனத்தில் சேர்த்திருப்பதால் கதைப் போக்கையும் அறிந்துகொள்ளலாம். இவ்விஷயத்தில் ஸ்ரீ முதலியார் வழி சிறந்ததா, ஸ்ரீ அய்யர் வழி சிறந்ததா என்று ஆராய வேண்டியதில்லை. இரண்டும் அவசிய மென்றே நினைக்கிறேன்.

கவிகளுக்கு அர்த்தம் கூறும் வகையில்ஸ்ரீ முதலியார் வழியே சிறந்தது. எவ்வளவுதான் சந்தி பிரித்துப்போட்டாலும், பாட்டுகளுக்கு அங்கங்கே பொருள் கொடுக்காவிட்டால் தற்கால வாலிபர்களுக்குக் கம்பராமாயணத்தைப் படிக்கத் தூண்டுதல் ஏற்படாது. இதை அறிந்து ஸ்ரீ முதலியார் ஒவ்வொரு பாட்டுக்கும் விரிவாகப் பொருள் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விஷயத்தில் ஸ்ரீமுதலியார் கைக்கொண்டிருக்கும் முறையும் வியக்கத்தக்கது. கம்பரின் பாட்டை அப்படியே கொடுத்துவிட்டு அடுத்தபடியாகச் சந்திபிரித்து "கொண்டு கூட்டு" என்னும் தலைப்பில் வசனத்தில் அதை எழுதியிருக்கிறார். பின்னால் வியாக்கியானத்தோடு கூடிய விரிவான பொருள் கொடுத்திருக்கிறார். வேறு பல அறிஞர்கள் கொடுத்திருக்கும் பொருள்களையும் பிற பாட்டுக்களிலிருந்து மேற்கோள்களையும் இங்கே சேர்த்திருக்கிறார். முடிவாக அரும்பதவிளக்கமும் கொடுக்கிறார். எனவே இவ்வளவு சுலபமாக கம்பரின் கவி நயத்தை முழுதும் அநுபவிக்கக்கூடிய விதத்தில் அவர்கள் எழுதியிருப்பதால், புலமை எதுவுமில்லாமல் சாதாரணமாய் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்குக்கூட கம்பராமாயணத்தைப் படிக்கவேண்டும்என்ற எண்ணம் ஏற்படும் விதத்தில் இருக்கிறது. உலகம் போற்றும் தன்மை வாய்ந்ததான கம்பராமாயணத்தைத் தமிழர் எல்லாரும் படிக்கக்கூடிய விதத்தில் ஸ்ரீ முதலியாரின் பதிப்பை வாங்கிப் படிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்வித சிரமமுமில்லாமல் கம்பனின் கவி நயத்தை அதில் அறிந்துகொள்ள முடிவதைக் கண்டு பேராச்சரியம் அடைவார்கள். கம்பராமாயணத்தின் மற்றக் காண்டங்களையும் இம் மாதிரியே சிக்கிரம் வெளியிட அவருக்குத் தீர்க்காயுளைக் கொடுக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

13—5—37 — தினமணி

## முதலியாரவர்களின் பெருமை:

### துடிசைகிழார், அ. சிதம்பரனார்

வெள்ளகால், ராவ்ஸாஹிப் வே. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வரில் சிறந்தோராவர். அவர் ஆங்கில மொழி பயின்று அதில் வல்லவரா யிருக்கும் சிறப்பை அம்மொழியி னின்றும் பல அருமையான நூல்களை மொழிபெயர்ப்பதில் பயன்படுத்தியது கொண்டாடத்தக்கது ஒன்றும். அவர் மொழிபெயர்த்த நூல்களில் சில: (1) சுவர்க்க நீக்கம் (2) கோம்பி விருத்தம் முதலியன. அவருடைய மொழிபெயர்ப்பு நூல்கள் எல்லாம் சொல்வளம் பொருள்வளம் மிகுந்து, படிப்பவருக்கு மொழிபெயர்ப்பாகத் தோன்றாமல் தமிழ் மொழியின் முதனூல்களாகவே விளங்கும் பெருமை வாய்ந்தன.

அவர் கவர்ன்மெண்ட் கால்நடை யிலாகாவில் டிப்டி சூப்ரண்டாயிருந்து, அவ்வேலையை மிகத் திறமையுடன் பார்த்து, கவர்ன்மெண்டாரிட மிருந்து ராவ் ஸாஹிப் என்னும் பட்டத்தையும் பெற்றவரா யிருந்த போதிலும், அவ்வுத்தியோகத்திலிருக்கும் போதும் தாய்ப்பணி யாகிய தமிழ்நூல்கள் இயற்றும் முயற்சியை மறந்தார் இல்லை.

கால் நடைகளுக்குக் காணும் வியாதிகளைப்பற்றிப் பலநூல்கள் வெளியிட்டுள்ளார். அவைகளில் மிசிறந்தது "கால் நடைகளுக்கு வியாதி வராமற் காக்கும் பொருட்டு அம்மைகுத்தல்" என்னும் நூலே.

வேதனம் பெற்றுத் தம் சர்க்கார் கடைமையை மாத்திரம் சரிவரச்செய்து கீர்த்திபெற்றுச் செல்லும் பல உத்தியோகத்தர் போலாது, வேலையினும் கீர்த்தி பெற்று, தாய்நாட்டுக்கான பணியும், வாயில்லாப் பிராணிகளுக்கான பணியும் ஒருங்கே இயற்றிப் பேறுங் கீர்த்தியும் பெற்றார் இவர். இப்பணிகளே இவருடைய மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும், உயிர்களிடத்துக் கொண்ட கழிவிரக்கத்தையும் காட்டுவன ஆகும்.

இவர் எழுதிய "இராமாயண உள்ளுறைபொருளும், தென்னிந்திய சாதி வரலாறும்" என்ற நூலை ஒருவன் படிப்பானேயாகில்

அவனுக்கு, இவர் இராமாயணத்தைப்பற்றிக் கொண்ட அபிப் பிராயங்கள் இன்னவை யென விளங்காமல் இரா.

இராமாயணத்தில் இராவணனையும் வாலியையும் பெரிய குற் றங்களைச் செய்தவராகவும், அதற்காக ஆரிய அரசனாகிய இராமர், அவர்களைத் தண்டித்து அவர்களுடைய நாடுகளை அவர்களுடைய தம்பிமார்களுக்கு ஈந்து, தனக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களாக ஆக்கிக்கொண்டார் என்றும், உண்மையை மாற்றிக் கூறப்பட் டிருக்கிறதென்றும், உண்மையில் இராவணன் வாலி இவர்கள் செய்ததாகக் கூறும் குற்றங்கள் குற்றங்களாகா என்றும், அவை கள் எல்லாம் அரசாங்க முறையில் செய்யவேண்டிவந்த செய்கை கள் ஆகும் என்றும், இராமரே மன்னிக்கப்படாத குற்றங்களைச் செய்துள்ளார் என்றும் "இராமாயண உள்ளுறை பொருளில்" கூறப்பட்டிருப்பதை யாவரும் அறிவர்.

இது இப்படியிருக்க, இவர் எழுதிய, வாலிவதை நியாயம் என்னும் நூலைப் பார்த்தால், முன் "இராமாயண உள்ளுறையில்" கூறிய அபிப்பிராயத்திற்கு முற்றும் மாறாக வாலியை இராமர் மறைந்து நின்று கொன்றது குற்றம் ஆகாது என்று பல நியாயங் களால் எடுத்துக் காட்டியது வியக்கத்தக்கது ஆகும். *

வாலிவதையில் இராமரைக் காப்பாற்ற வான்மீகரும், கம் பரும் எவ்வளவோ அரும்பாடுபட்டும், உலகமாகிய நியாயத் தலத்தில் அவர்களுடைய நியாயங்களை மேலோர் ஒப்புக் கொள்ள வில்லை.

இராமர் மறைந்து நின்று வாலியைக் கொன்றது கொலை யாகு மென்றே தீர்ப்புச் செய்திருக்கிறார்கள்.

ஆனால், முதலியார் அவர்கள் தம்முடைய "வாலி வதை நியாயத்தில்" எடுத்துக் கூறியுள்ள நியாயங்களை அவ்வுலகமாகிய நியாயத்தலம் ஒத்துக் கொள்ளாமல் இருக்கமுடியாது.

---

* இராமாயண உள்ளுறை பொருளில், ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, சரித்திரமுறையாக, இராமாயணத்தை ஆராய்ந்து இராமனைப்பற்றிக் கூறியதை யான் அறிந்தபடி விளக்கினதுபோல, இந்நூலில் (கம்ப ராமாயண சாரம்) கம்பர், சமயமுறையாக, இராமனைப் பற்றிக் கூறிய வைகளை என் அறிவுக்கு எட்டினமட்டும் விளக்கியிருக்கிறேன், என்று ஆசிரியர் கம்ப ராமாயணசார முகவுரையில் எழுதி யிருப்பது கவனிக்கத் தக்கது. — பதிப்பாசிரியர்.

வான்மீகர் இராமர் வாக்கில் வைத்துக் கூறும் நியாயம் வருமாறு:—

"மனிதர்கள் மிருகங்களை வலைகளாலும் கயிறுகளாலும் எதிர்ப்பட்டும், மறைந்தும் நின்று பிடிக்கிறார்கள். அப்போது அம்மிருகங்கள் பயந்து ஓடும் பொழுதும், நம்பி நிற்கும் பொழுதும், சண்டையிடும் பொழுதும், பராக்காயிருக்கும் பொழுதும் குத்தியும், அடித்தும் கொல்லுகிறார்கள். அதற்குத் தோஷம் ஒன்றும் சாஸ்திரங்களில் சொல்லப்படவில்லை. அது போல, நீர் வானர சாதியானபடியால் நீர் என்னுடன் போர் புரிந்தாலும் புரியாவிடினும் உம்மை நான் கொல்லுவதில் தோஷமில்லை" என்று கூறிவிட்டு இராமர் மறைந்து போய் விடுவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

கம்பர், வான்மீகி கூறும் நியாயத்தை உலகம் ஒப்பாது எனத் தெரிந்து, தாம் ஒரு நியாயத்தைப் புதுவதாகப்புனைந்து, இலக்குமன் வாயில் வைத்துக் கூறிவிட்டுத் தப்பித்துக் கொள்ளுகிறார். அந் நியாயம் வருமாறு:—

"முன்னுடியே சுக்கிரீவன் இராமரைச் சரணமடைய அவனைக் காப்பாற்றுவேன் என்றும், உன்னைத் தென்புலத்துக்கு அனுப்புவேன் என்றும் என் அண்ணுவாகிய இராமர் வாக்குக் கொடுத்து விட்டார். ஆகையால், எதிர் நின்று சண்டைசெய்தால் ஒரு சமயம் நீயும் சரணம் என்று சொல்லிவிட்டால் உன்னைக் காப்பாற்ற வேண்டிவரும். அப்படிச் செய்தால் முன்கொடுத்த வாக்குப் பழுது படும் என்று கருதி மறைந்துநின்று கொன்றார்" என்பது.

இந் நியாயமும் உலகமாகிய நியாயத் தலத்தில் ஒப்புக் கொள்ளப்படவில்லை.

ஆனால், முதலியாரவர்கள் தம் நூலில் கூறியுள்ள நியாயத்தை உலகம் ஒப்புக் கொண்டே தீரவேண்டும். அதனை அவ்வளவு ஆணித்தரமாக வாதித்து இருக்கிறார்கள். அந்நியாயத்தை ஈண்டெடுத்துக் கூறுவதைவிட ஒவ்வொருவரும் அவர் நூலிலேயே படித்தறிந்துகொள்ளுவது நலம் *

* கம்பராமாயண சாரம் - கிஷ்கிந்தா காண்டம் 83 – 95 பக்கங்களைப் பார்க்க.

*நியாய ஸ்தலங்களில் வழக்கறிஞர்கள் தாங்கள் எந்தப் பக்கத்தை (வாதிப் பக்கமோ பிரதிவாதிப் பக்கமோ) எடுத்துக் கொள்ளுகிறார்களோ அதற்குத்தக வாதிப்பதைப்போல, நம் முதலியாரவர்களும் தாம் எந்நிலையில் நூல் எழுதப் புக்காரோ அதற்குத்தக நியாயங்களை எடுத்துக் கூறி வாதிப்பதில் நனிசிறந்தவர் என்று கூறலாம்.*

*இத்தகைய அறிவும் ஆற்றலும் வாய்ந்த நம் முதலியாரவர்கள் நோயில்லா யாக்கையுடன் மனிதருக்கு ஏற்பட்ட வயது நூற்றிருபதையுங் கடந்து பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை மனமார வாழ்த்துகின்றேன்.*

---

## நான் கண்ட முதலியாரவர்கள்:

### A. C. பால் நாடார், B. A., B. L.

பண்புடைமை *என்னும் பதம், தற்காலத்தில் வழக்கில் இல்லை. தமிழ் மக்களது நாகரீக வளர்ச்சியை உற்று நோக்கினால், இப்பதம் பூர்வீகத் தமிழருக்குள் சர்வசாதாரணமாய் வழங்கி வந்திருக்கவேண்டும் என்னும் அபிப்பிராயம் ஏற்படுகின்றது. திருவள்ளுவர் குறளில் பண்புடைமை என்றே ஒரு அத்தியாயமிருக்கிறது. மேல் நாட்டுச் சிறந்த பாஷைகளான லத்தீன், ஆங்கிலம், பிரஞ்சு, ஜர்மன் முதலியவைகளில் பண்புடைமை என்னும் சொல்லைக் குறிக்கும் பதம் ஒன்றுமில்லை. லத்தீன் பாஷையில் வழங்கும்* Bona indoles, *ஆங்கிலத்தில் வழங்கும்* Courtesy, *பிரஞ்ச் மொழியின்* Courtoise, *ஜெர்மன் பாஷையின்* Bonimoves *என்ற பதங்களெல்லாம் பண்புடைமையின் தன்மையை விளக்கக்கூடியவை அல்ல. தமிழறிஞரான டாக்டர்* G. U. *போப்பையரவர்கள் இப் பண்புடைமையை ஆங்கிலத்தில் விளக்குகின்ற முறை கவனிக்கத்தக்கது. "பண்புடைமை* is the crown of perfection, a mingling of unaffected kindness with consumate tact. It is from *பண்* harmony and harmonises all things, while it is the result of a happy and harmonious combiuation of good quality." *என்று பண்புடைமை என்னும் பதத்திற்கு விரிவுரை இயற்ற முடிகின்றதே*

தவிர பண்புடைமைக்கு நேரான பொருள் உடைய ஒரு வார்த்தையை ஆங்கிலத்தில் சொல்ல இயலவில்லை. ஆகையால் பண்புடைமை என்னும் பதம் தமிழ் மொழிக்குள் சிறப்பாய் அமைந்திருத்தல்போல பண்புடைமை என்னும் குணமும் தமிழருக்கே சிறப்பாயிருந்த குணமாகும் என்பது பெறப்படுகின்றது.

இந்த இணையற்ற பதம் தற்காலத்தில் உபயோகத்திலில்லாததற்கு முக்கிய காரணம் பண்புடையாளரும் நம் நாட்டிலில்லாக் குறை போலும். ஆனால்........................................................
அவ்வருமையான குணத்தைத்தான் உயர் திரு. சுப்பிரமணிய முதலியாரவர்களிடம் நான் கண்டேன்.

"அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு."

என்று திருவள்ளுவர் பண்புடைமைக்கு இலக்கணம் சொல்லுகிறார். முதலியாரவர்களின் பழங்குடிப் பெருமை யாவருக்கும் தெரிந்ததே.

"வழுதி நாட்டிடை வளவநாடுற்றதேமானும்
பழுதில் சோழன் வந்தானெனும் பழம்பதியோன்; அச்
செழிய நாட்டுறுசேர நாடெனத்திகழ் தென்னம்
பொழில் வளம் பொலி வெள்ளகாற் புதுக்குடி புகுந்தோன்"

"எமாது தொண்டை மண்டல குலத்தினர் இரண்டிராமர்
சமானர், ஆரைமேவழகப்ப தராபதி தளவாய்
குமார சாமிவேந் திவர்கள்கோக் குடிச்சம்பந் தங்கொள்
பெமான்;மெய்ச் சுப்பிர மணியன்."

நமது முதலியாரவர்களின் பாட்டனரென்றால் அவர்களின் ஆன்ற குடிப்பிறப்பைக் கேட்பானேன்! அவர்கள் எண்பதாண்டு இளைஞரா யிருப்பதற்குப் பலரும் பல காரணங்கள் சொல்லுகிறார்கள். ஏற்றவிதமான ஆகாரமும் தேகப்பயிற்சியும் என்பார் சிலர். தமிழ்ப் பாண்டித்தியம் என்பார் ஒரு சாரார். அவர்களின் அன்புடைமை என்பேன் நான் "அன்பின் வழியது உயிர்நிலை." என்பது தமிழ்வேதம். "அன்பு நீடிய சாந்தமுள்ளது; அன்பு தயாளமுள்ளது; அது பொறாமைகொள்ளாது; அன்பு தன்னைப்

புகழாது; இறுமாப்பா யிராது; தனக்கானதை நாடாது; கோபங்கொள்ளாது; குற்றத்தைப் பாராட்டாது; அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தோடு சந்தோஷப்படும்; யாவற்றை யும் நம்பும்; யாவற்றிலும் நன்மையை எதிர்பார்க்கும்; யாவற்றை யும் சகிக்கும்" என்று கிறிஸ்தவர்களின் வேத புஸ்தகத்தில் விளக்கி யிருக்கிறது. இப்படிப்பட்ட குணத்தைத்தான் நான் முதலியாரவர்களிடம் நெருங்கிப் பழகப்பழகத் தெரிந்து கொண் டேன்.

"அவர் எண்ணமெல்லாம் தங்கம்; அவர் பேச்செல்லாம் தங்கம்" என்று பர்க்கு (Burke) என்னும் ஆங்கிலேயப் பெரியா ரைப்பற்றிச் சொல்லுவார்கள். முதலியாரவர்களின் எண்ணமும் பேச்சும் அப்படியே. நான்கு வருஷங்கள் நெருங்கிப் பழகினதில் குறைவான வாசகம் அவர்களின் வாயிலிருந்து புறப்பட நான் கேட்டதில்லை. எப்போது பேசினாலும் உயர்ந்த விஷயங்களே.

> "உயர் அர்த்த கவுரவ முதிர்ச்சி
> தன்னில் யாரினும் மேலவன்"

என்று ஹோமருக்கு அவர்கள் சொன்னது தம்மையே குறிக்கும்.

> "நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தோறும்
> பண்புடையாளர் தொடர்பு"

கம்பராமாயணத்தின் நயத்தை முதலியாரவர்கள் வடித்தெடுத்துக் கொடுத்த சாரத்தால் கண்டு கொண்டோம். பண்புடையான் தொடர்பை அவர்கள்பால் ருசித்துருசித்து அறிந்தோம்.

---

## முதலியாரவர்கள் பெரும்புலமையும் அருங்குணங்களும்:

### தூத்துக்குடி, கவிராஜ பண்டித ஜெகவீர பாண்டியன்

இன்றைக்குப் பதினெட்டு ஆண்டுகட்கு முன்னர் ஓட்டப் பிடாரம் சித்திவிநாயகர் சபை வருடக் கொண்டாட்ட விழாவில் ஓர் உபந்நியாசத்திற்குச் சென்றிருந்தபோதுதான் முதல் முதல் ஸ்ரீமான் V. P. சுப்பிரமணிய முதலியாரவர்களை நான் கண்டு மகிழ நேர்ந்தது. அச்சபையில் அவர்கள் தலைமை வகித்தார்கள்

"கம்பனும் புலமைச்சுவையும்" என்னும் விஷயம் என்னால் பேசப்பட்டது. அதனை அவர்கள் மிகவுமகிழ்ந்து புகழ்ந்தார்கள்.

அதன் பின்னர் 1924ல் தோன்றிய திருக்குறட் குமரேச வெண்பா என்னும் நூலைப் பெற்றுச் சாலவும் வியந்து உவந்து பாராட்டி மதிப்புரை முதலியன வழங்கினார்கள். அவ்வப்போது அவர்கள் இயற்றி வெளியிடுகின்ற நூல்களை அன்பு கூர்ந்தனுப்பி, நண்பு மிகுந்து பண்புரையாடிப் பலகடிதங்கள் எழுதி உளமலி யுவகையோடு மேலு மேலும் உரிமைபாராட்டி வருகிறார்கள். செல்வம் அதிகார முதலிய புல்லிய நலங்கள் சில புல்லியவுடனே நல்ல தமிழ்க் கல்வியை எள்ளி யொழுகும் இயல்பினர் மிகுந்த இக்காலத்தே இவர்கள் இவ்வாறிருப்பது வியப்பாத் தோன்று கின்றது.

"கற்றவர்கள் அகந்தையினால் கலந்து மகிழ் பெரும்பேற்றை
முற்றிழந்தார்; மற்றவரோ முறையறியா தயல்நின்றார்;
உற்றபெருஞ் செல்வர்களோ உளஞ்செருக்கி உணர்வொழிந்தார்;
எற்றேநம் தமிழ்ப் புலமை இன்பமுறப் பெறுநாளே."

என்று எண்ணி இரங்கி இனைந்து நிற்கும்பொழுது, இத் தகையபெருந்தகையாளரைக் கண்டு சிறிது ஆறுதல் உண்டாகின் றது. புலநலமுடையார் உளநலமுடையராய் அளவளாவி உரிமை கொண்டு மருவி நிற்பின், அன்பும் அறிவும் பெருகித் தமக்கும் பிறர்க்கும் இன்பமாய், உலகிற்கும் பெருநலம் விளையும் ஆதலால் அவ்வுறவு நிலை பெரும்பேறு என நின்றது. அப்பேற்றை இப் பேராளர் இயலொழுக்கம் ஒரு சிறிது பேணி வருகின்றது. பரந்த கல்வி, விரிந்த நோக்கம், ஆழ்ந்த சிந்தனை, அநுபவ முதிர்ச்சி, பிறர்நலம் பேணல், முதலிய உயர்நலங்களெல்லாம் ஒருங்கமைந்த இப்பெருந்தகையின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி மகிழ்தல் தண்டமிழ் நாட்டிற்கு ஒருதனிக் கொண் டாட்டமேயாம். நயந்தெரிந்து போற்றல் உயர்ந்தவர் கடமை. பண்பறிந்து பாராட்டாவழி மக்கள் மண்புனைந்த பாவையராவர். ஒரு நாட்டின் கலையறிவு அந்நாட்டிலுள்ள தலைமக்களால் நிலை பெற்றுள்ளது. அக்கலையை அவர் பாராட்டிப் போற்றாமல் பரா முகம் செய்து விடுவராயின் அஃது எல்லாராலும் எள்ளப்பட்டு முடிவில் இல்லாதொழியும்.

"Wit, when neglected by the great, is generally despised by the vulgar" (Goldsmith) என்பதும் ஒருவகையில் இதனை ஒட்டியுணர்த்துகின்றது காண்க. நம் தமிழ்க்கலையை எள்ளியிகழ்ந்து தள்ளியொதுக்கித் தமிழ் மக்கள் பலவாறு நிலைகுலைத்துவரினும் அது நிலைகுலையாது இந்த அளவிலாவது தலைநிமிர்ந்து நின்று வருவது அதன் இயற்கை நலனை நன்குணர்த்துகின்றது. அறிவுடையாரைப் போற்றுவது அறிவுவடிவமாகிய ஆண்டவனுக்குப் பெருமகிழ்ச்சி தருவதொன்றாம். கலை நலம் உலகில் நிலவும்படி பலவகையிலும் நலமுறச்செய்தல் தலைமையாளர் கடனாம். இவ்விழாக் கொண்டாட்டம் நாம் நம் தமிழ்த் தாய்க்குச் செய்யும் வழிபாடேயாம்.

பெரும் புலமையும், அருங் குணங்களும் ஒருங்கமைந்த இப் பெரியாரது மனநலம் பேணி மகிதலமகிழ இனநலம் பேணி இறைவனை இறைஞ்சுகின்றேன்.

---

## முதலியார் - திருநெல்வேலியின் பெருமை:

### பரலி - சு. நெல்லையப்பன்

இன்றைக்குப் பதினேழு ஆண்டுகளுக்கு முன் 1920-ம் ஆண்டில் ஒருநாள் நானும் காலஞ்சென்ற எனது நண்பர் சுப்பிரமணிய பாரதியாரும் திருக்குற்றாலத்திலிருந்து திருநெல்வேலிக்குப் பிரயாணஞ்செய்து கொண்டிருந்தபொழுது ஆழ்வார்குரிச்சியில் ரயில் நின்றவுடன் ஒரு பெரியார் எங்கள் வண்டியில் வந்து ஏறினர். அவர் அப்பொழுது நாட்டிலே தீண்டப்படாதார் என்பவர்கள் ஒருபுற மிருக்கப் 'பார்க்கப்படாதார்' (unseeable) என்று ஒரு ஜாதியார் திருநெல்வேலி ஜில்லாவில் இருப்பதைக் குறித்து எங்களிடம் பேசிவந்தார். அவர்தான் நான் பலநாளாகக் கேள்விப்பட்டிருந்த தமிழ்ப் பெரியார் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் என்று அன்று அறிந்தேன். அவர்களை ஒரே நாள் சிறிது நேரமே கண்டிருப்பினும் அவர்கள் நூல்கள்வாயிலாக நான் நன்கு அறிவேன் "திக்கெலாம் புகழும்" என்று அன்று திருஞானசம்பந்தர் பாடிய எனது திருநெல்வேலி நாட்டிற்கு

இன்று பெருமையளித்துவரும் பெரியோர்களில் நமது முதலியார் அவர்களும் ஒருவர். அவர்கள் எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதும் அதற்குத் தமிழ்க் கிழவரான டாக்டர் சாமிநாத ஐயரவர்கள் தலைமை வகிப்பதும் மிகப் பொருத்தமானவை. எண்பதாண்டிருந்த அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்குத் திருப்பணி செய்ய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை ஏத்துகின்றேன்.

30—7—37 — லோகோபகாரி

---

## கூட்டமொத்திருந்த வீரர் :

### அண்ணாமலைநகர், ந. மு. வேங்கடசாமி நாட்டார்

திருவாளர் ராவ் ஸாஹிப் V. P சுப்பிரமணிய முதலியாரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாப் பத்திரம் வரப்பெற்று மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். திரு. முதலியாரவர்களுடன் நெருங்கிப் பழகும்பேறு எனக்கு வாய்த்திலது. எனினும்முப்பதாண்டுகளின் முன்தொட்டு அவர்களின் கல்வி அறிவு ஆற்றல் முதலியவைகளையறிந்திருக்கிறேன். அவர்களியற்றிய சில செய்யுள் நூற்பகுதிகளையும், உரைப்பகுதிகளையும் படித்தும் மகிழ்ந்தும் இருக்கிறேன். செய்யுளியற்றல் உரையெழுதுதல் மொழிபெயர்த்தல் சொற்பொழிவாற்றல் என்னும் புலமைக் கூறுகள் பலவும் முதலியாரவர்களிடம் நன்கமைந்துள்ளன. அவர்கள் உரையைப் படிக்குங்கால் அவர்களுடைய நுண்ணறிவும் நடுநிலையும் மன அமைதியும் அனுபவ நிறைவும் புலப்பட்டு இன்பம் விளைப்பன வாகவுள்ளன. தமிழினிடத்து ஆழ்ந்த பற்றும், அதற்கேற்ற புலமையும், சொல்வளமும் உடையவர்களாய் இருப்பதுடன் முதலியாரவர்கள் என்றும் ஊக்கமும் உற்சாகமும் நிறைந்தவர்களா யிருப்பது அவர்கள் வாழ்க்கை முற்போக்கை விரும்புந் தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்டாக நிலவும்படி செய்வனவாம்.

அப்பெரியாருடைய எண்பதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடி மகிழ்வதும், அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதும் தமிழ் மக்கட்குச் சிறந்த கடப்பாடேயாகும். அக்கொண்டாட்டப் பேரவை

மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் வே. சாமிநாதய்யரவர்கள் தலைமையில் நடப்பதே சாலவும் பொருத்தம். ஐயரவர்கள் தமிழ் மொழியைப் பல்லாற்றானும் வளமுறச்செய்து அதற்கு ஓர் தந்தைபோல் விளங்குவதுடன் ஆண்டு அனுபவங் களிலும் மேன்மையுற்றுத் தமிழ் மக்கள் எல்லோருடைய உள்ளத் திலும் வீற்றிருப்பவர்கள். தமிழ் முனிவர்க்கும் தமிழ் அறிவுறுத்த செந்தமிழ்க் குரவராகிய செவ்வேளின் திருப்பேறை இரு பெரி யோரும் பெற்றிருத்தல் உவகை விளைவிப்பதாகும். அவ்விரு பெரியாரின் கூட்டத்தைக் கண்டு களிக்கும் தமிழ்ப் புலவர்களுக்கு "கூட்டமொத்திருந்த வீரர்" என்னும் கம்பர் பாட்டு நினைவிற்கு வாராமற் போகாது.

---

## ஆங்கிலம் படித்த தமிழர்:

### சென்னை, வித்வான் கி. வா. ஜெகந்நாதன்

நானையன்று தமிழ் மணக்குமவ் அந்நகரில் ஸ்ரீமான் ராவ் ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா நிகழவிருப்பது தெரிந்து, உள்ளங் குளிர்கின் றது! நெஞ்சு நிமிர்கின்றது. தமிழுக்குத் தொண்டுபுரிவது ஒரு புறம் இருக்கட்டும். தமிழை அடிமுதல் நுனிவரையில் ருசித்துப் பார்க்கும் ஆங்கிலம் படித்த தமிழர் இந்த நாட்டில் மிகவும் சொற்பம். அவர்களுடைய தமிழ்க் காதல்கூட ஆங்கிலக் காதலால் உண்டான உணர்ச்சியின் பயனே. முதலியாரவர்களோ தனியா கத் தமிழ்க் காதல் பூண்டு ஆங்கிலமொழியறிவை அக்காதலின்பத் துக்கு உபகரணமாக்கி வாழ்ந்துவருகின்றார்கள். 'சுவர்க்கநீக்கம்,' 'கோம்பி விருத்தம்,' 'சருவசனசெபம்' முதலிய நூல்களைத் தமிழ் படுத்தும் பொழுது அவர்களுக்கு இங்கிலீஷ் நாணயத்தை உருக் கித் தமிழச்சில் வார்த்துவிடவேண்டுமென்ற ஆசை எவ்வளவு இருந்திருக்கவேண்டும்! கம்பராமாயணப் பைத்தியம்பிடித்த சில ருக்குள் முதியவராகச் சிலருண்டு. அவர்களுள் முதலியாரொருவ ரென்பதை அவர்கள் பிழிந்துகாட்டும் சாரம் சொல்லும். பொது வாக என்னைப்போன்ற இளைஞர்களுக்குத் தமிழ்நெறியில் செல்

வதற்கு முதலியாரவர்களுடைய வாழ்க்கை ஒரு நந்தா விளக்கென்பதில் தடையில்லை.

தமிழுக்கு அதிர்ஷ்டம் பெருகும் காலம் இது. தமிழ்ப் பெருங் கிழவராது தலைமையில் முதலியாரவர்கள் பாராட்டப் பெறுகின்றார்கள். எல்லோருடைய அன்பின் சக்தியும் கடவுளுடைய திருவருளும் அவர்களுக்கு உடல் வன்மையையும் இன்னும் பல்லாண்டு வாழும் வாழ்வையும் அளித்துப் பாதுகாக்க வேண்டும். தமிழ் நூல்களின் சாரத்தை அவர்கள் ஒவ்வொன்றாக வெளியிடத் தமிழுலகம் படித்து இன்புறும் பேற்றை எல்லாம் வல்ல இறைவன் அளித்தருள்வானாக.

---

## MY REMINISCENCE OF Mr. MUDALIAR:

M. S. SHASTRY, G. B. V. C.
Treasurer and Ex General Seretary,
The All India Veterinary Association, Kurnool.

I came across the name of this great man M. R. Ry Rao Sahib V. P. Subramania Mudaliar Avl., in the Bonbay Veterinary College of which he and I happen to be the old Alumni. In that College hall the Rao Sahib's name is to be found in the list hung up there, of successful and distinguished graduates of the College who have won Medals and Prizes either as best students or as winners of prizes in the various subjects. The celebrated professors in the college often used to tell me of the industry and the application to duty for which the Rao Sahib was well known even in those days.

Subsequently, about 24 years ago as a subordinate of the Madras Civil Veterinary Department, I met him when he was Deputy Superintendent. The meeting was a stormy one according to my notions. But to him an old and experienced officer, it was a quiet one of the usual veriety. According to his official tour programme I should have met him in my headquarters for the inspection of my office. But I met him

at a junction station on his way to my headquarters and on my way to a scene of cattle disease about 40 miles off. As a youthful impatient idealist, I told him I would not be able to meet him at my headquarters according to his programme as I felt that my sole official existence was primarily for attending to cattle diseases and secondarily to the inspection of office work by the superior officers. When he questioned me, I told him this quite frankly. On a previous occasion of a similar nature I had acted on this principle when the Head of the Department visited my place on inspection duty. I had been encouraged by him with his approval of my action and I narrated this event to the Rao Sahib, in justification of my procedure at that particular moment. The Rao Sahib who inwardly appreciated my conduct, took me with him back to my headquarters, inspected my office as quickly as possible and sent me to attend to the cattle disease by the immediate next available train. During this inspection, he took keen interest in impressing upon my enthusiastic mind that ideals are good but in their application to the daily life in public service one must use much discretion to avoid getting into trouble since one cannot be fortunate enough to have always officers to appreciate such ideals. Therefore under such circumstances, consistent with ideals, one must act in this work-a-day world with necessary caution. This advice to an impulsive and youthful new entrant can come only from *an experienced sympathetic and sage-like officer who* had seen in long official life, officers of different temperaments and ideals. I can never forget that first meeting of mine with Mr. Mudaliar. On the next occasion, we both toured together for some days in the interior of the Godavari District, when I had many opportunities of knowing the person intimately. I was and have been ignorant of the great Tamil literature. He used to entertain me in the nights with the narration of the fine Tamil Saints' lives. His quotations from the Tamil literature created in me a great respect and regard for that great language and it was a great wonder for me that there should be such fine cultured men of sound scholarship in literature among the

veterinary staff of this presidency. It was also a revelation that among the veterinary surgeons there is such a puritan leading a simple and ennobling life for which Mr. Mudaliar has been very well known now. His method of moving with the people in the rural parts was really wonderful. His courteous, sympathetic and pleasing language always gathered a number of people around him when it was a rare thing for any veterinary surgeon to gather crowds of people. *I found him an ideal officer for the rural service.* The thoroughness with which he attends to every detail of the work is a great characteristic feature of the man. Since he retired soon after this period to which these incidents relate, I could not get many opportunities to come in closer contact with this great person. In fact when we met each other again for a brief period just a few days prior to his retiring from the department, I expressed to him how disappointed I felt as his retirment from the service would deprive me of the pleasure of hearing from him the fine quotations from the Tamil literature. I have always felt it a great entertainment in literature to spend a few hours in conversation with him.

When the nucleus of the present Madars branch of The All India Veterinary Association and The All India Veterinary Association itself was started in Vellore in 1920 as the Vety. Graduates' Association, I had the previlege of writing to Mr. Mudaliar requesting him for his blessings and co-operation in our new efforts. Even in his retirement he was kind enough to write to me encouragingly and showing the practical sympathy of his by enrolling himself as a member remitting the amount of subscription following his reply. His practical advice and blessings were of great use and inspiration to the organisers. Later on when the first Provincial Veterinary Conference was held in Madras in 1921, on behalf of the Reception committee, I requested him to preside over the conference and guide the deliberations with his mature experience and advice. He heartily responded to the call of duty as he rightly considered it to be. He did not mind the

fatigue and the expenses of the long and tedious journey from his distant home to Madras in the rainy and inclement weather of Madras at the time. The hearty reception with which he was welcomed at Madras as he got down from the train was a positive proof of the appreciation of his numerous qualities for such a leadership. The large number of delegates paid their reverential regards to the venerable president. The presidential address deliverd by him at the conference stands even to-day unrivalled for its masterly style and treatment of the various important matters of veterinary interests. His guidance at the conference with his ripe experience was immensely appreciated by the profession. During the intervals and till late in the nights, batches of delegates would go to his temporary residence as people would go to the temples and shrines and stop there long, hearing to his enchanting exposition of interesting literary pieces from Tamil literature. Long before this period, he had retired from Govt. service and as such he had no official power to command such large audiences at all hours of the day and night. Still this illustrates that the *magnetic personality, charming manners* and *erudite scholarly attainments of Mr. Mudaliar* can always draw to himself all lovers of these qualities.

Many of the practical suggestions given by him at the conference as a result of his vast experience and knowledge of the needs of the country, have since borne fruit. Three years later when the all India Veterinary Association resolved to start the Indian Veterinary Journal as its official organ for the advancement of the veterinary science in this country, his advice was again sought and it was freely given. He also became one of the earliest subscribers to the journal thus setting a good example to others. At a time when the members of the profession in the service were suffering from numerous disabilities and disadvantages and when their petitions, prayers and memorials brought no tangible relief, Mr. Mudaliar quite courageously espoused their cause and used his moral influence in their favour. One of the results was the teaching staff of

the Madras Veterinary College, especially in the subordinate service, received the teaching allowances. The profession in the country has many times felt that his ripe experiance and keen interest even during his old age in all that concerns the rural welfare should be made available when these problems come up for discussion. It is only the consideration of his old age and the consequent discomforts of travel and other things that have stood in the way of his being requested to come out once again and preside over the deliberations of the All India Veterinary Conference. The Indian Veteinary Profession is rightly proud of Mr. Mudaliar and is grateful to him for his keen interest in its welfare even during his retirement and old age when many others would like to take complete rest ignoring their own duty to the profession. His life is a splendid example in every respect to others to follow especially in the matter of plain living and high thinking

On an auspicious occasion like this, on behalf of the Indian Veterinary Profession and on my own behalf, I feel it great previlage and pleasure to convey the warm greetings to the venerable Rao Sahib wishing him a return of many more Birth-Day Celebrations, and a healthy, happy and peaceful life.

---

## Mr. MUDALIAR - A Short Sketch :

Reprint from The Indian Veterinary Journal
Vol. III No. 1 [1936]

We are conscious that in trying to record the life of Rao Sahib M. R. Ry., V. P. Subramania Mudaliar Avergal, we have taken upon ourselves the very difficult task of presenting to our readers the life of a gentleman, whose versatile genius, erudite scholarship and spotless character should have made him known to the world much better than is his lot to-day. But the task is not without its pleasant and inspiring side and we most willingly set ourselves to the task.

Born of a rich Vellala family in the district of Tinnevelly, Madras Presidency, on the 14th August, 1857, Mr. Mudaliar was blessed with all the worldly advantages that wealth could procure and unlike many in similar circumstances it had made him humble and pious, devoted and dutiful, upright and honest and highly cultured and conscientious. He was educated in the Hindu College, Tinnevelly, and subsequently in the Christian College, Madras. Finishing his education in 1879, he joined the old Agricultural College at Saidapet, near Madras, in 1881 and taking his diploma in 1885, he was entertained in the same year as Cattle Disease Inspector. In 1894 he was deputed by the Government of Madras to undergo training in the Bombay Veterinary College and *he came out of that College in flying colours in 1895 passing in first class carrying away three prizes and a medal.*

Mr. Mudaliar's record of work from the very beginning of his service was, to say the least, brilliant. It would be too numerous to mention here all the excellent remarks left on official records by successive heads of departments and civilian officers under whom he had served. *"Bears a very high charactor"; "Most capable and energetic"; "Extremely hard working and trustworthy"; "Cannot speak too highly of his work"; "Zealous and efficient"; "Absolutely honest"; "The success of the inoculation work has been largely due to him" "He has been responsible for nearly one-half of the total number of cattle inoculated by this Department during the year";* are some of the opinions of persons like *Lt. Col. J. Mills, Major J. D. E. Holmes, Lt. Col. W. D. Gunn and others.*

Mr. Mudaliar rose by degrees from the lowest rung of the official ladder by the sheer force of his merit, with none to back him up excepting his own good work in the field, until in 1911, he was raised as a Deputy Superintendent of the Civil Veterinary Department, Madras. He held office in that capacity for nearly four years and retired from service on the 14th August, 1915, *i. e.*, exactly on his 59th birthday after an

approved service of nearly 30 years under the Government of Madras. Mr. F. Ware, the then Chief Superintendent, Civil Veterinary Department, Madras, wrote in the Administration Report for 1915—16 "*The Department and the public generally have suffered a loss through the retirement of M. R. Ry. V. P. Subramania Mudaliar Avergal.*"

We have narrated till now his official career; but his larger field of work, nay of fame, lay in the domain of Tamil literature. From his very early days he proved to be an ardent admirer of all that is ancient and of exquisite beauty in that language. As age advanced the little spark of love for that language grew into a flame until we find Mr. Mudaliar in the prime of his life a poet of extraordinary merit blending the richness of thought of the East and of the refreshing delicacy of the West.

We wish we could take our readers through his works to give them a glimpse of that panorama of thought and language that has held many a reader spell-bound. We fear we will be failing in our duty if we do not impress on our readers the eminence of this professional colleague in the poetic world.

Mr. T. Ponnambalam Pillai, Retired Excise Commissioner, Government of Travancore. reviewing "Akalikai Venba" one of the works of Mr. Mudaliar wrote in the "Justice" of 18th April, 1921, as follows: "*The plot of the poem is the well-known story of the seduction of Akalikai by Indra, the king of the celestials. Though it is trite, the way in which the life and shape have been given to it, and the delicate manner in which the tragic end has been contrived, go to show that such a consummation could have been brought about only by a poet of Mr. Subrammania Mudaliar's imagination and calibre.*

Pandit Maha Mahopadyaya Swaminatha Iyer, an acknowledged celebrity of incomparable talents in the Tamil world, writing on the same book says, "The work reveals

various beauties not hitherto found in Tamil literature and will, I believe, establish your fame for all time. I am going through the rare work very slowly. Though the diction is clear, I am tempted to read every stanza at least twice. The stanzas are beautifully formed. They exhibit your literary ability, your erudition, your capacity for literary composition and your innate love for the Tamil language. Though the work is a small one, it will arouse a big stir. The work is the quintessence of beauty. I am sure that those well read in Tamil will derive from this a pleasure not hitherto expected. My conviction is that such a beautiful poem is rare to come across."

His tamil translation of Milton's Paradise Lost has earned the approbation of no less a person than that greatest European Tamil Scholar, Dr. G. U. Pope, who said "We have no words but of hearty commendation for the way in which the first instalment of the work has been completed..............We feel bound to say, after an exceedingly minute and careful study of the lines, that the translator has succeeded to a very great......indeed a surprising......degree............" The writer's prose tamil style is remarkably good."

Rev. T. Walker, M. A., C. M. S., writing on the same work said "I have heard of its excellence from several sources..............I can recommend your rendering most heartily as being both true poetry and a faithful representation of the original."

There are nearly a dozen of his works in Tamil, each great in its own way and praised by countless admirers. Even as a Tamil scholar he did not forget the profession he had chosen to serve. In the interest of the Tamil reading public he had issued many a professional pamphlet such as "Preventive inoculation and its uses," "Improvement of the local cattle," "Methods of improving the milch cattle" and at the instance of the Government had translated "Indian stock owner's manual" and "The more deadly forms of cattle diseases in India."

It is no wonder then that such an erudite scholar of Tamil literature did not escape the attention of "Madura Tamil Sangam," an academy of very great antiquity and of greater repute. He was an examiner of their Literary Board for a number of years. Not content with all these manifold activities, he waited for an opportunity to serve the public on a greater scale. Soon after retirement he identified himself with all institutions of Local Self-Government and was a member, Vice-President and President respectively of the Taluk Board of Tinnevelly. He was also on the District Board and on the District Educational Council. We believe even now he is the President of the Bench Court of Tenkasi in the District of Tinnevelly.

The profession was not slow to do him the honour that lay in its power. He was the first elected President of the Madras Veterinary Graduates Coference held in 1921, when he gave utterance to thoughtful adress full of sound advice to the profession and indicating the lines on which progress should proceed.

For all these benefactions of service extending over four decades, Mr. Mudaliar was honoured by the Government with the title of Rao Sahib on the last New Year day. It had come late to him and is certainly much less than his deserts, but is none the less welcome. We thank the Government for this belated recognition of an individual who had laboured hard in a profession which does not usually receive the recognition it deserves. We congratulate Mr. V. P. S. (to use the familiar and endearing initials by which he is popularly known amongst his professional colleagues) on the well-merited honour conferred on him by the Government which he had served so loyally and so long. We wish him many more years of full enjoyment of health in his palatial residence at Vellakal and earnestly hope that greater honours await him at the hands of the Government.

# விழாவிற்கு
# நன்கொடை உதவியவர்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் திருவாவடுதுறைப் பண்டார சன்னிதிகள் | 300 | 0 | 0 |
| ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் தருமபுரம் பண்டார சன்னிதிகள் | 50 | 0 | 0 |
| ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், திருப்பனந்தாள் மடம் | 50 | 0 | 0 |

## திருநெல்வேலி - பாளையங்கோட்டை

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ திவான் பகதூர் சர். குமாரசாமி ரெட்டியார் Kt. (Ex-Minister to the Govt. of Madras) அவர்கள் | 25 | 0 | 0 |
| ,, T. K. சிதம்பரநாத முதலியார் ,, (Ex Commissioner H.R.E. Board) | 25 | 0 | 0 |
| ,, N. சங்கரநாராயண பிள்ளையன் ,, | 35 | 0 | 0 |
| ,, மேடைதளவாய் T. குமாரசாமி முதலியார் ,, | 25 | 0 | 0 |
| ,, ராவ்சாஹெப் P. ஆவுடையப்ப பிள்ளை ,, | 20 | 0 | 0 |
| ,, ஹமீட் மீயாகான் சாகிப் (ஹிலால் பிரஸ்) ,, | 20 | 0 | 0 |
| ,, T. S. ஸ்ரீனிவாசராவ் (புதூர் ஹௌஸ்) ,, | 15 | 0 | 0 |
| ,, தளவாய் திருமலையப்ப முதலியார் ,, | 10 | 0 | 0 |
| ,, அலெக்சாண்டர் ஞானமுத்து ,, (Principal M. D. T. Hindu College) | 3 | 0 | 0 |
| ,, V. கோமதிநாயகம் பிள்ளை ,, | 5 | 0 | 0 |
| ,, V. பொன்னுசாமிப் பிள்ளை ,, | 3 | 0 | 0 |
| ,, K. ஸ்ரீனிவாச அய்யங்கார் ,, | 2 | 0 | 0 |
| ,, S. லக்ஷ்மி நரசிம்ம அய்யர் ,, | 2 | 0 | 0 |
| ,, T. K. சண்முகசுந்தர முதலியார் ,, | 3 | 0 | 0 |
| ,, Dr. R. V. சொக்கலிங்கம் ,, | 2 | 0 | 0 |
| ,, A. N. மகரபூஷணம் அய்யங்கார் ,, | 3 | 0 | 0 |
| ,, T. R. கணபதிராம அய்யர் ,, | 5 | 0 | 0 |
| ,, V. திருவரங்கம் பிள்ளை ,, | 5 | 0 | 0 |

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| புரோப்ரைட்டர் ஜெயலக்ஷ்மி பவன் | | 2 | 0 | 0 |
| ஸ்ரீ V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள் | | 1 | 0 | 0 |
| ,, M. சோமசுந்தர முதலியார் | ,, | 2 | 0 | 0 |
| ,, S. சிவக்கொழுந்து முதலியார் | ,, | 2 | 0 | 0 |
| ,, L. செல்லையா பிள்ளை | ,, | 2 | 0 | 0 |
| ,, S. நடராஜன் | ,, | 1 | 0 | 0 |
| ,, M. பொன்னம்பலநாத முதலியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, P. L. பரமசிவன் பிள்ளை | ,, | 5 | 0 | 0 |
| ,, K. ஸ்ரீனிவாச ராகவ அய்யங்கார் | ,, | 5 | 0 | 0 |
| ,, T. V. ஆறுமுகம் பிள்ளை | ,, | 2 | 0 | 0 |
| ,, A. V. முத்தைய பிள்ளை | ,, | 7 | 0 | 0 |
| ,, C. சுப்பிரமணிய பிள்ளை | ,, | 1 | 0 | 0 |
| ,, Dr. K. சுப்பிரமணிய பிள்ளை | ,, | 2 | 0 | 0 |
| ,, V. V. ஸ்ரீனிவாசச்சாரியார் | ,, | 2 | 0 | 0 |

ஆழ்வார்திருநகரி

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ பெரியன் ஸ்ரீனிவாச அய்யங்கார் | ,, | 25 | 0 | 0 |
| ,, ,, தம்பு திருவேங்கடத்தய்யங்கார் | ,, | 5 | 0 | 0 |
| ,, ,, வெங்கடாச்சாரியார் | ,, | 5 | 0 | 0 |

ஸ்ரீவைகுண்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ S. T. பொன்னம்பலநாத முதலியார் | ,, | 20 | 0 | 0 |
| ,, S. T. ஆதித்த நாடார் | ,, | 5 | 0 | 0 |

தூத்துக்குடி

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ A. C. S. கந்தசாமி ரெட்டியார் | ,, | 25 | 0 | 0 |
| ,, S. V. நல்லபெருமாள் பிள்ளை | ,, | 25 | 0 | 0 |
| ,, E. வெண்ணிமாலைப் பிள்ளை | ,, | 3 | 0 | 0 |
| ,, A. C. பால் நாடார் | ,, | 10 | 0 | 0 |

ஸ்ரீவில்லிபுத்தூர்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ R. G. நல்லகுத்தாலம் பிள்ளை | ,, | 5 | 0 | 0 |

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|

### இடைகால்

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| ஸ்ரீ A. ராமலிங்க முதலியார் | அவர்கள் | 50 | 0 | 0 |
| ,, A. ராமசாமி முதலியார் | ,, | 2 | 0 | 0 |

### வெள்ளகால்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ V. P. குற்றாலலிங்க முதலியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, V. S. சிவக்கொழுந்து முதலியார் | ,, | 5 | 0 | 0 |
| ,, கந்தசாமி முதலியார் | ,, | 5 | 0 | 0 |
| ,, V. P. ராமலிங்க முதலியார் | ,, | 5 | 0 | 0 |

### ஆழ்வார்குறிச்சி

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ M. P. M. ராமலிங்க முதலியார் | ,, | 25 | 0 | 0 |
| ,, N. T. சுப்பிரமணிய முதலியார் | ,, | 25 | 0 | 0 |

### அம்பாசமுத்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ K. A. சிவஞானம் பிள்ளை | ,, | 3 | 0 | 0 |
| ,, V. S. ஆறுமுகம் பிள்ளை (Retired Agent S. I Bank) | ,, | 10 | 0 | 0 |

### தென்காசி

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ S. V. பழனியப்ப முதலியார் | ,, | 3 | 0 | 0 |
| ,, V. S. சண்முகநாத முதலியார் | ,, | 10 | 0 | 0 |
| ,, கானுகோ T. M. ராஜகோபால் பிள்ளை | ,, | 3 | 0 | 0 |
| ,, ,, T. M. நமசிவாயம் பிள்ளை | ,, | 3 | 0 | 0 |
| ,, ஹசன் கனி சாகிப் | ,, | 3 | 0 | 0 |
| ,, K. V. P. ஸ்ரீனிவாசநாயுடு | ,, | 2 | 0 | 0 |
| ,, T. S. குற்றாலலிங்கம் பிள்ளை (Retired Sub Judge) | ,, | 5 | 0 | 0 |

### சொக்கநாதன்புத்தூர்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ C. K. கல்யாணசுந்தர முதலியார் | ,, | 10 | 0 | 0 |

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| **கோயமுத்தூர்** | | | | |
| ஸ்ரீ வெள்ளியங்கிரி கவுண்டர் | அவர்கள் | 10 | 0 | 0 |
| கோவைத்தமிழ்ச் சங்கம் | ,, | 7 | 2 | 0 |
| **மதுரை** | | | | |
| ஸ்ரீ ராமனுதபுரம் ராஜா (தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம்) | ,, | 50 | 0 | 0 |
| ,, T. C. ஸ்ரீனிவாச அய்யங்கார் (உபதலைவர் மதுரைத் தமிழ்ச்சங்கம்) | | 25 | 0 | 0 |
| ,, E. M. கோபால கிருஷ்ணக் கோன் | ,, | 10 | 0 | 0 |
| **சென்னை** | | | | |
| ஸ்ரீ P. ராமசாமி அய்யங்கார் (நவயுகப்பிரசுரம்) | ,, | 101 | 0 | 0 |
| ,, ராவ் சாஹெப், S. வையாபுரிப் பிள்ளை அவர்கள் & P. N. அப்புசாமி அய்யர் | ,, | 5 | 0 | 0 |
| ,, S. கல்யாணசுந்தரம் அய்யர் (S/O Dr. சாமிநாத அய்யர்) | | 5 | 0 | 0 |
| ,, ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) | ,, | 5 | 0 | 0 |
| ,, S. சச்சிதானந்தம் பிள்ளை | ,, | 5 | 0 | 0 |
| ,, வைத்தியநாத முதலியார் | ,, | 3 | 0 | 0 |
| ,, ராஜு முதலியார் | ,, | 10 | 0 | 0 |
| ,, செங்கல்வராய பிள்ளை | ,, | 5 | 0 | 0 |
| ,, R. P. சேதுப் பிள்ளை | ,, | 5 | 0 | 0 |
| ,, P. S. ஆச்சாரியார் | ,, | 2 | 0 | 0 |
| **கும்பகோணம்** | | | | |
| ஸ்ரீ மகோ மகோ பாத்தியாய M. V. ராமானுஜாச்சாரியார் | ,, | 5 | 0 | 0 |
| **வேலூர்** | | | | |
| ஸ்ரீ V. T. பழனியப்ப முதலியார் (Sub Judge) | | 75 | 0 | 0 |

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| ஸ்ரீ S. ஞானதேசிகம் பிள்ளை (Dt. Registrar) | ,, | 3 | 0 | 0 |
| ,, V. T. சுப்பையா முதலியார் (Asst. Director of Agriculture) | ,, | 10 | 0 | 0 |
| **கர்னூல்** | | | | |
| ஸ்ரீ M. S. சாஸ்த்திரி (Veterinary Surgeon) | ,, | 3 | 0 | 0 |
| **திருவனந்தபுரம்** | | | | |
| ,, S. தேசிக விநாயகம் பிள்ளை, புத்தேரி | ,, | 4 | 0 | 0 |
| ,, T. லக்ஷ்மண பிள்ளை, திருவனந்தபுரம். | ,, | 5 | 0 | 0 |
| **அண்ணாமலை நகர்** | | | | |
| ஸ்ரீ பண்டிதமணி கதிரேசன் செட்டியார் | ,, | 5 | 0 | 0 |
| ,, S. S. பாரதி | ,, | 10 | 0 | 0 |
| **நல்லாடை** | | | | |
| ஸ்ரீ திவான் பஹதூர் P. சுப்பையா முதலியார் (Retired Dt. Judge) | ,, | 10 | 0 | 0 |
| **திருச்சி** | | | | |
| ஸ்ரீ நடேச முதலியார் | ,, | 5 | 0 | 0 |
| | | 1324 | 2 | 0 |

RAO SAHIB

V. P. SUBRAMANIA MUDALIAR'S

# 80th Birthday Celebration Committee
# Tinnevelly

**Balance Sheet.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| By | Donations ... ... | Rs. | 1,262 | 2 | 0 | | | | |
| To, | Printing charges | Rs. | | | | 42 | 13 | 0 |
| „ | Silver Casket | Rs. | | | | 65 | 14 | 0 |
| „ | Photo | Rs. | | | | 13 | 0 | 0 |
| „ | Postage | Rs. | | | | 27 | 3 | 3 |
| „ | Stationery | Rs. | | | | 1 | 15 | 0 |
| „ | Miscellaneous | Rs. | | | | 3 | 0 | 6 |
| „ | Dr. Swaminatha Iyer's Batta | Rs. | | | | 75 | 14 | 0 |
| „ | Meals | Rs. | | | | 34 | 13 | 0 |
| „ | Travelling Expenses | Rs. | | | | 55 | 14 | 0 |
| „ | Garland (lace & Flower) | Rs. | | | | 10 | 8 | 0 |
| „ | Decoration | Rs. | | | | 3 | 0 | 0 |
| „ | Pansupari | Rs. | | | | 3 | 4 | 0 |
| „ | Pandal | Rs. | | | | 3 | 1 | 0 |
| „ | Sweeping & Cleaning | Rs. | | | | 4 | 4 | 0 |
| „ | Lighting Charges | Rs. | | | | 3 | 0 | 0 |
| „ | Cash on Hand | Rs. | | | | 23 | 11 | 3 |
| „ | Cash with Bank (S. I. Bank) | Rs. | | | | 890 | 15 | 0 |
| | | Rs. | 1,262 | 2 | 0 | 1,262 | 2 | 0 |

Verified:

T. M. SANKARANARAYANA PILLAI,
*Certified Auditor.*
*11-10-37*

V. S. ARUMUKHAM PILLAI,
*Treasurer.*
*10-9-37*

**Amount with the South India Bank Ltd., Tinnevelly.**

| | | | |
|---|---|---|---|
| As per Balance Sheet on Page 110 | | Rs. 890 15 0 | |
| Donations as per list on Pages 105-109 | Rs. 1324 2 0 | | |
| *Less* Do. as per Balance Sheet on Page 110 | Rs. 1262 2 0 | | |
| Donations received subsequently | | Rs. 62 0 0 | |
| Interest for Andus 1113 & 1114 | | Rs. 22 7 0 | 975 6 0 |
| Cash on hand ... | | | Rs. 23 11 3 |
| | | | Rs. 999 1 3 |

V. S. ARUMUKHAM PILLAI,
*Treasurer.*

இம்பீரியல் பிரஸ்
திருநெல்வேலி